වාර්ෂික වාර්තාව

ஆண்டு அறிக்கை

# Annual Report

# 2012



**ශ්‍රී ලංකා රාජ්‍ය ඖෂධ නීතිගත සංස්ථාව**

**இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்**

**State Pharmaceuticals Corporation of Sri Lanka**

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| எமது நோக்கு, பணி, இலக்குகள் மற்றும் சுலோகம் | 01 |
| நிதி முனையம்சங்கள் | 02 |
| கூட்டாண்மைச் சமூகப்பொறுப்பு | 03 |
| பணிப்பாளர் சபை மற்றும் கூட்டாண்மைத் தகவல் | 04-05 |
| தலைவரின் அறிக்கை | 06 |
| முகாமைப் பணிப்பாளரின் நிதி மீளாய்வு | 07-08 |
| பணிப்பாளர்களின் அறிக்கை | 09-10 |
| கணக்காய்வுக் குழுவின் அறிக்கை | 11 |
| நிதிநிலைக் கூற்று | 12 |
| உரிமைப்பங்கில் மாற்றங்கள் பற்றிய கூற்று | 13 |
| வருமானக் கூற்று | 14 |
| ஒசுசல தொழிற்பாடுகளின் வருமானக் கூற்று | 15-16 |
| காசுப்பாய்வுக் கூற்று | 17 |
| கணக்கீட்டுக் கொள்கைகள் | 18-26 |
| கணக்குகளுக்கான குறிப்புகள் | 27-53 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 54-79 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை பற்றிய தலைவரின் கருத்துரைகள் | 80-87 |
| மனிதவளப் பகுப்பாய்வு | 88 |
| பத்து ஆண்டுச் சுருக்கம் | 89 |
| விற்பனை வலையமைப்பு | 90 |


***உங்கள் ஆரோக்கியமே எமது நோக்கம்***

## எமது நோக்கு

இலங்கை ஆரோக்கியம் மிக்கதும் துடிப்புள்ளதுமான தேசமாக எழுச்சி பெறுவதற்குப் பங்களித்தல்.

## எமது பணி

இனப்பொதுவியல்பான மருந்துகள் பயன்படுத்தப்படுதலை ஊக்குவிக்கின்ற அதேவேளையில், பாதுகாப்பானதும் பயனுறுதியுள்ளதும் உயர் தரமுள்ளதுமான மருந்து உற்பத்திப் பொருள்களையும் ஆரோக்கியச் சேவைகளையும் நியாயமான விலையில் வழங்குவதன்மூலம் இலங்கையின் பொதுமக்களுக்குச் சேவையாற்றுகின்ற முன்னணிவகிக்கும் ஆரோக்கிய நல நிறுவனமாகத் திகழ்தல்.

## எமது இலக்குகள்

மக்களுக்கான சேவைகள்தான் முதன்மையானவை
தரமும் பாதுகாப்பும்
நாணயத்தை ஒருபோதும் விட்டுக்கொடுப்பதில்லை
நம்பகமான பங்காளியும் செயல்விளைவுள்ள அணி ஆட்டக்காரரும்
உன்னத செயலாற்றுகையில் பேரார்வம்
புத்தாக்கமே உயிர்நாடி

## எமது சுலோகம்

உங்கள் ஆரோக்கியமே எமது நோக்கம்.

## இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்

### நிதி முனையம்சங்கள்

| விவரம் | 2012<br>ரூபா ' 000 ' | வேறுபாடு<br>(%) | 2011<br>ரூபா ' 000 ' | 2010<br>ரூபா ' 000 ' |
|---|---|---|---|---|
| வருவாய் SPC | 5,001,673 | 4.07 | 4,806,170 | 4,197,759 |
| DHS க்கு வழங்கல்கள் | 16,608,492 | 32.14 | 12,569,290 | 10,968,571 |
| **மொத்த வருவாய்** | **21,610,165** | **24.37** | **17,375,460** | **15,166,330** |
| மொத்த வர்த்தக இலாபம் SPC | 991,541 | **(4.98)** | 1,043,453 | 995,371 |
| மொத்த மிகை DHS | 1,193,214 | 52.83 | 780,735 | 688,145 |
| **மொத்த மிகை** | **2,184,756** | **19.77** | **1,824,188** | **1,683,516** |
| பிற வருமானம் | 15,105 | **(34.98)** | 23,231 | 20,414 |
| நிருவாகச் செலவுகள் | (654,910) | (6.66) | (614,019) | (605,475) |
| பிற தொழிற்பாட்டுச் செலவுகள் | (745,230) | (51.28) | (492,631) | (285777) |
| நிதிச் செலவு | (17) | 99.54 | (3,661) | (17734) |
| மேலதிகப்பற்று வட்டி | (339,035) | 19.13 | (419,235) | (315070) |
| நிதி வருமானம் | 3,944 | (3.85) | 4,102 | 3,900 |
| **வரிக்குமுன் இலாபம்** | **464,612** | **44.30** | **321,975** | **483,774** |
| திறைசேரி வரி | - | - | 15,000 | 60,000 |
| வரிவிதிப்பு | 205,282 | (10.15) | 228,473 | 0 |
| **மொத்த விரிவான வருமானம்** | **245,048** | **172.80** | **89,827** | **179,867** |
| நிறுத்திவைத்த ஈட்டல்கள் | 3,622,539 | 7.26 | 3,377,491 | 3,287,664 |
| பங்களித்த மூலதனமும் ஒதுக்கமும் | 125,117 | - | 125,117 | 125,116 |
| நடைமுறையற்ற சொத்துக்கள் | 1,709,018 | 6.45 | 1,605,438 | 1,561,496 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 13,269,595 | 52.13 | 8,722,712 | 7,881,607 |
| நடைமுறையற்ற பொறுப்புக்கள் | 124,558 | 18.53 | 105,082 | 113,350 |
| நடைமுறைப் பொறுப்புகள் | 11,106,399 | 65.26 | 6,720,460 | 5,916,973 |
| தேறிய நடைமுறைச் சொத்துகள் | 2,163,196 | 8.04 | 2,002,252 | 1,964,634 |
| **வீதங்கள்** | | | | |
| மொத்த இலாப வீதம் (%) SPC | 19.82% | | 21.71% | 23.71% |
| மொத்த இலாப வீதம் (%) DHS | 7.18% | | 6.21% | 6.27% |
| விற்பனைக்கான மொத்த மிகை (%) | 10.1% | | 10.5% | 11.1% |
| ஈடுபடுத்திய மூலதனம் மீது வரவு (%) | 21.3% | | 21.1% | 23.8% |
| வட்டிக் காப்பு (மடங்குகள்) | 2.4 | | 1.8 | 2.4 |
| மொத்தச் சொத்துகளுக்கு பங்குநிலை (மடங்குகள்) | 1:4 | | 1:2.9 | 1:2.8 |
| ஈடுபடுத்திய மூலதனம்மீது விற்பனைவரவு (மடங்கு) | 5.7:1 | | 4.9:1 | 4.4:1 |
| நடைமுறை விகிதம் (மடங்கு) | 1.19:1 | | 1.31:1 | 1.33:1 |
| திரவநிதி விகிதம் (மடங்கு) | 1.02:1 | | 0.86:1 | 0.7:1 |
| இருப்பு புரள்வு விகிதம் (மடங்கு) | 3.57 | | 3.79 | 3.65 |
| **ஏனைய தகவல்கள்** | | | | |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 785 | | 755 | 747 |
| ஊழியரொருவருக்கான ஈட்டல் (ரூ.) | 591.9 | | 426.5 | 647.6 |
| ஊழியரொருவருக்கான விற்பனை (ரூ.) | 27,529 | | 23,014 | 20,303 |

## கூட்டாண்மைச் சமூகப் பொறுப்பு









அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் வாழ்க்கையை முன்னேற்றுவதற்கும் மேலும் ஆரோக்கியமான உலகை உருவாக்குவதற்கும் தீவிரமாகப் பங்களிக்கவேண்டுமென உறுதியாக நம்புகின்றது.

கடந்த நான்கு தசாப்தங்களில் SPC வறுமைப்பட்ட சனசமூகங்களின் வீட்டுவாயிலில் ஆரோக்கியப் பராமரிப்பை வழங்குவதற்கான புத்தாக்க வழிகளை உருவாக்குவதில் நெடுந்தூரத்தைக் கடந்துள்ளது.

2012ஆம் ஆண்டின்போது SPC சேவா வனிதா அலகின்மூலம் மன்னாரில் சுகாதார முகாமொன்றை ஒழுங்குசெய்தது. அது அப்பிரதேசத்திலுள்ள ஏறக்குறைய இரண்டாயிரம் மக்களுக்காக சிலாவத்துறை – சவரியாபுரம் வித்தியாலயத்தில் 2012.09.29ஆந் தேதியன்று நடத்தப்பட்டது.

சுகாதார முகாமில் வறுமைப்பட்டவர்கள் மத்தியில் சீனி, பருப்பு, மா மற்றும் டின் மீன் ஆகியவற்றை உள்ளடக்கிய ரூ.252,750/- பெறுமதியான அத்தியாவசிய உணவுப்பொருட் பொதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. சுகாதார முகாமில் மருந்துகளும் நன்கொடையாக வழங்கப்பட்டன.

2012ஆம் ஆண்டில் நாடெங்கிலும் நடத்தப்பட்ட பல்வேறு சுகாதார முகாம்களில் ரூ. 957,683/- பெறுமதியான மருந்துகள் நன்கொடையாக வழங்கப்பட்டன.

மேலைத்தேய மருந்துகளைப் பயன்படுத்துவதில் வயதுவந்தவர்களின் அறிவை அதிகரிக்கும் பொருட்டு அவர்களுக்காக "மருந்துகளைப் பகுத்தறிவுடன் பயன்படுத்துதல்" பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. ஒரு நிகழ்ச்சி இராணுவ வைத்தியசாலையில் நடத்தப் பட்ட அதேவேளையில் மற்றொன்று குருணாகலில் அம்மாவட்டத்தின் ஆசிரியர்களுக்காக நடத்தப் பட்டது. இந்நிகழ்ச்சிகள், அவற்றில் பங்கு பற்றியவர்கள் மருந்தாக்கல் துறையிலுள்ள தொழில் வல்லுனர்களிடம் மருந்துகளின் பயன்பாடு பற்றிக் கேள்விகள் கேட்பதற்கான அரியதொரு வாய்ப்பை வழங்கின.

## பணிப்பாளர் சபை மற்றும் கூட்டாண்மைத் தகவல்

### பணிப்பாளர் சபை

#### பேராசிரியர் எஸ்.டீ. ஜயரத்ன - தலைவர்

பேராசிரியர் எஸ்.டீ. ஜயரத்ன பொது மருத்துவத்தில் விசேட வைத்தியராவார். அவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக மருத்துவத் துறையில் பேராசிரியரும், கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் கௌரவ ஆலோசக வைத்தியரும், கொழும்பு பொலிஸ் வைத்தியசாலையில் வருகைதரும் ஆலோசக வைத்தியருமாவார்.

அவர் இலங்கை அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளராக 2005 திசெம்பர் முதல் 2010 மே 13ஆம் திகதிவரை பதவி வகித்தார். 2010 மே 14ஆம் திகதி முதல் அவர் அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார். தற்போது அவர் அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் தலைவராகவும்/முகாமைத்துவப் பணிப்பாளராகவும் பணிபுரிகின்றார்.

#### திரு. ஆர்.எல். தர்மதிலக – முகாமைத்துவப் பணிப்பாளர்

திரு. ஆர்.எல். தர்மதிலக கிளயார் மவுன்ட் ஹோட்டல் கல்லூரியில் உணவு வழங்கல், ஹோட்டல் முகாமைத்துவத்தில் டிப்ளோமா பட்டத்தைக் கொண்டவரும் ஹோட்டல் முகாமைத்துவம் மற்றும் சுற்றுலாத்துறைக் கைத்தொழிலில் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் 26 ஆண்டுகளுக்கும் கூடிய அனுபவத்தைக்கொண்ட ஹோட்டல்துறை தேர்ச்சிமிக்கவருமாவார்.

அவர் 2010 மே மாதம் முதல் அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராக நியமிக்கப்படுவதற்கு முன்னர் ஒரு வருட காலமாக அதன் செயலாற்றல் பணிப்பாளராகச் சேவையாற்றினார். அவர் அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினருமாவார். திரு. தர்மதிலக ஒரு சமாதான நீதவான் (அகில இலங்கை) ஆவார்.

#### திரு. மேர்வின் குணசேன – பணிப்பாளர்

திரு. மேர்வின் குணசேன, எல்.எல்.பி. (சட்ட இளமாணி), எம்.ஏ. (சமூகவியல்) பட்டங்களைப் பெற்றுள்ளதுடன் கொழும்பு மற்றும் மாத்தறை சட்டத்தரணிகள் சங்கத்தின் அனுபவமிக்க ஒரு சட்டத்தரணியுமாவார். அவர் மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர், சமூகப் பாதுகாப்புச் சபையின் பிரதிப் பொது முகாமையாளர் (தொழிற்பாடு), மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் மற்றும் கமத்தொழில், கமநல காப்புறுதிச் சபையின் தலைவர் ஆகியவை உள்ளிட்ட பல பதவிகளில் நியதிச்சட்ட சபைகளில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பணிபுரிந்துள்ளார்.

#### திரு. எஸ்.எம்.என். லலித் சேனாநாயக்க – பணிப்பாளர்

திரு. லலித் சேனாநாயக்க இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் தோழமை உறுப்பினராவார். அவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் பொது நிர்வாகத்தில் விசேட பட்டம், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவக் கற்கைகளில் உயர் தேசிய டிப்ளோமா ஆகிய பட்டங்களைப் பெற்றுள்ளார். திரு. சேனாநாயக்க 2010 மே முதல் அ.ம.கூ.வின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். அவர் தற்போது பினான்சியல் கொன்சல்டன்ஸ் அன் அலைட் சேர்விசஸ் (பிரை) லிமிரெட் மற்றும் மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகம் ஆகியவற்றின் பணிப்பாளராகவும் பணிபுரிகின்றார். அவர் டியுடர் வி. பெரேரா அன் கோ பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் சிரேஷ்ட பங்காளராவார்.

அவர் அரச மரக் கூட்டுத்தாபனம், இலங்கை உரக் கம்பனி லிமிரெட் மற்றும் நெல் சந்தைப்படுத்தல் சபை உள்ளிட்ட பல நியதிச் சட்ட சபைகளினதும் கூட்டுத்தாபனங்களினதும் சபைகளில் பல்வேறு சந்தர்ப்பங்களில் சேவையாற்றியுள்ளார்.

#### பேராசிரியர் ரஞ்ஜனி கமகே – பணிப்பாளர்

இவர் இலங்கை தேசிய வைத்தியசாலையின் நரம்பியல் நிறுவகத்தின் சிரேஷ்ட நரம்பியல் ஆலோசக நிபுணரும், கொழும்பு பல்கலைக்கழக பட்டப்பின் கற்கை மருத்துவ நிறுவகத்தின் வருகைதரும் பேராசிரியருமாவார். அவர் இலங்கை நரம்பியலாளர் சங்கத்தின் தாபகத் தலைவரும் வலிப்புநோய் செயலணியின் தலைவரும், வலிப்புநோய்க்கு எதிரான அமைப்பின் தலைவரும் ஆவார். அத்துடன் அவர் இலங்கை மருத்துவப் பேரவையின் பேரவை உறுப்பினரும் தேசிய கல்வி ஆணைக்குழுவின் உறுப்பினருமாவார்.

#### திரு. எச்.எம். அஜித் சந்திர – பணிப்பாளர்

இலங்கை கணக்காளர்கள் சங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினராக 28 வருடங்களுக்கும் அதிகமான அனுபவத்தைக்கொண்ட இவர், தற்போது நிதி, திட்டமிடல் அமைச்சின் திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் நாயகமாகப் பணிபுரிகின்றார். திரு. அஜித் சந்திர இலங்கை பொதுத் தொழில்முயற்சிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழுவில் நிதி மற்றும் நிர்வாகப் பணிப்பாளராகப் பதவி வகித்துள்ளார். அவர் 2003-2006 காலப்பகுதியில் உலக வங்கியினால் நிதியிடப்பட்ட பட்டதாரி மாணவர் கல்வியியல் பொருத்தமும் தரமும் மேம்படுத்தும் கருத்திட்டத்தின் நிதி முகாமையாளராகச் சேவையாற்றியுள்ளார். அவர் கொள்கை திட்டமிடல், அமுலாக்கல் அமைச்சின் பிரதம கணக்காளராகவும் சேவையாற்றியுள்ளார். திரு. அஜித் சந்திர பொது நிதி முகாமைத்துவம், கொள்வனவு முகாமைத்துவம் மற்றும் உள்ளூராட்சி நிதி முகாமைத்துவம் ஆகிய துறைகளில் பரந்த அனுபவத்தைப் பெற்றுள்ளார்.

திரு. அஜித் சந்திர ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகப் பட்டத்தைப் பெற்றுள்ளதுடன் முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகத்திலிருந்து வணிக நிர்வாகத்தில் பட்டப்பின் கற்கைப் பட்டத்தையும் (MBA) பெற்றுள்ளார். அவர் முறையே UNDP, SAARC மற்றும் ADB ஆகியவற்றினால் நடத்தப்பட்ட கருத்திட்ட நிதி, திறைசேரி முகாமைத்துவம் மற்றும் கடன் முகாமைத்துவம் பற்றிய சர்வதேச மாநாடுகளில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார்.

திரு. அஜித் சந்திர நிதியியல் முகாமைத்துவம், கொள்வனவு முகாமைத்துவம் மற்றும் கருத்திட்ட முகாமைத்துவம் ஆகிய துறைகளில் SLIDA, PGIM மற்றும் இலங்கை மன்றம் ஆகியவற்றுக்கு வருகைதரும் ஆலோசகரும் இலங்கை அரசாங்கக் கணக்காளர் சங்கத்தின் உறுப்பினரும் AAT நிறுவகத்தின் துணை உறுப்பினருமாவார்.

#### கலா. பாலித மஹிபால – பணிப்பாளர்

கலா. பீ.ஜி. மஹிபால சுகாதார சேவைகளின் பணிப்பாளர் நாயகமாவார். அவர் மருத்துவ நிருவாகத்தில் ஒரு விசேட நிபுணராக மருத்துவப் பட்டப்பின்கற்கை நிறுவகத்தின் சான்றிதழ் பெற்றவர். கலா. மஹிபால சமுதாய மருத்துவத்தில் முதுமாணி, வணிக நிர்வாகத்தில் முதுமாணி, மருத்துவ நிர்வாகத்தில் மருத்துவ கலாநிதி, பொருளியல் அபிவிருத்தி மற்றும் பொது முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமா ஆகிய பட்டங்களைப் பெற்றுள்ளார். அத்துடன் அவர் நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை, அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம், விஜய குமாரதுங்க வைத்தியசாலை, ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலை, இலங்கை போக்குவரத்து மருத்துவச் சபை, புகையிலை மற்றும் மதுபான தேசிய அதிகாரசபை ஆகியவற்றின் பணிப்பாளர் சபை உறுப்பினருமாவார்.

# கூட்டாண்மைத் தகவல்

## பணிப்பாளர் சபை

| | |
|---|---|
| பேரா. எஸ்.டி. ஜயரத்ன | தலைவர் |
| திரு. ஆர்,எல். தர்மதிலக | முகாமைப் பணிப்பாளர் |
| கலா. பீ.ஜி. மஹிபால | பணிப்பாளர் |
| பேராசிரியர் ரஞ்ஜனி கமகே | பணிப்பாளர் |
| திரு. மோர்வின் குணசேன | பணிப்பாளர் |
| திரு. லலித் சேனாநாயக்க | பணிப்பாளர் |
| திரு. எச்.எம். அஜித் சந்திர | பணிப்பாளர் |

## முகாமைக் குழு

| | |
|---|---|
| திரு. கே.எம்.டி.ஆர்.டி. தசநாயக்க | பொது முகாமையாளர் |
| திரு. எம்.பீ. குருப்பு | பி.பொ.மு. (சந்தைப்படுத்தல்) |
| திரு. என். மஹிந்த கமகே | பி.பொ.மு. (நிதி) |
| திருமதி டபிள்யு.ஏ.எஸ்.டி.கே. பெரேரா | பி.பொ.மு. (தொழல்நுட்பம், ஆய்வுகூடம், & உற்பத்தி) |
| திரு. எச்.ஜி.டபிள்யு. தர்மசேன | பி.பொ.மு. (மனித வளங்கள் & நிர்வாகம்) |
| திருமதி பீ.கே.எஸ்.எஸ். குலசூரிய | பதில் பி.பொ.மு. (கொள்வனவு & இறக்கமதிகள்) |

## சிரேஷ்ட முகாமைத்துவம்

| | |
|---|---|
| திருமதி எஸ்.எம்.ஏ.டி.எஸ்.எச். சமந்தப்பெரும | முகாமைத்துவக் கணக்காளர் |
| திருமதி பீ.டி. குணசேகர | கணக்காளர் |
| திருமதி பீ. தசநாயக்க | முகாமையாளர் - இறக்குமதிகள் |
| திருமதி கே.ஜி.சி. சாந்திமாலா | முகாமையாளர் - தொழில்நுட்பம் |
| திரு. யு. லொக்குசூரிய | உள்ளகக் கணக்காய்வாளர் |
| திருமதி பீ.கே. விஜேரத்ன | முகாமையாளர் - தர உத்தரவாத ஆய்வுகூடம் |
| திரு. டி.பீ. அஜித் லியனகே | முகாமையாளர் - முகாமைத் தகவல் முறைமைகள் |
| திருமதி சி,கே. ஜயவர்தன | முகாமையாளர் - இறக்குமதிகள் |
| திரு. எம்.ஏ.வி.ஐ. குமாரசிறி | வெளிக்கள முகாமையாளர் - விநியோக முறைமைக் கண்காணிப்பு |
| திரு. டபிள்யு.யு. சமரநாயக்க | முகாமையாளர் – ஒசுசல, கொழும்பு 7 |
| திரு. பீ.கே.ஆர். பர்னாந்து | முகாமையாளர் கப்பல்மேடை |
| செல்வி சி.எஸ். வித்தானகே | முகாமையாளர் விற்பனைகள் |
| திருமதி எச்.எச். பியதிகம | கணக்காளர் |
| திருமதி டி.என். தேவசுரேந்திர | கணக்காளர் |
| திருமதி பீ.ஏ.யு. விஜேவர்தன | சட்ட அலுவலர் & சபைச் செயலாளர் |
| திரு. பீ.எம்.பி.ஆர். சோமதிலக | முகாமையாளர் – உற்பத்தி |
| திருமதி எம்.டபிள்யு. புஷ்பா ஜெனற் | முகாமையாளர் – மனித வளங்கள் |
| திருமதி ஏ.எச். அல்விஸ் | முகாமையாளர் – வழங்கலுக்குப் பிந்திய தொழிற்பாடு |
| திரு. எஸ்.எல். த எஸ். ஜீவகரத்ன | முகாமையாளர் – விற்பனைகள் |
| செல்வி என்.கே. ஏ.பீ. குணதிலக | முகாமையாளர் – ஊக்குவிப்பு & பிரச்சாரம் (08.05.2012 முதல்) |
| திரு. ஜி.டி.ஜே. புஷ்பகுமார | முகாமையாளர் – களஞ்சியம் & பட்டோலைக் கட்டுப்பாடு (10.05.2012 முதல்) |
| திரு. டபிள்யு.ஏ.எஸ். விக்கிரமாரச்சி | முகாமையாளர் – ஆராய்ச்சி & புதிய கருத்திட்டம் (03.12.2012 முதல்) |
| திரு. ஏ.பீ. ஹப்பன்கம | கணக்காளர் (10.04.2012 முதல்) |
| திருமதி எம்.பி. ஜயவர்தன | முகாமையாளர் – களஞ்சியம் & பட்டோலைக் கட்டுப்பாடு (10.04.2012 முதல்) |
| திரு. எச்.டி.என்.ஆர். குணசேகர | முகாமையாளர் – ஒசுசல, கொழும்பு 04. (02.08.2012 முதல்) |
| திரு, டி.ஜே. பீரிஸ் | முகாமையாளர் – ஒசுசல, பாணந்துறை. (02.08.2012 முதல்) |
| திரு. டி.ஆர். குருப்புமுல்லகே | முகாமையாளர் – ஒசுசல, கொழும்பு 01. (02.08.2012 முதல்) |

## கணக்காய்வுக் குழு

| | |
|---|---|
| திரு. எச்.எம். அஜித் சந்திர | தலைவர் |
| பேராசிரியர் ரஞ்ஜனி கமகே | பணிப்பாளர் |
| திரு. மோர்வின் குணசேன | பணிப்பாளர் |
| திரு. லலித் சேனாநாயக்க | பணிப்பாளர் |

## கணக்காய்வாளர்கள்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்,
இல. 306/72, பொல்துூவ வீதி, பத்தரமுல்ல.

## வங்கியாளர்கள்

| | |
|---|---|
| இலங்கை வங்கி | தொகுதிக் கிளை, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1. |
| மக்கள் வங்கி | சர்வதேசப் பிரிவு, தபால் பெட்டி 437, ஏ.என்.சி.எல். கட்டிடம், டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10. |
| ஸ்டான்டர்ட் சார்டட் வங்கி | தபால் பெட்டி 112, 37 யோர்க் வீதி, கொழும்பு 1. |
| இலங்கை வர்த்தக வங்கி லிமிரெட் | நகர அலுவலகம், 98, யோர்க் வீதி, கொழும்பு 1. |

## பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்

இல. 75, சேர் பாரன் ஜயதிலக மாவத்தை, கொழும்பு 1.

## கூட்டிணைக்கப்பட்ட திகதி

செப்ரெம்பர் 21, 1971



## தலைவரின் அறிக்கை

2012ஆம் ஆண்டு அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்துக்கு மிகச் சுறுசுறுப்பானதும் வெற்றிகரமானதுமான ஓர் ஆண்டாயிருந்துள்ளது. மருந்தாக்கற் பொருட்களுக்கும் அறுவை மருத்துவக் கருவிகளுக்குமான கேள்வி தொடர்ந்து அதிகரித்துள்ளது. DHS வழங்கல்கள் 2011ஆம் ஆண்டினதைவிட 4 பில்லியன் ரூபாய் கூடியதாக 16 பில்லியன் ரூபாயைக் கடந்தன. தனியார் சில்லறை விற்பனை வர்த்தகத்திலும் எமது விற்பனைகள் 4.8 பில்லியன் ரூபாயிலிருந்து 5.1 பில்லியன் ரூபாயாக அதிகரித்தன. இதே ஆண்டின்போது நாம் 3 புதிய ஒசுசலாக்களைத் திறந்துள்ளதுடன், 4 புதிய விநியோகஸ்தர்களையும், 8 புதிய தனியுரிமை விற்பனையாளர்களையும் சேர்த்துள்ளோம்.

மருத்துவ ஔடதங்களின் பாதுகாப்பும் பயன்நிறைவும் தரமும் முதன்மையான முக்கியத்துவம் கொண்டவையாதலால் மருந்தாக்கற் பொருட்களின் கொள்வனவு சரிநுட்பம் தேவைப்படுவதும் சிக்கலானதுமான ஒரு செயல்முறை. நாம் இச்செயல்முறையை முன்னேற்றுவதற்குத் தொடர்ச்சியாகப் பெருமுயற்சியெடுத்துவந்துள்ளதைத் தொடர்ந்து அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் முதல் தடவையாக அதன் வழங்குனர்களை முன்தகுதிப்படுத்துவதற்குத் தீர்மானித்துள்ளது. இது நிச்சயமாக அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தால் கொள்வனவு செய்யப்படும் உற்பத்திப் பொருட்களின் தரத்தை முன்னேற்றும். இந்தியாவிலும் இலங்கையிலுமுள்ள ஔடத அதிகாரசபைகளுக்கிடையிலான உறவுகளை முன்னேற்றுகின்ற நோக்குடன் கௌரவ சுகாதார அமைச்சர் அமைச்சின் அதிகாரிகளுடனும் SPC அதிகாரிகளுடனும் இந்தியாவுக்கு விஜயம்செய்து, இந்தியாவின் கௌரவ சுகாதார அமைச்சர் அடங்கலாக முக்கிய அதிகாரிகளைச் சந்தித்தார். இதன்விளைவாக இந்திய ஔடத அதிகாரசபைகளுக்கும் அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்துக்கும் இடையிலான ஒத்துழைப்பில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இம்முன்முயற்சிக்காக கௌரவ அமைச்சருக்கு அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் நன்றிகூற விரும்புகின்றது.

2012ஆம் ஆண்டில் தமது ஆதரவையும் வழிகாட்டலையும் வழங்கிய கௌரவ சுகாதார பிரதி அமைச்சர், சுகாதார அமைச்சுச் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகள் ஆகியோருக்கு நான் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன். மருத்துவ வழங்கல் பிரிவின் பணிப்பாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளுக்கும் எனது நன்றியறிதல்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். எமது இலக்குகளையும் குறிக்கோள்களையும் அடைவதை நோக்கி அர்ப்பணிப்புடன் பணிபுரிந்த எமது பணிப்பாளர் சபை, முகாமையினர், மற்றும் எல்லா ஊழியர்களுக்கும் நான் தனிப்பட்டமுறையில் நன்றியறிதல்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். SPC யிலும் அதன் ஔடதங்களிலும் நம்பிக்கை வைத்துச் செயற்பட்ட வழங்குனர்கள், விநியோகத்தர்கள், மற்றும் தனியுரிமை விற்பனையாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும். தரமான, பயனுறுதியுள்ள, செலவுப்பயன்மிக்க ஔடதங்கள் தொடர்பான உற்பத்திகளின் முன்னணி வழங்குனராக எல்லா இலங்கை மக்களினதும் மனங்களிலும் இதயங்களிலும் SPC என்ற பெயர் என்றும் நிலைத்திருக்கும் என்று நான் மனதார எதிர்பார்க்கின்றேன்.



பேராசிரியர் எஸ்.டி. ஜயரத்ன

**தலைவர்**



## முகாமைப் பணிப்பாளரின் நிதி மீளாய்வு

2012ஆம் ஆண்டுக்கான கூட்டுத்தாபனத்தின் செயல் நிறைவேற்றம் பற்றிய முகாமைப் பணிப்பாளரின் அறிக்கையை நான் பெருமகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றேன். மீளாய்வுக் காலத்தின்போது அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் முன்னர் என்றுமில்லாத ஆகக்கூடிய விற்பனைவரவான ரூ. 21,610 மில்லியனைப் பதிவுசெய்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 24% அதிகரிப்பாகும். இவ்வதிகரிப்புக்குச் சுகாதார அமைச்சின் மருத்துவ வழங்கல்கள் பிரிவுக்குச் செய்யப்பட்ட வழங்கல்களில் அதிகரிப்பே பிரதான காரணமாயிருந்தது.

அரசாங்க வைத்தியசாலைகளுக்குத் தர உத்தரவாதமளிக்கப்பட்ட மருந்தாக்கற் பொருட்களும் உடனலம் பேணும் இனங்களும் தொடர்ச்சியாக வழங்கப்படுதலை உறுதிப்படுத்தும்பொருட்டு 'மருத்துவ வழங்கல்கள் பிரிவு'க்கான உடனலம் பேணும் இனங்களின் ஏக இறக்குமதியாளர் SPC தான். மேலும் SPC இறக்குமதிசெய்து வடக்கு மற்றும் கிழக்கு அடங்கலாக இத்தீவு முழுவதையும் உள்ளடக்கிய அதன் பரந்த, உறுதியான விநியோக வலையமைப்பினூடாகத் திறந்த சந்தையிலும் அவற்றை விற்பனை செய்கின்றது.

### நிதிச் செயல்நிறைவேற்றம்

**விற்பனைப் பகுப்பாய்வு**




2012ஆம் ஆண்டில் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளிலிருந்து விற்பனைவரவு ரூ. 5,002 மில்லியனைப் பதிவு செய்துள்ளது. 2011இல் பதிவுசெய்யப்பட்ட ரூ. 4,806 மில்லியன் விற்பனைவரவுடன் ஒப்பிடுகையில் இது 4% அதிகரிப்பாகும். விற்பனைகளில் அதிகரிப்புக்கு விநியோக வலையமைப்பின் விரிவாக்கம் பிரதான காரணமாயிருந்தது. SPC இப்போது தொழிற்படாதுள்ள பிரதேசங்களில் அதன் தொழிற்பாட்டை விரிவுபடுத்தும்பொருட்டு 2012ஆம் ஆண்டின்போது கூட்டுத்தாபனம் 08 புதிய தனியுரிமைபெற்ற ஒசுசல விற்பனையாளர்களையும் 04 விநியோகஸ்தர்களையும் நியமித்தது. அரச ஒசுசல வலையமைப்பைப் பலப்படுத்தும்பொருட்டு 2012ஆம் ஆண்டின்போது SPC ராகமையிலும் தங்காலையிலும் அரச ஒசுசல விற்பனை நிலையங்களைத் தாபித்தது. ஆண்டு முடிவில் திறந்த சந்தை விற்பனைகளுக்காக மொத்தமாக 28 அரச ஒசுசல விற்பனை நிலையங்கள், 188 தனியுரிமைபெற்ற ஒசுசல விற்பனை நிலையங்கள் ஆகியவற்றுடன் 52 விநியோகஸ்தர்களும் 12 அதிகாரமளிக்கப்பட்ட சில்லறை விற்பனையாளர்களும் தொழிற்பட்டுக்கொண்டிருந்தனர்.

2012ஆம் ஆண்டின்போது SPC வரிக்குமுந்திய இலாபமாக ரூ. 464.6 மில்லியனைப் பதிவுசெய்துள்ளது. இது முன்னைய ஆண்டின் தொகையான ரூ. 321.9 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 44% அதிகரிப்பாகும். இலாபத்தில் இவ்வதிகரிப்புக்கு விற்பனைகளில் முன்னேற்றத்துடன் இணைந்ததாக செலவினத்தைக் கட்டுப்படுத்தலும் திறைசேரியால் மேலதிகப்பற்று வட்டியின் செலவு ஈடுசெய்யப்பட்டமையும் பிரதான காரணங்களாகும்.

மீளாய்வாண்டின்போது ரூ. 16,608 மில்லியனுக்கான உடனலம்பேணும் இனங்கள் மருத்துவ வழங்கல்கள் பிரிவுக்கு வழங்கப்பட்டிருந்தன. இது 2011இன் ரூ. 12,569 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 32% அதிகரிப்பாகும்.

MSD வழங்கல்களுக்கெதிராக 2012 ஆகஸ்டிலிருந்து திசெம்பர் வரை செலுத்தப்பட்ட மேலதிகப்பற்று வட்டிக்குப் பதிலீடாகக் கூட்டுத்தாபனத்துக்குத் திறைசேரியிடமிருந்து ரூ. 248 மில்லியன் கிடைத்தது. இதன்விளைவாகச் செலுத்தப்பட்ட மேலதிகப்பற்று வட்டி ரூ. 339 மில்லியனாகக் குறைந்தது. 2011ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 20% குறைந்துள்ளது.

அரசாங்க வைத்தியசாலைகளில் மருந்தியலாளர் வேலைநிறுத்தத்தின்போது எமது அரச ஒசுசல விற்பனை நிலையங்களின் பணியாளர் இத்தீவெங்கிலுமுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் வெளிநோயாளர் பிரிவு நோயாளர்களுக்கு மருந்துகளை வழங்குவதற்கு அயராதுழைத்துள்ளனரென்ற உண்மையை இங்கு நான் வலியுறுத்த விரும்புகின்றேன்.

**வரிக்கு முந்திய இலாபம்**




## விற்பனை மற்றும் வர்த்தக ஊக்குவிப்புகள்

2012ஆம் ஆண்டின்போது SPC மருந்துகள் பற்றி வைத்தியத்தொழில் புரிபவர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் தெரிநிலையை அதிகரிக்கும் நோக்குடன் முழுத்தீவையும் உள்ளடக்கியதாக மருத்துவத்துடன் தொடர்புடைய பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு SPC அனுசரணை வழங்கியது.

SPC யின் தாபகத் தலைவர் பேராசிரியர் சேனக பிபிலே அவர்களைப் பாராட்டும்பொருட்டு இலங்கையின் பல்கலைக் கழகங்களிலுள்ள ஆறு மருத்துவ பீடங்கள் ஒவ்வொன்றிலும் மருந்தகவியலில் மிகச்சிறந்த பெறுபேறுகளைப் பெறும் மருத்துவ மாணவர்களுக்கு “சேனக பிபிலே நினைவுப் புலமைப்பரிசில்” நிகழ்ச்சித்திட்டத்தை நாம் தொடர்ந்து நடத்திவருகின்றோம். SPC மருந்துகள் பற்றிப் பாடசாலைப் பிள்ளைகளுக்கு அறிவூட்டுவதற்காக அவர்கள் மத்தியில் “பேராசிரியர் சேனக பிபிலே பேச்சுப் புதிர்ப்போட்டியை” SPC ஒழுங்குசெய்தது. மேற்கூறப்பட்டவற்றைத் தவிர “சுவபியச” மற்றும் “சுபாரதி” போன்ற இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிகழ்ச்சித்திட்டங்கள்மூலம் ஊக்குவிப்புப் பிரச்சாரங்கள் நடத்தப்பட்டன.

## தொழில்நுட்பம் மற்றும் ஆய்வுகூடம்

SPC தர உத்தரவாத ஆய்வுகூடத்தின் தர நியமத்தைப் பேணுதலையும் அதனை மேம்படுத்துதலையும் நோக்கிய அதன் அர்ப்பணிப்பைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. இந்நாட்டு மக்களுக்கு வழங்கப்படுகின்ற “SPC” மருந்துகளின் தரநியமத்தை உறுதிப்படுத்துவதற்காக எல்லா SPC மருந்துகளும் “கேள்விப்பத்திர மாதிரிகள்”, “கப்பலேற்றுவதற்கு முந்திய மாதிரிகள்”, “விநியோகத்துக்கு முந்திய மாதிரிகள்” மற்றும் “வழங்கலுக்குப் பிந்திய மாதிரிகள்” என்ற நான்கு கட்டங்களில் பரிசோதிக்கப்படுகின்றன. அத்துடன் SPC ஆய்வுகூடம் ‘MSD’ வழங்கல்களின் கேள்விப்பத்திர மாதிரிகளைப் பரிசோதிப்பதிலும் ஈடுபடுகின்றது.

## மனிதவள அபிவிருத்தி

மீளாய்வாண்டின் முடிவில் மொத்தத் தொழிற்படையினரின் எண்ணிக்கை 941 ஆக இருந்தது. இவர்களில் 785 பேர் நிரந்தர ஊழியர்களும் எஞ்சியோர் பயிலுனர்களுமாவர். ஈடுபாடும் செயலூக்கமும் மிக்க எமது தொழிற்படைதான் கூட்டுத்தாபனத்தின் வெற்றிக்குப் பங்களித்த முக்கிய காரணியாயிருந்தது. நிறுவனத்தினுள் ஒரு தொழில் வளர்ச்சிப் பாதையை அவர்களுக்கு வழங்கும்பொருட்டும் அவர்களின் திறன்களை முன்னேற்றுவதற்காகவும் 172 ஊழியர்கள் உள்நாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் 4 ஊழியர்கள் வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் அனுப்பப்பட்டனர். 2012க்கு முன்னர் கூட்டுத்தாபனத்தில் நடப்பிலிருந்த பணியாளர் சேமநல நன்மைகள் யாவும் 2012ஆம் ஆண்டின்போதும் தொடரப்பட்டன.

## நன்றி நவிலல்

கூட்டுத்தாபனம் பதிவுசெய்துள்ள வளர்ச்சியையும் இலாபத்தையும் சாதிப்பதற்கு அர்ப்பணிப்புமிக்க சேவையை ஆற்றிய எமது முகாமை அணியினருக்கும் எல்லா வகுதிகளையும் சேர்ந்த பணியாளருக்கும் இச்சந்தர்ப்பத்தில் நான் நன்றி கூற விரும்புகின்றேன்.

R.L. Dharmatilleke

ஆர்.எல். தர்மதிலக
**முகாமைப் பணிப்பாளர்**

## பணிப்பாளர்களின் அறிக்கை

அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்கள் 2012 திசெம்பர் 31ஆந் தேதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுகளை இதனுடன் சமர்ப்பிக்கின்றனர்.

பொதுத் திறைசேரியிலுள்ள அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட 2003 யூன் 5ஆந் தேதிய PED/11ஆம் இலக்கச் சுற்றறிக்கைக் கிணங்கக் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுகள் 2013 பெப்ருவரி 29ஆந் தேதியன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

### உருவாக்கம்

அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் (SPC) 1957இன் 49ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் 2ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்டு, இலங்கை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் கைத்தொழில்கள் மற்றும் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சரால் வழங்கப்பட்ட கட்டளையின்கீழ் 1971 செப்ரெம்பர் 22ஆந் தேதிய 14976/8ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. கூட்டுத்தாபனத்தின் தொடக்க மூலதனம் பத்து இலட்சம் ரூபாயாகும்.

### கணக்கீட்டுக் கொள்கைகள்

இவ்வாண்டின்போது கூட்டுத்தாபனம் இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தால் வழங்கப்பட்ட இலங்கைக் கணக்கீட்டு நியமங்களைக் (SLFRS/LKAS) கைக்கொண்டது. கூட்டுத்தாபனம் எவ்வாறு SLFRS/LKAS.ஐக் கைக்கொண்டதென்ற தகவலுக்கு 27ஆம் குறிப்பைப் பார்க்கவும்.

### பெறுபேறுகள்

ஆண்டுக்கான பெறுபேறுகளும் உரிமைப்பங்கில் மாற்றங்களும் வருமானக் கூற்றிலும் உரிமைப்பங்கில் மாற்றங்கள் பற்றிய கூற்றிலும் குறித்துரைக்கப்பட்டுள்ளன.

### வியாபாரத்தின் மீளாய்வு

2012 திசெம்பர் 31இல் இருந்தவாறு கூட்டுத்தாபனத்தின் விவகாரங்களின் நிலை ஐந்தொகையிலும் இந்நிதியாண்டில் கூட்டுத்தாபனத்தின் மதிப்பீடு முகாமைப் பணிப்பாளரின் அறிக்கையிலும் குறித்துரைக்கப்பட்டுள்ளன.

### ஆதனம், பொறித்தொகுதி மற்றும் சாதனம்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் சாதனம் என்பவை திரண்ட தேய்மானம் கழித்த கிரயத்தில் கூறப்பட்டுள்ளன. இவ்வாண்டில் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் சாதனம் என்பவற்றின் அசைவுகள் நிதிக் கூற்றுகளுக்கான குறிப்பு 12இல் குறித்துரைக்கப்பட்டுள்ளன. அதில் காட்டப்பட்டுள்ள விலை மதிப்பீடு நடப்புச் சந்தைப் பெறுமதியிலிருந்து பொருள்ரீதியாக வேறுபட்டதல்ல.

### பிரதான நடவடிக்கைகள்

கூட்டுத்தாபனத்தின் பிரதான நடவடிக்கைகளாவன:

- திறந்த சந்தையில் மருந்துகளினதும் உடனலம்காக்கும் இனங்களினதும் இறக்குமதி, கொள்வனவு, விற்பனை மற்றும் விநியோகம்.
- சுகாதார சேவைகள் திணைக்களத்துக்கு மருந்துகளையும் உடல்நலம் காக்கும் இனங்களையும் இறக்குமதி செய்தலும் வழங்குதலும்.
- ஜீவனி, குளுக்கோஸ் மற்றும் பென்சைல் பென்சொவேற் கிரீம் ஆகியவற்றைத் தயாரித்தலும் சந்தைப்படுத்தலும்.
- மருத்துவச் சோதனைகளும் ஆய்வுகூடச் சேவைகளும் வழங்குதல்

கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகள் கடந்த நிதியாண்டின் நடவடிக்கைகளிலிருந்து பொருள்ரீதியாக மாற்றமடையவில்லை.

### ஒதுக்கங்கள்

கூட்டுத்தாபனத்தின் மொத்த ஒதுக்கங்களும் அவற்றின் ஆக்க அமைவும் உரிமைப்பங்கில் மாற்றங்கள் பற்றிய கூற்றில் தரப்பட்டுள்ளன.

### பணிப்பாளர்கள்

2012 திசெம்பர் 31இல் இருந்தவாறு கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| பேராசிரியர் எஸ்.டி. ஜயரத்ன | - தலைவர் |
| திரு. ஆர்.எல். தர்மதிலக | - முகாமைப்பணிப்பாளர் |
| கலா. பி.ஜி. மஹிபால | - பணிப்பாளர் |
| திரு. எச்.எம். அஜித் சந்திர | - பணிப்பாளர் |
| பேரா. ரஞ்ஜனி கமகே | - பணிப்பாளர் |
| திரு. மேர்வின் குணசேன | - பணிப்பாளர் |
| திரு. லலித் சேனாநாயக்க | - பணிப்பாளர் |

### கணக்காய்வுக் குழு

அரசாங்கப் பொறுப்புமுயற்சிகளின் நல்ல செயலாட்சிக்கான வழிகாட்டல்களின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வுக் குழு உருவாக்கப் பட்டுள்ளது.

### கூட்டாண்மைச் செயலாட்சி/உள்ளகக் கட்டுப்பாடு

கூட்டுத்தாபனம் முழுநிறைவான கூட்டாண்மைச் செயலாட்சிக் கோட்பாடுகள் செயற்படுத்தப்படுதலை உறுதிப்படுத்துவதற்கு முறைமைகளையும் நடைமுறைகளையும் அமைவித்துள்ளது. கணக்காய்வுக் குழு அறிக்கை 11ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

### தொழில்வாய்ப்பு

SPC ஊழியர்களின் திறன்களை மேம்படுத்துவதற்குப் பொருத்தமான மனிதவள முகாமைத்துவக் கொள்கைகளையும் நடைமுறைகளையும் தொடர்ந்து செயற்படுத்தியது.

### நியதிச்சட்டமுறையான கொடுப்பனவுகள்

அரசாங்கத்துக்கும் ஊழியர்களுக்கும் உரித்தான நியதிச்சட்ட முறையான எல்லாக் கொடுப்பனவுகளும் உடனுக்குடன் செலுத்தப்பட்டுள்ளன.

### சுற்றாடல் பாதுகாப்பு

சுற்றாடலுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய நடவடிக்கைகள் எவற்றிலும் கூட்டுத்தாபனம் ஈடுபடவில்லை.

### அரசாங்கத்துக்குப் பங்களிப்பு

கூட்டுத்தாபனம் வருமான வரியும் கருதப்பட்ட பங்கிலாப வரியும் என்ற வகையில் 238.4 மில்லியன் ரூபாயை இலங்கை அரசாங்கத்துக்குப் பங்களித்துள்ளது.

### ஐந்தொகைக்குப் பிந்திய நிகழ்வுகள்

நிதிக்கூற்றுகளில் சீராக்கத்தை அல்லது வெளிப்படுத்துகை யைத் தேவைப்படுத்துகின்ற நிகழ்வு எதுவும் ஐந்தொகைத் தேதியின் பின்னர் இடம்பெறவில்லை.

### கணக்காய்வாளர்கள்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி 2012 திசெம்பர் 31இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றைக் கணக்காய்வு செய்தார்.

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**

…………………………

**அனுராதா விஜயவர்தன**
சட்ட அலுவலர்/சபைச் செயலாளர்

# கணக்காய்வுக் குழுவின் அறிக்கை

### கணக்காய்வுக் குழுவின் உருவாக்கம்

கணக்காய்வுக் குழு நிறைவேற்றுனரல்லாத நான்கு சபைப் பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. பொதுத் திறைசேரியைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பணிப்பாளர், குழுவின் தவிசாளராகக் கடமையாற்றுவார். 2012 திசெம்பர் 31இல் முடிவடைந்த நிதியாண்டினபோது பின்வருவோர் கணக்காய்வுக் குழுவின் உறுப்பினர்களாயிருந்தனர்.

திரு. எச்.எம். அஜித் சந்திர – குழுவின் தவிசாளர்<br>
திரு. மேர்வின் குணசேன<br>
பேரா. ரஞ்ஜனி கமகே<br>
திரு. லலித் சேனாநாயக்க

தலைவர், முகாமைப் பணிப்பாளர், பொது முகாமையாளர் மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் (நிதி) ஆகியோர் குழுக் கூட்டங்களில் அவதானிப்போராகப் பங்குபற்றுகின்றனர். பிரதிப் பொது முகாமையாளர் (மனித வளங்கள் மற்றும் நிருவாகம்), பிரதிப் பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்), பிரதிப் பொது முகாமையாளர் (தொழில்நுட்பம்) மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் (கொள்வனவு மற்றும் இறக்குமதிகள்) ஆகியோர் அழைப்பின்பேரில் குழுக் கூட்டங்களில் பங்குபற்றுகின்றனர். உள்ளகக் கணக்காய்வாளர் குழுவின் செயலாளராகக் கடமையாற்றுகின்றார்.

### கணக்காய்வுக் குழுவின் கடமைகள்

கணக்காய்வுக் குழுவின் பிரதான கடமைகள் கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளை மீளாய்வு செய்தலும் கண்காணித்தலும், கூட்டுத்தாபனத்தின் நிதி நடவடிக்கைகள் மற்றும் கணக்காய்வு தொடர்பான எல்லா அம்சங்களையும் மீளாய்வுசெய்து விதப்புரைகளைச் செய்வதன்மூலம் பணிப்பாளர் சபைக்கு உதவுதலுமாகும். மீளாய்வாண்டில் குழுவானது பின்வரும் விடயங்களில் கவனஞ்செலுத்தியது.

1. உள்ளகக் கட்டுப்பாடுகளை மீளாய்தலும் மதிப்பீடு செய்தலும் அவசியமானவிடத்து திருத்த மாற்றங்களை விதந்துரைத்தலும்.
2. 2012ஆம் ஆண்டுக்கான உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தை மீளாய்வுசெய்தலும் அங்கீகரித்தலும்.
3. பிரச்சினைகளின் இயல்பை உள்ளடக்கியதாக உள்ளகக் கணக்காய்வாளரின் அறிக்கைகளை மீளாய்வு செய்தலும் உள்ளகக் கணக்காய்வாளரின் காண்புகளுக்கும் விதப்புரைகளுக்கும் முகாமையினரின் பதிற்செயலைக் கண்காணித்தலும்.
4. 1971இன் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13(7)(அ) மற்றும் 14(2)(இ) பிரிவின் பிரகாரம் வெளிப்புறக் கணக்காய்வாளர்களால் அவர் களின் அறிக்கைகளில் எழுப்பப்பட்ட கணக்காய்வு விசாரணைகளையும் விடயங்களையும் மீளாய்வுசெய்தல்.
5. அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் (COPE) விதப்புரைகள் செயற் படுத்தப்படுதலை மீளாய்வுசெய்தல்.

### உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் கணக்காய்வுக் குழுவின் வழிகாட்டலின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வுத் திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது. மேலும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு திறமையற்ற நடைமுறைகளை ஒழிப்பதற்கும், உள்ளகக் கட்டுப்பாடுகளை முன்னேற்றுவதற்கும் நட்டங்களையும் சாத்தியமான மோசடிகளையும் தவறுகளையும் சோதித்து அத்தகைய சந்தர்ப்பங்களை இயன்றளவு குறைப்பதற்குமென நிதி மற்றும் முறைமைக் கணக்காய்வொன்றை நடத்தியது.

### கூட்டங்கள்

2012ஆம் நிதியாண்டினபோது ஆறு கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இக்குழு இனங்காணப்பட்ட குறைபாடுகள் பற்றிய அதன் கருத்துரைகளை முகாமையினருக்குச் சமர்ப்பித்துள்ளது. அதற்கிணங்க இனங்காணப்பட்ட குறைபாடுகளைத் திருத்துவதற்குப் பரிகார நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

........................................
**ஒப்பம்/எச்.எம். அஜித் சந்திர**<br>
**தவிசாளர், கணக்காய்வுக் குழு**

## இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்
## 2012 டிசெம்பர் 31ஆந் நிதி நிலை பற்றிய கூற்று

| | குறிப்பு | 2012<br>ரூ. | 2012<br>ரூ. | 2011<br>ரூ. | 2011<br>ரூ. |
|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | | |
| **நடைமுறையிலற்ற சொத்துக்கள்** | | | | | |
| ஆதனம், பொறி, சாதனம் | 12 | 1,667,811,536 | | 1,564,603,189 | |
| குத்தகைக் காணி - இரத்மலானை | | 10,680,000 | | 10,840,000 | |
| நடைபெறும் மூலதனவேலை | | 15,578,367 | | 16,193,567 | |
| வேறு நடைமுறையிலற்ற சொத்துக்கள் | | 14,948,350 | | 13,800,775 | |
| | | | **1,709,018,254** | | **1,605,437,531** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | |
| பொருட்பட்டியல்கள் | 13 | 1,079,938,789 | | 887,455,903 | |
| இடைப்போக்கிலுள்ள இருப்பு | 14 | 886,881,626 | | 2,086,268,827 | |
| வர்த்தக, ஏனைய வருமதிகள் | 15 | 11,062,836,871 | | 5,123,702,453 | |
| முற்கொடுப்பனவுகள் | 16 | 23,578,839 | | 24,478,862 | |
| கையிலும் வங்கியிலும் உள்ள காசு | 17 | 216,358,949 | | 600,806,882 | |
| | | | **13,269,595,075** | | **8,722,712,928** |
| **மொத்தச் சொத்துக்கள்** | | | **14,978,613,328** | | **10,328,150,459** |
| **உரிமைப்பங்கும் பொறுப்புக்களும்** | | | | | |
| ஒத்துதவிய மூலதனம் | | 59,055,258 | | 59,055,258 | |
| நிறுத்திவைத்த ஈட்டல்கள் | | 3,622,539,288 | | 3,377,491,107 | |
| பொது ஒதுக்கங்கள் | | 66,061,447 | | 66,061,447 | |
| | | | **3,747,655,993** | | **3,502,607,812** |
| **நடைமுறையிலற்ற பொறுப்புக்கள்** | | | | | |
| இளைப்பாற்று நன்மைக் கடப்பாடு | 18 | 94,248,566 | | 74,894,076 | |
| பிற்போடப்பட்ட வரிப்பொறுப்பு | 19 | 30,309,522 | | 30,188,279 | |
| | | | **124,558,088** | | **105,082,355** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | | |
| வர்த்தக, ஏனைய சென்மதிகள் | 20 | 3,016,958,649 | | 1,784,155,464 | |
| செலுத்தவேண்டிய வருமான வரி | | 191,439,643 | | 219,331,798 | |
| பிற்போடப்பட்ட வருமானம் | | 1,291,826 | | 317,625 | |
| நடைமுறை நிதிப்பொறுப்புகள் | 21 | 7,896,709,130 | | 4,716,655,405 | |
| | | | **11,106,399,247** | | **6,720,460,292** |
| **மொத்த உரிமைப்பங்கும் பொறுப்புகளும்** | | | **14,978,613,328** | | **10,328,150,459** |

கணக்கீட்டுக் கொள்கைகளும் பக்கம் 18 முதல் 45 வரையுள்ள குறிப்புகளும் நிதிக் கூற்றுகளின் இன்றியமையாத ஒரு பகுதி.

| | | | |
|---|---|---|---|
| ...................................... | ...................................... | ...................................... | ...................................... |
| **பேரா. எஸ்.டி. ஜயரத்ன**<br>**தலைவர்** | **ஆர்.எல். தர்மதிலக**<br>**முகாமைப் பணிப்பாளர்** | **கே.எம்.டி.ஆர். தசநாயக்க**<br>**பொது முகாமையாளர்** | **மஹிந்த கமகே**<br>**பி.பொ.மு. - நிதி** |

**இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்**

**2012 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கான உரிமைப்பங்கில் மாற்றங்கள் பற்றிய கூற்று**

| | உதவப்பட்ட மூலதனம் ரூ. | பங்குமூலதனத் துக்குக் கிடைத்த முற்பணம் ரூ. | பொது ஒதுக்குகள் ரூ. | திரண்ட இலாபம் ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|---|
| **2010 டிசெம்பர் 31இல் மீதி** | **35,042,000** | **24,013,258** | **66,061,447** | **3,287,663,198** | **3,412,779,903** |
| 2011 சனவரி 01இல் மீதி | 35,042,000 | 24,013,258 | 66,061,447 | 3,287,663,198 | 3,412,779,903 |
| செலுத்திய திறைசேரி வரி | | | | (15,000,000) | (15,000,000) |
| வரையறுக்கப்பட்ட நன்மைத்திட்ட ஆதாயம்/ நட்டம் | | | | 11,325,057 | 11,325,057 |
| ஆண்டுக்கான தேறிய இலாபம் | | | | 93,502,852 | 93,502,852 |
| **2011 டிசெம்பர் 31இல் மீதி** | **35,042,000** | **24,013,258** | **66,061,447** | **3,377,491,107** | **3,502,607,812** |
| 2012 சனவரி 01இல் மீதி | 35,042,000 | 24,013,258 | 66,061,447 | 3,377,491,107 | 3,502,607,812 |
| | | | | - | - |
| வரையறுக்கப்பட்ட நன்மைத்திட்ட ஆதாயம்/ நட்டம் | | | | (14,281,409) | (14,281,409) |
| ஆண்டுக்கான தேறிய இலாபம் | | | | 259,329,589 | 259,329,589 |
| **2012 டிசெம்பர் 31இல் மீதி** | **35,042,000** | **24,013,258** | **66,061,447** | **3,622,539,288** | **3,747,655,993** |

## இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்
## 2012 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமானக் கூற்று

| | குறிப்பு | SPC தொழிற்பாடுகள் | DHS தொழிற்பாடுகள் | மொத்தத் தொழிற்பாடுகள் 2012 | மொத்தத் தொழிற்பாடுகள் 2011 |
|---|---|---|---|---|---|
| **வருவாய்** | **3** | **5,001,672,742** | **16,608,492,451** | **21,610,165,194** | **17,375,459,642** |
| **கழிக்குக:** | | | | | |
| நேரடிச் செலவுகள் - MSD | **4** | | 15,415,278,195 | 15,415,278,195 | 11,788,555,087 |
| விற்பனைக் கிரயம் - SPC | **5** | 3,959,568,211 | | 3,959,568,211 | 3,726,917,368 |
| உற்பத்திக் கிரயம் - ORS | **6** | 50,563,135 | | 50,563,135 | 35,798,972 |
| **மொத்த இலாபம்/மிகை** | | **991,541,396** | **1,193,214,256** | **2,184,755,652** | **1,824,188,215** |
| **கூட்டுக:** | | | | | |
| பிற தொழிற்பாட்டு வருமானம் | **7** | 15,104,844 | | 15,104,844 | 23,230,881 |
| **கழிக்குக:** | | | | | |
| நிருவாகச் செலவுகள் | **8** | 431,862,360 | 223,047,683 | 654,910,043 | 614,019,155 |
| பிற தொழிற்பாட்டுச் செலவுகள் | **9** | 183,385,789 | 561,844,238 | 745,230,027 | 492,631,005 |
| **தொழிற்பாட்டு இலாபம்** | | **391,398,091** | **408,322,336** | **799,720,426** | **740,768,935** |
| **கழிக்குக:** | | | | | |
| நிதிச் செலவுகள் | **10** | 17,022 | 339,035,117 | 339,052,139 | 422,895,753 |
| **கூட்டுக:** | | | | | |
| நிதி வருமானம் (பணியாளர் கடன்) | | 3,943,725 | - | 3,943,725 | 4,102,392 |
| **வரிக்கு முந்திய இலாபம்** | | **395,324,794** | **69,287,218** | **464,612,012** | **321,975,574** |
| வருமானவரிச் செலவுகள் | **11** | 174,668,819 | 30,613,604 | 205,282,423 | 228,472,722 |
| **வரிக்குப் பின் இலாபம்** | | **220,655,975** | **38,673,614** | **259,329,589** | **93,502,852** |
| **வேறு விரிவான வருமானம்** | | | | | |
| வரையறுக்கப்பட்ட நன்மைத்திட்ட ஆதாயம்/ நட்டம் | | (6,283,820) | (7,997,589) | (14,281,409) | 11,325,057 |
| திறைசேரி வரி /செலுத்திய பங்கிலாபம் | | - | - | - | (15,000,000) |
| **ஆண்டுக்கான மொத்த விரிவான வருமானம்** | | **214,372,155** | **30,676,025** | **245,048,180** | **89,827,909** |

* மேலே கூறப்பட்ட ரூ. 339 மில்லியன் நிதிச் செலவுகள் பொதுத் திறைசேரியால் செலவு ஈடுசெய்யப்பட்ட ரூ. 247.6 மில்லியன் வட்டி சரியீடுசெய்யப்பட்ட பின்னரானவை.

## இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்
## 2012 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கான ஒசுசலா வியாபாரச் செயற்பாடுகளின் வருமானக் கூற்று

| | ஒசுசல வியாபாரம் கொழும்பு 07 ரூ. | ஒசுசல வியாபாரம் கொழும்பு 04 ரூ. | ஒசுசல வியாபாரம் கொழும்பு 01 ரூ. | ஒசுசல வியாபாரம் கண்டி ரூ. | ஒசுசல வியாபாரம் நுகெகொட ரூ. | ஒசுசல வியாபாரம் அவிசாவளை ரூ. | ஒசுசல வியாபாரம் இரத்தினபுரி ரூ. | ஒசுசல வியாபாரம் மினுவங்கொட ரூ. | ஒசுசல வியாபாரம் பாணந்துறை ரூ. | ஒசுசல வியாபாரம் காலி ரூ. | ஒசுசல வியாபாரம் மாத்தறை ரூ. | ஒசுசல வியாபாரம் குருணாகல் ரூ. | ஒசுசல வியாபாரம் அம்பாறை ரூ. | ஒசுசல வியாபாரம் அம்பாந்தோட்டை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| விற்பனைகள் | 557,432,351 | 298,226,353 | 85,249,396 | 147,855,885 | 62,311,879 | 36,494,631 | 68,865,487 | 27,149,221 | 57,124,189 | 91,045,043 | 61,400,139 | 82,192,761 | 22,799,717 | 32,038,794 |
| **மொத்த விற்பனைகளும் மாற்றல்களும்** | **557,432,351** | **298,226,353** | **85,249,396** | **147,855,885** | **62,311,879** | **36,494,631** | **68,865,487** | **27,149,221** | **57,124,189** | **91,045,043** | **61,400,139** | **82,192,761** | **22,799,717** | **32,038,794** |
| விற்பனைக் கிரயமும் மாற்றல்களும் | 471,511,225 | 264,879,403 | 72,212,463 | 122,736,788 | 50,970,356 | 29,897,348 | 58,586,508 | 21,335,441 | 46,015,853 | 77,965,634 | 49,139,786 | 66,493,359 | 18,077,405 | 26,420,776 |
| **விற்பனை மற்றும் மாற்றல்களின்மீது மொத்த இலாபம்** | **85,921,126** | **33,346,950** | **13,036,933** | **25,119,097** | **11,341,523** | **6,597,282** | **10,278,978** | **5,813,779** | **11,108,336** | **13,079,409** | **12,260,353** | **15,699,402** | **4,722,311** | **5,618,018** |
| **நிருவாகச் செலவுகள்** | | | | | | | | | | | | | | |
| ஆளணிச் செலவுகள் | 26,928,078 | 11,949,337 | 5,480,812 | 9,378,561 | 7,223,932 | 4,701,617 | 7,671,441 | 3,540,366 | 6,515,668 | 9,035,875 | 6,819,720 | 5,620,504 | 3,205,579 | 3,614,198 |
| பிரயாணச் செலவுகள் | 25,324 | 2,066 | 3,442 | 4,822 | 1,787 | 22,208 | 15,758 | 7,948 | 5,846 | 2,345 | 10,460 | 3,132 | 1,887 | 2,741 |
| வழங்கல்கள், தேவைகள் | 544,562 | 101,018 | 95,820 | 171,690 | 53,612 | 94,499 | 156,705 | 29,568 | 152,051 | 131,371 | 134,822 | 131,474 | 78,527 | 70,603 |
| திருத்தங்கள், பராமரிப்பு | 644,882 | 97,316 | 70,641 | 125,948 | 52,282 | 33,821 | 165,462 | 16,459 | 109,780 | 110,784 | 89,166 | 99,814 | 58,793 | 92,351 |
| போக்குவரத்து, தொடர்பாடல் பயன்பாடுகள், பிற சேவைகள் | 9,635,743 | 3,519,260 | 1,823,278 | 3,509,586 | 3,078,086 | 2,040,669 | 2,753,656 | 1,534,145 | 2,251,423 | 3,332,779 | 2,599,746 | 2,596,276 | 1,457,758 | 1,808,562 |
| **பிற செயற்பாட்டுச் செலவுகள்** | | | | | | | | | | | | | | |
| விற்பனை, விநியோகச் செலவுகள் | 898,083 | 165,902 | 216,440 | 707,765 | 332,841 | 106,318 | 272,865 | 134,160 | 236,287 | 292,803 | 431,357 | 363,449 | 194,512 | 205,920 |
| **மொத்த மேந்தலைச் செலவுகள்** | **38,676,673** | **15,834,899** | **7,690,433** | **13,898,372** | **10,742,540** | **6,999,133** | **11,035,887** | **5,262,645** | **9,271,055** | **12,905,958** | **10,085,271** | **8,814,649** | **4,997,056** | **5,794,375** |
| **தேறிய இலாபம் / (நட்டம்)** | **47,244,453** | **17,512,051** | **5,346,500** | **11,220,725** | **598,982** | **(401,851)** | **(756,909)** | **551,134** | **1,837,281** | **173,450** | **2,175,082** | **6,884,754** | **(274,745)** | **(176,357)** |

## இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்
## 2012 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கான ஒசுசல வியாபாரச் செயற்பாடுகளின் வருமானக் கூற்று

| | ஒசுசல வியாபாரம் மீகொட ரூ. | ஒசுசல வியாபாரம் அனுராதபுரம் ரூ. | ஒசுசல வியாபாரம் மஹரகம ரூ. | ஒசுசல வியாபாரம் ஜயவர்தனபுர ரூ. | ஒசுசல வியாபாரம் கராபிட்டிய ரூ. | ஒசுசல கராபிட்டிய நீர்கொழும்பு ரூ. | ஒசுசல வியாபாரம் பதுளை- CWE ரூ. | ஒசுசல வியாபாரம் தியதலாவ ரூ. | ஒசுசல வியாபாரம் யாழ்ப்பாணம் ரூ. | ஒசுசல வியாபாரம் பொலனறுவை ரூ. | சதொச விற். நிலையம் இரத்மலானை ரூ. | சதொச விற். நிலையம் பிலியந்தலை ரூ. | சதொச விற். நிலையம் களுத்துறை ரூ. | பிராந்தியக் களஞ்சியம் கண்டி ரூ. | ஒசுசல மொத்த வியாபார செயற்பாடுகள் ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| விற்பனைகள் | 3,720,549 | 46,425,433 | 70,587,654 | 132,582,906 | 61,401,894 | 58,523,648 | 39,500,527 | 14,500,936 | 13,867,660 | 7,335,286 | 8,884,249 | 5,938,176 | 4,100,008 | 88,309,374 | 2,185,864,145 |
| வியாபார விற்பனைவரவு வரி | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| | | | | | | | | | | | | | | | - |
| | | | | | | | | | | | | | | | - |
| **மொத்த விற்பனைகளும் மாற்றல்களும்** | **3,720,549** | **46,425,433** | **70,587,654** | **132,582,906** | **61,401,894** | **58,523,648** | **39,500,527** | **14,500,936** | **13,867,660** | **7,335,286** | **8,884,249** | **5,938,176** | **4,100,008** | **88,309,374** | 2,185,864,145 |
| | | | | | | | | | | | | | | | - |
| விற்பனைக் கிரயமும் மாற்றல்களும் | 2,916,293 | 37,662,613 | 57,420,269 | 109,779,557 | 52,520,378 | 48,611,233 | 31,803,131 | 11,399,573 | 10,815,214 | 5,166,766 | 7,269,670 | 4,738,996 | 3,382,391 | 61,187,211 | 1,820,915,642 |
| **விற்பனை மற்றும் மாற்றல்களின்மீது** | | | | | | | | | | | | | | | - |
| **மொத்த இலாபம்** | **804,256** | **8,762,820** | **13,167,385** | **22,803,349** | **8,881,516** | **9,912,415** | **7,697,396** | **3,101,362** | **3,052,446** | **2,168,520** | **1,614,579** | **1,199,180** | **717,617** | **27,122,163** | **364,948,503** |
| **நிருவாகச் செலவுகள்** | | | | | | | | | | | | | | | |
| ஆளணிச் செலவுகள் | 872,109 | 3,335,202 | 5,703,417 | 11,118,621 | 6,876,762 | 4,501,751 | 3,998,686 | 2,241,881 | 2,743,392 | 1,101,328 | 1,077,600 | 993,749 | 1,138,858 | 2,893,004 | 160,282,049 |
| பிரயாணச் செலவுகள் | 250 | 1,400 | 214 | 1,150 | 3,790 | 11,030 | 6,343 | 19,393 | 210,085 | - | 738 | 3,610 | 200 | 9,432 | 377,401 |
| வழங்கல்கள், தேவைகள் | 21,545 | 162,781 | 380,323 | 173,327 | 133,847 | 133,947 | 106,465 | 165,711 | 5,974 | 75,924 | 1,834 | 1,431 | 3,937 | 35,620 | 3,348,990 |
| திருத்தங்கள், பராமரிப்பு | 75 | 51,507 | 97,076 | 36,875 | 102,576 | 166,196 | 129,893 | 8,773 | 25,629 | 100,403 | 3,322 | 12,595 | 7,904 | 53,479 | 2,563,803 |
| போக்குவரத்து, தொடர்பாடல் | 248,428 | 2,566,605 | 2,327,360 | 3,077,231 | 2,241,427 | 2,765,808 | 2,383,371 | 363,063 | 4,176,105 | 1,036,307 | 108,710 | 136,222 | 93,758 | 1,742,645 | 65,208,009 |
| பயன்பாடுகள், பிற சேவைகள் | | | | | | | | | | | | | | | - |
| | | | | | | | | | | | | | | | - |
| **பிற செயற்பாட்டுச் செலவுகள்** | | | | | | | | | | | | | | | |
| விற்பனை, விநியோகச் செலவுகள் | 120,258 | 267,623 | 241,919 | 568,547 | 411,637 | 226,527 | 142,097 | 126,508 | 33,474 | 181,972 | 18,752 | 74,288 | 96,880 | 65,259 | 7,134,443 |
| **மொத்த மேந்தலைச் செலவுகள்** | **1,262,665** | **6,385,120** | **8,750,310** | **14,975,751** | **9,770,039** | **7,805,259** | **6,766,856** | **2,925,330** | **7,194,660** | **2,495,934** | **1,210,957** | **1,221,896** | **1,341,538** | **4,799,438** | **238,914,696** |
| **தேறிய இலாபம் / (நட்டம்)** | **(458,409)** | **2,377,701** | **4,417,076** | **7,827,598** | **(888,523)** | **2,107,156** | **930,540** | **176,032** | **(4,142,214)** | **(327,414)** | **403,623** | **(22,716)** | **(623,921)** | **22,322,725** | **126,033,807** |

**வருமானக் கூற்று - அரச ஒசுசலக்கள்**

மீளாய்வாண்டில் பிரதான களஞ்சியத்திலிருந்து ROS விற்பனை நிலையங்களுக்கு மாற்றல்கள்மீதான கழிவு 9%இலிருந்து 13%ஆக அதிகரித்துள்ளது. இதன்விளைவாக ஒசுசல இலாபகரத்தன்மை 4%ஆல் அதிகரித்துள்ளது. எனினும் அது கூட்டுத்தாபனத்தின் ஒட்டுமொத்த இலாபகரத்தன்மையைப் பாதிக்கவில்லை.

**இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்**

**2012 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கான காசுப்பாய்வுக் கூற்று**

| | 2012<br>ரூ. | 2011<br>மீளக்கூறப்பட்டது<br>ரூ. |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப்பாய்வு** | | |
| வரிக்குமுன் வரிக்குமுன் நிகர இலாபம் | **464,612,012** | **321,975,574** |
| **சீராக்கல்களாவன:** | | |
| தேய்மானம் | 32,438,191 | 27,663,472 |
| ஆண்டுக்கான பணிக்கொடை ஏற்பாடு | 13,396,159 | 11,191,815 |
| காணிக்குத்தகை கடன்தீர்த்தல் - இரத்மலானை | 160,000 | 160,000 |
| நிலையான சொத்துக்கள் கையுதிர்ப்பு இலாபம் | - | (2,682,498) |
| குத்தகை கடன்தீர்த்தல் | (1,147,575) | (321,518) |
| கைவரப்பெறாத இலாபம் | (3,257,373) | 2,679,004 |
| நட்டக் கடன்களுக்கு ஏற்பாடு | 263,926,011 | 113,667,421 |
| இருப்பு நட்டங்கள் | 56,338 | 212,629 |
| சேதமான, காலாவதியான இருப்புக்கு ஏற்பாடு - SPC | 22,939,226 | - |
| சேதமான, காலாவதியான இருப்புக்கு ஏற்பாடு - DHS | 47,472,817 | 114,252,765 |
| வட்டிச் செலவுகள் | 339,035,117 | 419,235,181 |
| **தொழிற்படுமூலதன மாற்றங்களுக்குமுன் செயற்பாட்டு இலாபம்** | **1,179,630,923** | **1,008,033,846** |
| வர்த்தகம், பிற வருமதிகளில் அதிகரிப்பு/குறைவு | (6,197,661,919) | (1,782,647,729) |
| வைப்புகள், முற்கொடுப்பனவுகளில் அதிகரிப்பு/குறைவு | 900,023 | (1,894,302) |
| பொருட்பட்டியல்களில் அதிகரிப்பு/குறைவு | (212,221,076) | (20,647,299) |
| இடைப்போக்கிலுள்ள பொருட்களில் அதிகரிப்பு/குறைவு | 1,151,914,384 | 664,558,004 |
| வர்த்தக சென்மதிகளில் அதிகரிப்பு/குறைவு | 1,232,803,185 | 232,753,919 |
| நடைபெறும் வேலையில் அதிகரிப்பு/குறைவு | 615,200 | (15,628,606.00) |
| பிற்போடப்பட்ட வருமானம் | 974,201 | (1,240,969) |
| **செயற்பாடுகளிலிருந்து ஈட்டிய காசு** | **(2,843,045,079)** | **83,286,864** |
| செலுத்திய வருமான வரி | (238,451,841) | (238,404,225) |
| செலுத்திய பணிக்கொடை | (8,323,079) | (12,923,183) |
| செலுத்திய வட்டி | (339,035,117) | (419,235,181) |
| செலுத்திய திறைசேரி வரி/ பங்கிலாபம் | - | (15,000,000) |
| **விதிவிலக்கான இனங்களுக்கு முன் காசுப்பாய்வு** | **(585,810,037)** | **(685,562,590)** |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசு** | **(3,428,855,116)** | **(602,275,726)** |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப்பாய்வு** | | |
| ஆதனம், பொறி, சாதனம் கொள்வனவு | (135,646,541) | (55,815,022) |
| நிலையான சொத்துக்கள் கையுதிர்ப்பு | - | 2,682,498 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்திய தேறிய காசு** | **(135,646,541)** | **(53,132,524)** |
| **காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றில் தேறிய அதிகரிப்பு** | **(3,564,501,657)** | **(655,408,250)** |
| **காலப்பகுதி ஆரம்பத்தில் காசும் காசுக்குச் சமமானவையும்** | **(4,115,848,523)** | **(3,460,440,273)** |
| **காலப்பகுதி முடிவில் காசும் காசுக்குச் சமமானவையும் (குறிப்பு அ)** | **(7,680,350,180)** | **(4,115,848,523)** |

**<u>குறிப்பு அ: காசும் காசுக்குச் சமமானவையும்</u>**

| | 2012<br>ரூ. | 2011<br>ரூ. |
|---|---|---|
| கையிலும் வங்கியிலும் உள்ள காசு | **185,894,745** | **575,436,414** |
| திறைசேரி உண்டியல் ்முதலீடு | 30,464,204 | 25,370,468 |
| வங்கி மேலதிகப்பற்று | **(7,896,709,130)** | **(4,716,655,405)** |
| | **(7,680,350,180)** | **(4,115,848,523)** |

# கணக்கீட்டுக் கொள்கைகள்

## 1. கூட்டாண்மைத் தகவல்

### 1.1 பொதுவானவை

அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் 1957இன் 49ஆம் இலக்க அரச கைத்தொழிற் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின்கீழ் 1971இல் கூட்டிணைக்கப்பட்ட ஓர் அரசாங்கக் கூட்டுத்தாபனம் என்பதுடன், இலங்கையை உறைவிடமாகவும் கொண்டுள்ளது. அது இல. 75, சேர் பாரன் ஜயதிலக மாவத்தை, கொழும்பு 01இல் அமைந்துள்ள ஓர் அரசாங்கக் கூட்டுத்தாபனம்.

கூட்டுத்தாபனம் டிசெம்பர் 31இல் முடிவடையும் பன்னிரண்டு மாதங்களுக்கான நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கின்றது. இந்நிதிக்கூற்றுகள் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்படுகின்றன.

### 1.2 பிரதான நடவடிக்கைகள்

பிரதான நடவடிக்கைகளாவன,

(அ) திறந்த சந்தையில் மருந்துகளினதும் உடனலம்காக்கும் இனங்களினதும் இறக்குமதி, கொள்வனவு, விற்பனை மற்றும் விநியோகம்

(ஆ) சுகாதார சேவைகள் திணைக்களத்துக்கு மருந்துகளையும் உடனலம்காக்கும் இனங்களையும் இறக்குமதி செய்தலும் வழங்குதலும்

(இ) ஜீவனி, குளுக்கோஸ், பென்சைல் பென்சோவேற் கிரீம் என்பவை உட்பட ஒரு தொடர்வரிசையான இனங்களைத் தயாரித்தலும் சந்தைப்படுத்தலும்

(ஈ) மாதிரிச் சோதனைகளும் ஆய்வுகூடச் சேவைகளும் வழங்குதல்

## 2. தயாரிப்புக்கான அடிப்படை

### 2.1 தயாரிப்புக்கான அடிப்படையும் 2012 சனவரி 01இல் அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற நிதிக் காலப்பகுதிக்குப் பயனுறுகின்றவாறு SLAS (SLFRS மற்றும் LKAS) நியமங்களைக் கைக்கொள்ளுதலும்

நிதிக் கூற்றுகள் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தால் வழங்கப்பட்டவாறு SLFRS மற்றும் LKAS ஆகியவற்றைக்கொண்ட இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்கத் தயாரிக்கப்பட்டுள்ளன.

2011 டிசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டு அடங்கலாக அதுவரையிலான எல்லாக் காலப்பகுதிகளுக்கும் கூட்டுத்தாபனம் அதன் நிதிக் கூற்றுகளை 2011 டிசெம்பர் 31 வரை செயல்விளைவிலிருந்த SLAS நியமங்களுக்கிணங்கத் தயாரித்தது. 2012 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கான இந்நிதிக்கூற்றுகள்தான் 2012 சனவரி 01இல் அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற காலப்பகுதிகளுக்குப் பயனுறுகின்ற இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்கக் கூட்டுத்தாபனம் முதன்முறையாகத் தயாரித்துள்ள கூற்றுகள். இடைமாற்றம் பற்றிய விளக்கத்துக்கு குறிப்பு 7ஐப் பார்க்கவும்.

கூட்டுத்தாபனம், குறிப்பு 7இல் வெளிப்படுத்தப்பட்ட இடைமாற்றத் தெரிவுகளுக்கும் விதிவிலக்குகளுக்கும் அமைவாக, 2010 சனவரி 01இல் அதன் தொடக்க நிதிநிலைக் கூற்றைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளை, இக்கொள்கைகள் எப்போதும் வலுவில் இருந்தவாறு எல்லாக் காலப்பகுதிகளுக்கும் நிலைமாறாது பிரயோகித்துள்ளது.

### 2.2 அளவுக்கான அடிப்படை

நிதிக் கூற்றுகள் சொத்துக்களுக்கும் பொறுப்புக்களுக்கும் நியாயமான விலைமதிப்பீட்டில் தவிர, வரலாற்றுக் கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுகள் நிறுவனத்தின் நடைமுறையிலுள்ளதும் அதனால் சமர்ப்பிக்கப்படுகின்றதுமான நாணயமான இலங்கை ரூபாயில் சமர்ப்பிக்கப்படுகின்றன.

## 3. முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்

### 3.1.1 முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள்

இந்நிதிக் கூற்றுகளைத் தயாரிப்பதில் கூட்டுத்தாபனம் பயன்படுத்திய முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் பின்வருவனவாகும்.

### 3.1.2 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் சாதனம்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் சாதனம் என்பவை திரண்ட தேய்மானம் மற்றும் திரண்ட ஊறுபாட்டு நட்டங்கள் ஏதுமிருப்பின் அவை கழித்த கிரயத்தில் கூறப்படுகின்றன. அத்தகைய கிரயம் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் சாதனத்தின் ஆக்கக்கூறான பகுதிகளைப் பதிலீடுசெய்கின்ற கிரயத்தையும், அங்கீகார விதிமுறைகள் நிறைவேற்றப்படுமாயின், நீண்டகால நிருமாணக் கருத்திட்டங்களுக்கான கடன்படல் கிரயங்களையும் உள்ளடக்குகின்றது.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் சாதனத்தின் முக்கிய பகுதிகள் இடையிடையே பதிலீடுசெய்யப்படவேண்டுமாயின் கூட்டுத்தாபனம், பதிலீடுசெய்யப்பட்ட பகுதி ஒப்புக்கொள்ளப்படுதலை நீக்கி, புதிய பகுதியை அதன் சொந்தப் பயனுள்ள ஆயுள்காலத்துடனும் தேய்மானத்துடனும் ஒப்புக்கொள்கின்றது. அதேபோன்று பெரும் கண்காணிப்பொன்று நடத்தப்படும்போது, ஒப்புக்கொள்ளப்படும் விதிமுறைகள் திருப்திசெய்யப்படுமாயின், அதன் கிரயம் ஒரு பதிலீடாகப் பொறித்தொகுதி மற்றும் ஆதனத்தின் எடுத்துச்செல்லப்படும் தொகையில் ஒப்புக்கொள்ளப்படுகின்றது. ஏனைய எல்லாத் திருத்த மற்றும் பராமரிப்புக் கிரயங்களும் வருமானக்கூற்றில் உறப்பட்டவையாக ஒப்புக்கொள்ளப்படுகின்றன.

#### 3.1.2.1 குத்தகை ஆதனம்

கூட்டுத்தாபனம் இரத்மலானைக் காணியை ஒரு நிதிக் குத்தகையாக வகைப்படுத்தி மொத்தக் குத்தகைப் பெறுமதியைக் காணியின் எஞ்சியுள்ள பயனுள்ள ஆயுள்காலத்தில் கடன்தீர்க்கின்றது.

### 3.1.3 தேய்மானம்

ஆண்டின்போது கையேற்ற மற்றும் கையுதிர்த்த ஆதனம், பொறித்தொகுதி மற்றும் சாதனத்தின்மீது சரிசம வீதப்படியான அடிப்படையில் தேய்மான ஏற்பாடு செய்யப்படுகின்றது.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் சாதனத்தின் பயனுள்ள ஆயுள்காலம் பின்வருமாறு:

| | |
|---|---|
| கட்டடங்கள் | 40 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | 3 – 17 ஆண்டுகள் |
| தளபாடம், பொருத்திகள் | 10 ஆண்டுகள் |
| சாதனங்கள் | 5 ஆண்டுகள் |
| பொறித்தொகுதி, இயந்திரம் | 8 ஆண்டுகள் |
| ஈருருளிகள் | 6 – 7 ஆண்டுகள் |
| கணினிகள் | 4 ஆண்டுகள் |
| நூலகப் புத்தகங்கள் | 5 ஆண்டுகள் |

### 3.1.4 நடைபெறும் மூலதன வேலை

ஐந்தொகைத் தேதியில் மூலதனமாக்கப்படாதனவாக ஆண்டின்போது உறப்பட்ட மூலதனச் செலவுகள் நடைபெறும் மூலதன வேலையாகக் காட்டப்படுகின்ற அதேவேளையில் ஆண்டின்போது மூலதனமாக்கப்பட்டனவும் பயன்படுத்தப்படுவனவுமான சொத்துக்கள் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் சாதனத்துக்கு மாற்றப்பட்டுள்ளன.

### 3.1.5 உருப்படியல்லாத சொத்துக்கள்

தனிவேறாகக் கையேற்கப்பட்ட உருப்படியல்லாத சொத்துக்கள் கிரயத்தில் தொடக்கத்தில் ஒப்புக்கொள்ளப்படுவதன் பேரில் அளக்கப்படுகின்றன. தொடக்க ஒப்புக்கொள்ளலைத் தொடர்ந்து உருப்படியல்லாத சொத்துக்கள், திரண்ட கடன்தீர்த்தல் மற்றும் திரண்ட ஊறுபாட்டு நட்டங்கள் ஏதுமிருப்பின், அவை கழித்த கிரயத்தில் எடுத்துச் செல்லப்படுகின்றன. மூலதனமாக்கப்பட்ட அபிவிருத்திக் கிரயங்கள் நீங்கலாக, உள்ளகரீதியாக உருவாக்கப்பட்ட உருப்படியல்லாத சொத்துக்கள் மூலதனமாக்கப்படுவதில்லையென்பதுடன் செலவினம் அது உறப்பட்ட ஆண்டில் வருமானக்கூற்றில் பிரதிபலிக்கவும்படுகின்றது.

### 3.1.6 நிதிசாராத சொத்துக்களின் ஊறுபாடு

கூட்டுத்தாபனம் ஒவ்வொரு அறிக்கையிடும் தேதியிலும் சொத்தொன்று ஊறுபட்டிருக்கக்கூடியதற்கான அறிகுறி இருக்கின்றதாவென்று மதிப்பீடுசெய்கின்றது. ஏதேனும் அறிகுறி இருக்குமாயின் அல்லது ஒரு சொத்துக்கு வருடாந்த ஊறுபாட்டுச் சோதனை தேவைப்படுமாயின் சொத்தின் திரும்பப் பெறக்கூடிய தொகையைக் கூட்டுத்தாபனம் மதிப்பிடுகின்றது.

### 3.1.7 வரிவிதிப்பு

#### 3.1.7.1 நடப்பு வரிவிதிப்பு

நடப்பு வரிச் சொத்துக்களும் பொறுப்புக்களும், நடப்பாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பில் வரி அதிகாரிகளிடமிருந்து திரும்பப் பெறக்கூடியதென அல்லது அவர்களுக்குச் செலுத்தவேண்டியதென எதிர்பார்க்கப்படும் தொகைகளைக் கொண்டுள்ளது. இத்தொகைகளைக் கணிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட வரி வீதம் மற்றும் வரிச் சட்டங்கள் ஐந்தொகைத் தேதிக்கிடையில் ஆக்கப்பட்டவை அல்லது பொருளளவில் ஆக்கப்பட்டவையாகும்.

அதற்கிணங்க வரிவிதிப்புக்கான ஏற்பாடு, 2000இன் 38ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தினதும் அதற்கான திருத்தங்களினதும் ஏற்பாடுகளுக்கும், சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட வீதங்களுக்கும் இணங்க வரிவிதிப்பு நோக்கங்களுக்காகச் சீராக்கப்பட்ட ஆண்டுக்கான இலாபத்தின் அடிப்படையில் செய்யப்படுகின்றது.

#### 3.1.7.2 பிற்போடப்பட்ட வரிவிதிப்பு

பிற்போடப்பட்ட வரிப்பொறுப்புகளுக்கும் சொத்துக்களுக்கும் ஐந்தொகைத் தேதியில் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒவ்வொரு வகையான தற்காலிக வேறுபாடுகளும் கவனத்திற்கொள்ளப்பட்டன. பிரதானமாக நிதிக்கூற்றுகளில் நிலையான சொத்துக்கள், இளைப்பாற்றுப் பணிக்கொடைக்கு ஏற்பாடு, கடன்பெற்றவர்களின் ஊறுபாடு என்பவை கவனத்திற் கொள்ளப்பட்டன. பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் வருமான வரி வீதத்தில் அளக்கப்படுகின்றன.

### 3.2.1 பொருட்பட்டியல்கள்

பொருட்பட்டியல்கள், ‘முதலில் வந்தது முதலில் போகும்’ என்ற அடிப்படையில் விலைமதிக்கப்பட்ட வழக்கிழந்த மற்றும் மெதுவாக அசைகின்ற இனங்களுக்கு உரிய சரியீடு செய்த பின்னர், கிரயம் மற்றும் தேறிய கைவரக்கூடிய பெறுமதி ஆகியவற்றில் எது குறைந்ததோ அதில் ஒப்புக்கொள்ளப்படுகின்றன.

### பொருட்பட்டியல்களின் அளவு

### 3.2.2 பொருட்பட்டியல்களின் கிரயம்

**மூலப்பொருட்கள் - ORS**

ஏதேனும் இடைநேர்விளைவான செலவுகளுடன் சேர்த்துக் கொள்வனவுகளின் கிரயம்.

**நடைபெறும் வேலை**

மூலப்பொருள் கிரயமும் மாறக்கூடிய முழுமையான தயாரிப்புச் செலவுகளும்.

**பூர்த்தியான பண்டங்கள்**

மூலப்பொருள் கிரயமும் மாறக்கூடிய முழுமையான தயாரிப்புச் செலவுகளும்.

### 3.2.3 காசும் காசுக்குச் சமமானவையும்

காசும் காசுக்குச் சமமானவையும் கையிலும் வங்கியிலுமுள்ள காசு, திறைசேரி உண்டியல் முதலீடுகள், பன்னிரண்டு மாதங்கள் அல்லது அதற்குக் குறைந்த தொடக்க முதிர்ச்சிகளைக்கொண்ட ஏனைய குறுகியகால உயர் திரவநிலை முதலீடுகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன. வங்கி மேலதிகப்பற்றுகள் ஐந்தொகையில் நடப்புப் பொறுப்புகளில் கடன்படல்களினுள் காட்டப்படுகின்றன.

### 3.2.4 ஆராய்ச்சிக் கிரயங்கள்

புதிய விஞ்ஞான அல்லது தொழில்நுட்ப அறிவையும் விளக்கத்தையும் பெற்றுக்கொள்ளும் எதிர்பார்ப்புடன் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சி நடவடிக்கைகள்மீதான செலவினம் அது உறப்படுகின்றபோது இலாபத்தில் அல்லது நட்டத்தில் ஒப்புக்கொள்ளப்படுகின்றது.

## 4. பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்

### 4.1 இளைப்பாற்று நன்மைக் கடப்பாடுகள்

### 4.1.1 வரையறுக்கப்பட்ட நன்மைத்திட்டம் - இளைப்பாற்றுப் பணிக்கொடை

கூட்டுத்தாபனம் 1983இன் 12ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் பிரகாரம் பணிக்கொடை செலுத்தும் பொறுப்புள்ளது. கூட்டுத்தாபனத்தில் ஐந்தாண்டுகள் தொடர்ச்சியான சேவையைப் பூர்த்திசெய்வதன்பேரில் மட்டும்தான் ஓர் ஊழியருக்கான பணிக்கொடைப் பொறுப்பு எழுகின்றது. இப்பொறுப்பை நிறைவேற்றும்பொருட்டு ஐந்தொகையில் ஓர் ஏற்பாடு முன்கொண்டுசெல்லப்படுகின்றது. ஓராண்டின் தொடக்கத்தில் முன்கொண்டுவரப்பட்ட ஏற்பாட்டுக்கும் ஆண்டின் முடிவில் எடுத்துச்செல்லப்படும் ஏற்பாட்டுக்கும் இடையிலான வேறுபாடு வருமானக்கூற்றில் சரிசெய்யப்படுகின்றது.

கணிப்பீடுகளில் பயன்படுத்திய பிரதான எடுகோள்கள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| எதிர்பார்க்கப்படும் வருடாந்தச் சராசரிச் சம்பள உயர்வு வீதம் | - | 7.15% |
| கழிவு வீதம்/வட்டி வீதம் | - | 11.69% |
| பணியாளர் புரள்வுக் காரணி | - | 2.74% |

இப்பொறுப்புக்கு வெளிவாரியாக நிதியிடப்படவில்லை. இந்த இனம் ஐந்தொகையில் நடப்பிலற்ற பொறுப்புகளின்கீழ் தொகுக்கப்படுகின்றது.

### 4.1.2 வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் - ஊழியர் சேமலாபநிதி மற்றும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதி

கூட்டுத்தாபனம் ஊழியர் சேமலாபநிதிக்கும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதிக்கும் அந்தந்த நிதிகளுக்குப் பொருத்தமான ஒழுங்குவிதியின் பிரகாரம் பங்களிப்புச்செய்கின்றது. ஊழியர்களை உள்ளடக்குகின்ற திட்டங்களுக்குப் பங்களிப்புகள் செய்வதற்கான கடப்பாடுகள் வருமானக்கூற்றில் ஒரு செலவாக ஒப்புக்கொள்ளப்படுகின்றன.

**ஊழியர் சேமலாப நிதி**

கூட்டுத்தாபனமும் ஊழியர்களும் மொத்தச் சம்பளத்தின் முறையே 12%ஐயும் 10%ஐயும் பங்களிப்புச்செய்கின்றனர்.

**ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதி**

ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதிக்குக் கூட்டுத்தாபனம் மொத்தச் சம்பளத்தின் 3%ஐ பங்களிப்புச்செய்கின்றது.

## 5. வருமானக்கூற்று

வருமானக் கூற்றைச் சமர்ப்பிக்கும் நோக்கத்துக்காக, செலவுகள் முறை கூட்டுத்தாபனச் செயல்நிறைவேற்றத்தின் ஆக்கக்கூறுகளை நியாயமானமுறையில் பிரதிநிதித்துவப்படுத்துவதனால், அந்நடைமுறை கைக்கொள்ளப்படுகின்றது.

### 5.1.1 வருவாயை ஒப்புக்கொள்ளல்

கூட்டுத்தாபனத்துக்குப் பொருளாதார நலன்கள் பாயுமென்பதுடன், கொடுப்பனவு எப்போது செய்யப்படுகின்றது என்பதைப்பொருட்படுத்தாது வருவாயையும் உறப்பட்ட அல்லது உறப்படவுள்ள தொடர்புடைய கிரயங்களையும் நம்பகமானமுறையில் அளக்கமுடியுமென்ற நிகழ்தகவும் இருக்குமிடத்து வருவாய் அட்டுறு அடிப்படையில் ஒப்புக்கொள்ளப்படுகின்றது. ஒப்பந்தரீதியாக வரையறுக்கப்பட்ட கொடுப்பனவு நியதிகளைக் கவனத்திற்கொண்டு, கிடைத்த அல்லது வருமதியான இழப்பீட்டின் நியாயமான பெறுமதியில் வருவாய் அளக்கப்படுகின்றது.

வருவாய் ஒப்புக்கொள்ளப்படுவதற்கு முன்னர் பின்வரும் குறித்த ஒப்புக்கொள்ளல் விதிமுறைகளும் நிறைவேற்றப்பட வேண்டும்:

**பண்டங்களின் விற்பனை**

பண்டங்களின் உடைமையுரிமைக்குரிய முக்கியமான இடர்களும் நேர்பயன்களும் வழமையாகப் பண்டங்கள் வழங்கப்படுவதன்பேரில், வாங்குபவருக்குக் கைமாறுகின்றபோது பண்டங்களின் விற்பனையிலிருந்து வருவாய் ஒப்புக்கொள்ளப்படுகின்றது.

**பிற வருமானம்**

பிற வருமானம் அட்டுறு அடிப்படையில் ஒப்புக்கொள்ளப்படுகின்றது.

**வட்டி வருமானம்**

கடன் தீர்த்த கிரயத்தில் அளக்கப்பட்ட எல்லா நிதிச் சாதனங்களுக்கும் விற்பனைக்குக் கிடைப்பனவாக வகைப்படுத்தப்பட்ட வட்டிகொண்ட நிதிச் சொத்துகளுக்கும் வட்டி வருமானம் அல்லது செலவுச் செயல்விளைவுள்ள வட்டி வீதத்தை (EIR) பயன்படுத்திப் பதிவுசெய்யப்படுகின்றது. இவ்வட்டி வீதம்தான் நிதிச் சொத்தின் அல்லது பொறுப்பின் தேறிய எடுத்துச்செல்லப்படும் தொகைக்கு, பொருத்தமானவாறு நிதிச் சாதனத்தின் எதிர்பார்க்கப்படும் ஆயுள் காலத்தில் அல்லது ஒரு குறுகிய காலத்தில் மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுக் கொடுப்பனவுகளை அல்லது பெறுகைகளைச் சரிநுட்பமாக முன்னதாகக் கொடுக்கின்றது.

**வழங்குனர்களிடமிருந்து வருமதியான கோரிக்கைகள்**

மேலதிகக் களஞ்சியக் கட்டணங்கள், தாமதக் கட்டணங்கள், குறை வழங்கல்கள் மற்றும் சேதங்கள் ஆகியவற்றுக்காக வழங்குனர்களிடமிருந்து வருமதியான கோரிக்கைகள், விளைவின் நிச்சயமற்ற தன்மையின் நிமித்தம் நிதிக்கூற்றுகளில் ஒப்புக்கொள்ளப்படவில்லை. எனினும் வருமானம் கைவரப்பெறுதல் நடைமுறையில் நிச்சயமென்கின்றபோது கோரிக்கை வருமானக்கூற்றில் ஒப்புக்கொள்ளப்படுகின்றது.

### 5.1.2 செலவுகள்

ஆண்டுக்கான இலாபத்தைத் தீர்மானிக்கையில் வியாபாரத்தைக் கொண்டுநடாத்துவதில் உறப்பட்ட எல்லாச் செலவினங்களும் வருமானத்தில் அறவிடப்பட்டுள்ளன. திருத்தங்களும் புதுப்பித்தல்களும் செலவினம் உறப்பட்ட ஆண்டில் இலாப நட்டத்தில் அறவிடப்படுகின்றன.

### 5.1.3 நிதிச் செலவுகள்

அதன் கருதப்பட்ட பயனுக்கு அல்லது விற்பனைக்கு ஆயத்தமாவதற்கு இன்றியமையாதவாறு கணிசமான காலம் எடுக்கின்ற ஒரு சொத்தின் கையேற்புக்கு, நிருமாணத்துக்கு அல்லது உற்பத்திக்கு நேரடியாகச் சாட்டக்கூடிய கடன்படல் கிரயங்கள் அந்தந்தச் சொத்துக்களின் கிரயத்தின் பகுதியாக மூலதனமாக்கப்படுகின்றன. ஏனைய எல்லாக் கடன்படல் கிரயங்களும் அவை இடம்பெறும் காலத்தில் செலவழிக்கப்படுகின்றன. கூட்டுத்தாபனத்தின் நிதிச் செலவுகள் மேலதிகப்பற்று வட்டி, நாணயக் கடிதம், தொடக்கச் செலவுகள் மற்றும் கடன் வசதி உடன்படிக்கைக் கட்டணங்கள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.

### 5.1.4 மேந்தலைகளுக்கிடையில் ஒதுக்கீடு

மேந்தலைகள், தொடர்புடைய நடவடிக்கைகளைப் பகுப்பாய்வுசெய்த பின்னர் நூற்றுவீத அடிப்படையில் SPC மற்றும் DHS ஆகியவற்றுக்கிடையில் ஒதுக்கப்பட்டுள்ளன. நிதிக்கூற்றுகளில் மேந்தலைகளின் ஒதுக்கமுறை பின்வருமாறு:

| | | DHS | SPC |
|---|---|---|---|
| (அ) | ஆளணி ஊதியங்கள் | 56% | 44% |
| (ஆ) | பிரயாணச் செலவுகள் | 10% | 90% |
| (இ) | வழங்கல்களும் தேவைப்பொருட்களும் | 25% | 75% |
| (ஈ) | திருத்தங்களும் பராமரிப்பும் | 50% | 50% |
| (உ) | போக்குவரத்து, தொடர்பாடல் பயன்பாடுகள் மற்றும் பிற சேவைகள் | 50% | 50% |
| (ஊ) | ஆராய்ச்சிக் கிரயம் | 65% | 35% |
| (எ) | மேலதிகப்பற்று வட்டி | 100% | - |

## 6. நிதிச்சாதனங்கள் - தொடக்கத்தில் ஒப்புக்கொள்ளலும் பின்தொடர்பான அளவீடும்

### 6.1 நிதிச் சொத்துக்கள்

### 6.1.1 தொடக்கத்தில் ஒப்புக்கொள்ளலும் அளவீடும்

LKAS 39 இன் நோக்கெல்லையினுள் வருகின்ற நிதிச் சொத்துக்கள் பொருத்தமானவாறு இலாபம் அல்லது நட்டம், கடன்களும் வருமதிகளும், முதிர்ச்சிவரை வைத்திருக்கப்படும் முதலீடுகள் மற்றும் விற்பனைக்குள்ள நிதிச் சொத்துக்கள் என்றவகையில் நியாயமான பெறுமதியில் நிதிச் சொத்துக்களாக வகைப்படுத்தப்படுவதுடன் நிதிச் சொத்துக்களின் வகைப்படுத்தலும் தொடக்க ஒப்புக்கொள்ளலில் தீர்மானிக்கப்படுகின்றது.

எல்லா நிதிச் சொத்துக்களும் தொடக்கத்தில் நியாயமான பெறுமதியிலும் இலாபம் அல்லது நட்டத்தினூடாக, நியாயமான பெறுமதியிலல்லாத சொத்துக்களின் விடயத்தில் நேரடியாகச் சாட்டக்கூடிய கொடுக்கல் வாங்கல் கிரயங்கள் கூட்டப்பட்டபோதிலும் ஒப்புக்கொள்ளப்படுகின்றன.

கூட்டுத்தாபன நிதிச் சொத்துக்கள் காசு மற்றும் குறுகியகாலத் திறைசேரி உண்டியல் முதலீடு, வர்த்தக மற்றும் பிற வருமதிகள், பணியாளர் கடன்கள் மற்றும் ஏனைய வருமதிகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.

### 6.1.2 பின்தொடர்பான அளவீடு

நிதிச் சொத்துக்களின் பின்தொடர்பான அளவீடு பின்வருமாறு அவற்றின் வகைப்படுத்தலில் தங்கியுள்ளது.

#### 6.1.2.1 இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் நிதிச் சொத்துக்கள்

இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் நிதிச் சொத்துக்கள் வர்த்தகத்துக்காக வைத்திருக்கப்படும் நிதிச் சொத்துக்களையும் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் தொடக்க ஒப்புக்கொள்ளுதலின் பேரில் குறித்துரைக்கப்பட்ட நிதிச் சொத்துக்களையும் உள்ளடக்குகின்றன. நிதிச் சொத்துக்கள் விற்பனைசெய்யும் அல்லது அடுத்த தவணையில் மீளக் கொள்வனவுசெய்யும் நோக்கத்துக்காகக் கையேற்கப்பட்டனவாயின் அவை வர்த்தகத்துக்காக வைத்திருக்கப்படுவனவாக வகைப்படுத்தப்படுகின்றன. 2011 மற்றும் 2012 டிசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுகளின்போது கூட்டுத்தாபனத்துக்கு இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் நிதிச் சொத்து எதுவும் இருக்கவில்லை.

#### 6.1.2.2 கடன்களும் வருமதிகளும்

கடன்களும் வருமதிகளும் செயற்படுகின்ற ஒரு சந்தையில் விலைகூறப்படாத நிலையான அல்லது நிர்ணயிக்கக்கூடிய கொடுப்பனவுகளைக்கொண்ட வேறொன்றிலிருந்து வராத நிதிச் சொத்துக்களாகும். அத்தகைய நிதிச் சொத்துக்கள் தொடக்க அளவீட்டின் பின்னர் பின்தொடராக செயல்விளைவுள்ள வட்டி வீத (EIR) முறையைப் பயன்படுத்தி, ஊறுபாடு கழித்த கடன் தீர்த்த கிரயத்தில் அளக்கப்படுகின்றன. கடன்தீர்த்த கிரயம் கையேற்பின்மீதான ஏதேனும் கழிவையும் அல்லது மிகைக் கட்டணத்தையும் EIRஇன் இன்றியமையாத ஒரு பகுதியான கட்டணங்களையும் அல்லது கிரயங்களையும் கணக்கில் கொள்வதன்மூலம் கணிக்கப்படுகின்றது. EIR கடன்தீர்த்தல் வருமானக்கூற்றில் நிதி வருமானத்தில் உள்ளடக்கப்படுகின்றது. ஊறுபாட்டிலிருந்து எழுகின்ற நட்டங்கள் வருமானக்கூற்றில் நிதிக் கிரயத்தில் ஒப்புக்கொள்ளப்படுகின்றன.

#### 6.1.2.3 முதிர்ச்சிவரை வைத்திருக்கப்படும் முதலீடுகள்

நிலையான அல்லது நிர்ணயிக்கக்கூடிய கொடுப்பனவுகளையும் நிலையான முதிர்ச்சிகளையும் கொண்ட வேறொன்றிலிருந்து வராத நிதிச் சொத்துக்கள், அவற்றை முதிர்ச்சிவரை வைத்திருப்பதற்கான திட்டவட்டமான நோக்கமும் ஆற்றலும் கூட்டுத்தாபனத்துக்கு இருக்குமாயின், முதிர்ச்சிவரை வைத்திருக்கப்படுவனவாக வகைப்படுத்தப்படுகின்றன. முதிர்ச்சிவரை வைத்திருக்கப்படும் முதலீடுகள் தொடக்க அளவீட்டின் பின்னர் செயல்விளைவுள்ள வட்டி முறையைப் பயன்படுத்தி, ஊறுபாடு கழித்த கடன்தீர்த்த கிரயத்தில் அளக்கப்படுகின்றன. கடன்தீர்த்த கிரயம் கையேற்பின்மீதான ஏதேனும் கழிவையும் அல்லது மிகைக் கட்டணத்தையும் EIRஇன் இன்றியமையாத ஒரு பகுதியான கட்டணங்களையும் அல்லது கிரயங்களையும் கணக்கில் கொள்வதன்மூலம் கணிக்கப்படுகின்றது. EIR கடன்தீர்த்தல் வருமானக்கூற்றில் நிதி வருமானத்தில் உள்ளடக்கப்படுகின்றது. ஊறுபாட்டிலிருந்து எழுகின்ற நட்டங்கள் வருமானக்கூற்றில் நிதிக் கிரயத்தில் ஒப்புக்கொள்ளப்படுகின்றன.

#### 6.1.2.4 விற்பனைக்குக் கிடைப்பனவாயுள்ள நிதி முதலீடுகள்

விற்பனைக்குக் கிடைப்பனவாயுள்ள நிதி முதலீடுகள் உரிமைப்பங்கையும் கடன் பிணையங்களையும் உள்ளடக்குகின்றன. வர்த்தகத்துக்கு வைத்திருக்கப்படுவனவாக வகைப்படுத்தப்படாத அல்லது இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் குறிப்பிடப்படாத உரிமைப்பங்கு முதலீடுகள் விற்பனைக்குக் கிடைப்பனவாயுள்ள முதலீடுகளாக வகைப்படுத்தப்படுகின்றன. எல்லையற்ற காலத்துக்கு வைத்திருக்கப்படும் நோக்குடையனவும் திரவ நிதித் தேவைகளுக்குத் துலங்கலாக அல்லது சந்தை நிலைமைகளில் மாற்றங்களுக்குத் துலங்கலாக விற்கப்படக்கூடியனவுமானவைதான் இவ்வகுதியிலுள்ள கடன் பிணையங்களாகும்.

விற்பனைக்குக் கிடைப்பனவாயுள்ள நிதி முதலீடுகள் தொடக்க அளவீட்டின் பின்னர், முதலீடு ஒப்புக்கொள்ளப்படாது போகும்வரை, கைவரப்பெறாத ஆதாயங்கள் அல்லது நட்டங்கள் விற்பனைக்குக் கிடைப்பனவாயுள்ள ஒதுக்கத்தில் வேறு விரிவான வருமானமாக ஒப்புக்கொள்ளப்படும்வகையில் நியாயமான பெறுமதியில் அளக்கப்படுகின்றன. முதலீடு ஒப்புக்கொள்ளப்படாதுபோகும்போது திரண்ட ஆதாயம் அல்லது நட்டம் வேறு தொழிற்பாட்டு வருமானத்தில் ஒப்புக்கொள்ளப்படுகின்றது, அல்லது ஊறுபடுத்தப்படுவதற்கு நிர்ணயிக்கப்படுகின்றது. அவ்வாறு நிர்ணயிக்கப்படுகின்றபோது திரண்ட நட்டம் வருமானக் கூற்றுக்கு நிதிக் கிரயங்களில் மீள வகைப்படுத்தப்பட்டு விற்பனைக்குக் கிடைப்பதாயுள்ள ஒதுக்கத்திலிருந்து நீக்கப்படுகின்றது. விற்பனைக்குக் கிடைப்பனவாயுள்ள கடன் பிணையங்களிலிருந்து வட்டி வருமானம் செயல்விளைவுள்ள வட்டி முறையைப் பயன்படுத்திக் கணிக்கப்பட்டு இலாபத்தில் அல்லது நட்டத்தில் ஒப்புக்கொள்ளப்படுகின்றது.

கூட்டுத்தாபனம் அதன் விற்பனைக்குக் கிடைப்பனவாயுள்ள நிதிச் சொத்துக்களைக் கிட்டிய காலத்தில் விற்பதற்கான ஆற்றலும் நோக்கமும் இனியும் பொருத்தமானதாவென்று தீர்மானிப்பதற்கு அவற்றை மதிப்பீடுசெய்கின்றது. கூட்டுத்தாபனம் அரிதான சூழ்நிலைகளில் செயலற்ற சந்தைகளின் நிமித்தம் இந்நிதிச் சொத்துக்களை வர்த்தகஞ்செய்ய முடியாததனால் அவ்வாறு செய்வதற்கான முகாமையின் நோக்கம் முன்னறியக்கூடிய எதிர்காலத்தில் குறிப்பிடத்தக்க அளவில் மாறுகின்றபோது கூட்டுத்தாபனம் இந்நிதிச் சொத்துக்களை மீள வகைப்படுத்துகின்ற தெரிவைச் செய்யலாம். இந்நிதிச் சொத்துக்கள் கடன்கள் மற்றும் வருமதிகளின் வரைவிலக்கணத்தைப் பூர்த்திசெய்கின்றனவாகவும் முன்னறியக்கூடிய எதிர்காலம்வரை அல்லது முதிர்ச்சிவரை இவற்றைக் கூட்டுத்தாபனம் வைத்திருக்கும் நோக்கமும் ஆற்றலும் உள்ளதாகவும் இருக்கின்றபோது இவற்றைக் கடன்களும் வருமதிகளுமாக மீளவகைப்படுத்தல் அனுமதிக்கப்படுகின்றது. நிறுவனத்துக்கு நிதிச் சொத்தை முதிர்ச்சிவரை வைத்திருக்கும் ஆற்றலும் நோக்கமும் இருந்தால் மட்டும் முதிர்ச்சிவரை வைத்திருக்கும் வகுதிக்கு மீளவகைப்படுத்தல் அனுமதிக்கப்படுகின்றது.

விற்பனைக்குக் கிடைப்பதாயுள்ள வகுதிக்கு வெளியே மீளவகைப்படுத்தப்பட்ட ஒரு நிதிச்சொத்துத் தொடர்பில் உரிமைப்பங்கில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள அச்சொத்தின் முன்னைய ஆதாயம் அல்லது நட்டம் EIRஐ பயன்படுத்தி சொத்தின் எஞ்சியுள்ள ஆயுள்காலத்தில் இலாபத்துக்கு அல்லது நட்டத்துக்குக் கடன்தீர்க்கப்படுகின்றது. புதிய கடன்தீர்த்த கிரயத்துக்கும் எதிர்பார்க்கப்படும் காசுப்பாய்வுகளுக்கும் இடையிலான ஏதேனும் வேறுபாடும் EIRஐ பயன்படுத்தி சொத்தின் எஞ்சிய ஆயுள்காலத்தில் கடன்தீர்க்கப்படுகின்றது. இச்சொத்துக்கள் ஊறுபட்டனவாகப் பின்னர் தீர்மானிக்கப்படுமாயின் உரிமைப்பங்கில் பதிவுசெய்யப்பட்ட தொகை வருமானக்கூற்றுக்கு மீள வகைப்படுத்தப்படுகின்றது. கூட்டுத்தாபனத்துக்கு 2011 மற்றும் 2012 டிசெம்பர் 31இல் விற்பனைக்குக் கிடைப்பதாயுள்ள நிதிச்சொத்து எதுவும் இருக்கவில்லை.

#### 6.1.2.5 ஒப்புக்கொள்ளல் நீக்கம்

ஒரு நிதிச்சொத்து (அல்லது ஏற்புடையவிடத்து நிதிச்சொத்தின் ஒரு பகுதி அல்லது ஒத்த நிதிச்சொத்துக்களின் தொகுதியின் ஒரு பகுதி) பின்வரும் வேளைகளில் ஒப்புக்கொள்ளலிலிருந்து நீக்கப்படுகின்றது:

(i) சொத்துக்களிலிருந்து காசுப்பாய்வுகளைப் பெறுவதற்கான உரிமைகள் காலாவதியாகிவிட்டபோது;

(ii) சொத்திலிருந்து காசுப்பாய்வுகளைப் பெறுவதற்கான அதன் உரிமைகளைக் கூட்டுத்தாபனம் கைமாற்றிவிட்டுள்ளபோது அல்லது ‘அனுபவிப்பதற்கான’ ஓர் ஏற்பாட்டின்மூலம் மூன்றாந்தரப்பொன்றுக்கு காசுப்பாய்வுகளை முழுமையாகத் தாமதமின்றிச் செலுத்துவதற்கான ஒரு கடப்பாட்டை அது ஏற்றுள்ளபோது; அத்துடன் ஒன்றில்

(அ) கூட்டுத்தாபனம் சொத்தின் எல்லா இடர்களையும் நேர்பயன்களையும் கணிசமான அளவில் கைமாற்றியுள்ளவிடத்து, இன்றேல்

(ஆ) கூட்டுத்தாபனம் சொத்தின் எல்லா இடர்களையும் நேர்பயன்களையும் கணிசமான அளவில் கைமாற்றியிராத அல்லது தொடர்ந்து வைத்திராதபோதிலும் சொத்தின் கட்டுப்பாட்டைக் கைமாற்றியுள்ளவிடத்து.

#### 6.1.2.6 நிதிச்சொத்துகளின் ஊறுபாடு

ஒரு நிதிச்சொத்து அல்லது நிதிச்சொத்துக்களின் ஒரு தொகுதி ஊறுபட்டுள்ளமைக்கு மெய்யான சான்றெதுவும் உள்ளதாவென்று ஒவ்வொரு அறிக்கையிடும் தேதியிலும் கூட்டுத்தாபனம் மதிப்பீடுசெய்கின்றது. சொத்தின் தொடக்க ஒப்புக்கொள்ளலுக்குப் பின்னர் நிகழ்கின்ற ஒரு நிகழ்வின் அல்லது ஒன்றுக்குக்கூடிய நிகழ்வுகளின் விளைவான ஊறுபாட்டுக்கு மெய்யான சான்று உள்ளதாகவும் அந்நட்ட நிகழ்வு நிதிச்சொத்தின் அல்லது நிதிச்சொத்துக்களின் தொகுதியின் நம்பகமானமுறையில் மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப்பாய்வுகள்மீது தாக்கத்தைக் கொண்டதாகவும் இருக்குமிடத்துமட்டுந்தான் ஒரு நிதிச்சொத்து அல்லது நிதிச்சொத்துக்களின் ஒரு தொகுதி ஊறுபட்டதாகக் கருதப்படுகின்றது.

ஊறுபாட்டுக்கான சான்று, கடன்பெற்றவர்கள் அல்லது கடன்பெற்றவர்களின் குழு வட்டி அல்லது முதல் கொடுப்பனவுகளில் குறிப்பிடத்தக்க நிதி நெருக்கடியை, தவணை தவறுதலை அல்லது வழுக்குற்றத்தை எதிர்நோக்குவதற்கான அறிகுறிகளையும் அல்லது அவர்கள் வங்குரோத்தடைகின்ற அல்லது வேறு நிதி மீள் ஒழுங்கமைப்பைச் செய்கின்ற நிகழ்தகவையும் நிலுவைகளில் மாற்றங்கள் அல்லது தவணை தவறுதல்களுடன் தொடர்புடைய பொருளாதார நிலைமைகள் போன்ற, மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப்பாய்வுகளில் அளக்கக்கூடிய வீழ்ச்சியைக் காட்டுகின்ற அவதானிக்கக்கூடிய தரவுகளையும் உள்ளடக்கக்கூடும். நடப்பில் கூட்டுத்தாபனம் வர்த்தக வருமதிகளுக்கு ஒரு குறித்த ஏற்பாட்டை இனங்காண்கின்றது.

#### 6.1.2.7 கடன்தீர்த்த கிரயத்தில் எடுத்துச்செல்லப்படும் நிதிச்சொத்துக்கள்

கடன்தீர்த்த கிரயத்தில் எடுத்துச்செல்லப்படும் நிதிச் சொத்துகளுக்குக் கூட்டுத்தாபனம் தனிப்பட முக்கியமானவையான நிதிச்சொத்துகளுக்கு ஊறுபாடு தனிப்பட உள்ளமைக்கு அல்லது தனிப்பட முக்கியமானவையல்லாத நிதிச்சொத்துகளுக்கு ஊறுபாடு கூட்டாக உள்ளமைக்கு மெய்யான சான்று இருக்கின்றதாவென்று முதலில் மதிப்பீடு செய்கின்றது. முக்கியமானதான அல்லது அவ்வாறில்லாததான தனிப்பட மதிப்பீடு செய்யப்பட்ட ஒரு நிதிச்சொத்துக்கு ஊறுபாட்டுக்கான மெய்யான சான்று இல்லையென்று கூட்டுத்தாபனம் தீர்மானிக்குமாயின், அது ஒத்த கடன் இடர் பண்புகளைக்கொண்ட நிதிச்சொத்துக்களின் தொகுதியில் அச்சொத்தை உள்ளடக்கி ஊறுபாட்டுக்காக அவற்றைக் கூட்டாக மதிப்பீடுசெய்கின்றது. ஊறுபாட்டுக்குத் தனிப்பட மதிப்பீடுசெய்யப்பட்டனவும் ஊறுபாட்டு நட்டம் ஒப்புக்கொள்ளப்பட்டனவுமான சொத்துக்கள் ஊறுபாட்டுக்கான கூட்டு மதிப்பீட்டில் உள்ளடக்கப்படுவதில்லை.

ஊறுபாட்டு நட்டம் ஏற்பட்டுள்ளதென்று மெய்யான சான்று இருக்குமாயின் சொத்துகளின் எடுத்துச்செல்கின்ற தொகைக்கும் மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப்பாய்வுகளின் நிகழ்காலப் பெறுமதிக்கும் (இன்னமும் உறப்பட்டிராத எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்படும் கடன் நட்டங்கள் நீங்கலாக) இடையிலான வேறுபாடாக நட்டத்தொகை அளக்கப்படுகின்றது. மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப்பாய்வுகளின் நிகழ்காலப் பெறுமதி நிதிச்சொத்தின் தொடக்கச் செயல்விளைவுள்ள வட்டி வீதத்தில் கழித்துக்கொள்ளப்படுகின்றது.

கூட்டுத்தாபனம் ஒவ்வொரு கடன்பெற்றவர் வகுதிகளுக்கும் குறித்த ஊறுபாட்டையும் பொதுக் கடன்பெற்றவர்களின் வெவ்வேறு வகுதிகளுக்கும் கூட்டு ஊறுபாட்டையும் செய்துள்ளது.

### 6.2 நிதிப் பொறுப்புகள்

#### தொடக்க ஒப்புக்கொள்ளலும் அளவீடும்

SLAS (SLFRS/LKAS) 39 இன் நோக்கெல்லைக்குட்பட்ட நிதிப் பொறுப்புகள் இலாபம் அல்லது நட்டம், கடன்கள் மற்றும் கடன்படல்கள் ஊடாக நியாயமான பெறுமதியில் நிதிப்பொறுப்புகளாக அல்லது பொருத்தமானவாறு செயல்விளைவுள்ள இழப்பீட்டு ஏற்பாடொன்றில் மற்றொன்றிலிருந்து வருகின்றனவாகக் குறிக்கப்பட்ட இழப்பீட்டு ஏற்பாட்டுச் சாதனங்களாக வகைப்படுத்தப்படுகின்றன. கூட்டுத்தாபனம் தொடக்க ஒப்புக்கொள்ளலின்போது அதன் நிதிப்பொறுப்புகளின் வகைப்படுத்தலைத் தீர்மானிக்கின்றது.

எல்லா நிதிப்பொறுப்புகளும் தொடக்கத்தில் நியாயமான பெறுமதியில் ஒப்புக்கொள்ளப்படுகின்றன. கடன்களும் கடன்படல்களும் கடன்தீர்த்த கிரயத்தில் எடுத்துச்செல்லப்படுகின்றன. இது நேரடியாகச் சாட்டக்கூடிய கொடுக்கல் வாங்கல் கிரயங்களை உள்ளடக்குகின்றது. கூட்டுத்தாபனத்தின் நிதிப்பொறுப்புகள் வர்த்தக மற்றும் பிற சென்மதிகளையும் வங்கி மேலதிகப்பற்றுகளையும் உள்ளடக்குகின்றன.

#### பின்தொடர்பான அளவீடு

நிதிப்பொறுப்புகளின் அளவீடு கடன்தீர்த்த கிரயத்திலாகும்.

#### ஒப்புக்கொள்ளல் நீக்கம்

ஒரு நிதிப்பொறுப்பின்கீழான கடப்பாடு நிறைவேற்றப்படும்போது அல்லது இரத்துச்செய்யப்படும்போது அல்லது காலாவதியாகின்றபோது அப்பொறுப்பு ஒப்புக்கொள்ளலிலிருந்து நீக்கப்படுகின்றது.

## 7. SLAS (SLFRS/LKAS) ஐ முதல்தடவையாகக் கைக்கொள்ளல்

2012 டிசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான இந்நிதிக்கூற்றுகள்தான் SLFRS/LKAS ஐ உள்ளடக்கிய SLAS நியமங்களுக்கிணங்க கூட்டுத்தாபனத்தால் முதன்முறையாகத் தயாரிக்கப்பட்டவை. 2011 டிசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டு உட்பட அதுவரையிலான காலப்பகுதிகளுக்குக் கூட்டுத்தாபனம் அதன் நிதிக் கூற்றுகளை முந்திய இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்கத் தயாரித்தது.

அதற்கிணங்கக் கூட்டுத்தாபனம் 2012 சனவரி 01இல் அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற காலப்பகுதிகளுக்கு ஏற்புடைய SLFRS/LKAS ஐ உள்ளடக்கிய SLAS நியமங்களுக்கு இணங்குகின்ற நிதிக்கூற்றுகளை, கணக்கீட்டுக் கொள்கைகளில் விவரிக்கப்படுகின்றவாறு 2011 டிசெம்பர் முடிவடைந்த ஆண்டுக்கான ஒப்பீட்டுக் காலப்பகுதித் தரவுகளுடன் தயாரித்துள்ளது.

இந்நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கையில் கூட்டுத்தாபனத்தின் நிதிநிலை பற்றிய தொடக்கக் கூற்று, SLFRS/LKAS ஐ உள்ளடக்கிய SLAS நியமங்களுக்கான கூட்டுத்தாபனத்தின் இடைமாற்றத் தேதியான 2011 சனவரி 1இல் இருந்தவாறு தயாரிக்கப்பட்டது. 2011 சனவரி 01இல் இருந்தவாறு அதன் நிதிநிலை பற்றிய SLAS கூற்றையும் 2011 டிசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான முன்னர் வெளியிடப்பட்ட SLAS நிதிக்கூற்றுகளையும் மீளக்கூறுவதில் கூட்டுத்தாபனத்தால் செய்யப்பட்ட பிரதான சீராக்கல்களை இக்குறிப்பு விளக்குகின்றது.

#### பிரயோகிக்கப்பட்ட விலக்குகள்

SLFRS 1 இலங்கைக் கணக்கீட்டு நியமங்களை முதல்தடவையாகக் கைக்கொள்ளுதலானது குறித்தசில SLAS (SLFRS/LKAS)ஐ பின்னோக்கியதாகப் பிரயோகிப்பதிலிருந்து முதல்தடவை கைக்கொள்பவர்களுக்குச் சில விலக்குகளை அளிக்கின்றது.

கூட்டுத்தாபனம் பின்வரும் விலக்கைப் பிரயோகித்துள்ளது:

முந்திய SLAS நியமங்களுக்கிணங்கத் தயாரிக்கப்பட்ட நிதிநிலை பற்றிய கூற்றில் குறித்தசில ஆதனம், பொறித்தொகுதி மற்றும் சாதனம் மீள்விலைமதிப்பீட்டு மாதிரியில் எடுத்துச்செல்லப்பட்டன. கீழேயுள்ள குறிப்பில் தரப்பட்டுள்ள தேதிகளில் செய்யப்பட்ட மீள்விலைமதிப்பீட்டை, அவை பரந்தரீதியில் நியாயமான பெறுமதியுடன் ஒப்பிடத் தக்கவையாதலால், மீள்விலைமதிப்பீட்டுத் தேதியில் இருந்தவாறு கருதப்பட்ட கிரயமாகக் கருதுவதற்குத் தெரிந்தெடுத்தது.

**இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்**

**2012 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கான கணக்குகள்**

குறிப்பு 3

| வருமானம் | 2012 | 2012 | 2011 | 2011 |
|---|---|---|---|---|
| **வருவாய் - SPC** | | ரூ. | ரூ. | ரூ. |
| மொத்த வர்த்தகம் | 2,027,462,772 | | 2,091,099,161 | |
| ORS விற்பனைகள் | 63,867,890 | | 49,330,484 | |
| ஒசுசல விற்பனைகள் | 2,185,864,145 | | 1,974,823,472 | |
| சில்லறைக் கடைகளுக்கு மாற்றல் | 718,441,193 | | 678,794,365 | |
| கைவரப்பெறாத இலாபத்துக்கு ஏற்பாடு | (3,257,373) | | 2,679,004 | |
| கடன் காப்புறுதி | 1,506,345 | | 4,457,344 | |
| விசேட கட்டளை இறக்குமதிகள் | 630,730 | | 4,985,668 | |
| வழங்குநர்களின் கோரிக்கைகள் | 7,157,040 | | | |
| | | **5,001,672,742** | | **4,806,169,497** |
| **வருவாய் - DHS** | | | | |
| இறக்குமதி வழங்கல்கள் | 14,195,545,611 | | 10,710,183,106 | |
| உள்நாட்டு வழங்கல்கள் | 2,401,917,605 | | 1,738,393,445 | |
| CPU வழங்கல்கள் | 1,008,563 | | 74,208,925 | |
| வழங்குநர்களின் கோரிக்கைகள் | 10,020,672 | | 46,504,669 | |
| | | **16,608,492,451** | | **12,569,290,145** |
| **மொத்த வருவாய்** | | **21,610,165,194** | | **17,375,459,642** |

**விற்பனை ஆகுசெலவு / நேரடிச் செலவுகள்** குறிப்பு 4

| நேரடிச் செலவுகள் - DHS | 2012 | 2012 | 2011 | 2011 |
|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| **வருவாய்** | | **16,608,492,451** | | **12,569,290,145** |
| **நேரடி ஆகுசெலவு** | | | | |
| DHS வழங்கல்கள் C & F பெறுமதி | 12,844,532,712 | | 11,121,910,544 | |
| சுங்கத் தீர்வைகளும் வரிகளும் | 703,433,976 | | 647,413,989 | |
| உள்நாட்டு வழங்கல்களின் ஆகுசெலவு | 2,361,043,561 | | 1,769,517,093 | |
| DHS க்கு CPU கொள்வனவுகள் | - | | 72,753,848 | |
| | | **15,909,010,249** | | **13,611,595,473** |
| விடுவித்தற் கட்டணம் (வங்கி, முத்திரை, தரகு) | 147,463,703 | | 150,204,476 | |
| இறக்குதல் கட்டணம் | 26,730,376 | | 25,879,325 | |
| இறக்குமதி அனுமதிப்பத்திரக் கட்டணம் | 18,265,097 | | 17,449,752 | |
| | | **192,459,176** | | **193,533,553** |
| **கழி:** | | | | |
| இடைப்போக்கிலுள்ள இருப்பு | | 686,191,229 | | 2,016,573,939 |
| **நேரடிச் செலவுகள்/ விற்பனைகளின் ஆகுசெலவு** | | **15,415,278,195** | | **11,788,555,087** |
| **மொத்த இலாபம்/மிகை** | | **1,193,214,256** | | **780,735,058** |

குறிப்பு 5

| விற்பனை ஆகுசெலவு - SPC | மொத்த வர்த்தகம் | ஒசுசல வர்த்தகம் | மொத்த வர்த்தகம் SPC-2012 | மொத்த வர்த்தகம் SPC-2011 மீளக்கூறியது |
|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| ஆண்டின் தொடக்கத்தில் வர்த்தக இருப்பு | 538,445,634 | 342,729,364 | 881,174,998 | 866,745,819 |
| **கூட்டு:** | | | | |
| இறக்குமதியான மருந்துகள் | 1,479,670,408 | | 1,479,670,408 | 1,335,472,125 |
| பாவித்த மூலப்பொருள் | | | - | - |
| ஆய்வுகூட நுகர்வுகள் | 802,381 | | 802,381 | 1,047,753 |
| உள்நாட்டு கொள்வனவுகள் (SPC கேள்விகள்) | 302,296,729 | | 302,296,729 | 284,968,946 |
| ஆய்வுகூட சோதனைக் கட்டணம் | | - | - | - |
| C.P.U - கொள்வனவுகள் | 485,662,165 | | 485,662,165 | 493,679,136 |
| உள்நாட்டுக் கொள்வனவுகள் (ஒசுசலாக்கள்) | - | 1,189,782,058 | 1,189,782,058 | 963,339,881 |
| மாற்றல்கள் | | 718,441,193 | 718,441,193 | 678,794,365 |
| **விற்பனைக்குக் கிடைத்த மொத்த இருப்பு** | **2,806,877,316** | **2,250,952,615** | **5,057,829,932** | **4,624,048,026** |
| **கழி:** | | | | |
| ஆண்டு முடிவில் வர்த்தக இருப்பு | 668,224,747 | 430,036,973 | 1,098,261,721 | 897,130,658 |
| **விற்பனை ஆகுசெலவு, மாற்றல்கள்** | **2,138,652,569** | **1,820,915,642** | **3,959,568,211** | **3,726,917,368** |
| **மொத்த வர்த்தகம்** | | | | |
| கழிவு கழித்த் விற்பனைகள் | 2,027,462,772 | 2,185,864,145 | 4,213,326,917 | 4,806,169,497 |
| **விற்பனைகளின் ஆகுசெலவு** | 1,420,211,376 | 1,820,915,642 | 3,241,127,018 | 3,036,581,829 |
| **மொத்த வர்த்தக இலாபம்** | **607,251,397** | **364,948,503** | **972,199,900** | **1,769,587,668** |

**இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்**

**2012 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கான ஒசுசல தொழிற்பாடுகளின் வருமானக்கூற்று**

**குறிப்பு - 05அ**

| **விற்பனைகளின் ஆகுசெலவு** | **ஒசுசல வியாபாரம் கொழும்பு 07** | **ஒசுசல வியாபாரம் கொழும்பு 04** | **ஒசுசல வியாபாரம் கொழும்பு 01** | **ஒசுசல வியாபாரம் கண்டி** | **ஒசுசல வியாபாரம் நுகெகொட** | **ஒசுசல வியாபாரம் அவிசாவளை** | **ஒசுசல வியாபாரம் இரத்தினபுரி** | **ஒசுசல வியாபாரம் மினுவங்கொட** | **ஒசுசல வியாபாரம் பாணந்துறை** | **ஒசுசல வியாபாரம் காலி** | **ஒசுசல வியாபாரம் மாத்தறை** | **ஒசுசல வியாபாரம் குருணாகல்** | **ஒசுசல வியாபாரம் அம்பாறை** | **ஒசுசல வியாபாரம் அம்பாந்தோட்டை** |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **ரூ.** | **ரூ.** | **ரூ.** | **ரூ.** | **ரூ.** | **ரூ.** | **ரூ.** | **ரூ.** | **ரூ.** | **ரூ.** | **ரூ.** | **ரூ.** | **ரூ.** | **ரூ.** |
| **ஆண்டின் ஆரம்பத்தில்** | | | | | | | | | | | | | | |
| **வர்த்தகத்தில் இருந்த சரக்கு** | 61,333,272 | 27,881,991 | 13,618,331 | 24,996,332 | 10,216,540 | 8,594,699 | 16,448,347 | 5,917,252 | 8,008,967 | 21,783,668 | 11,789,615 | 19,733,171 | 6,809,655 | 7,279,009 |
| இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகள் | | | | | | | | | - | - | - | - | - | |
| உள்நாட்டுக் கொள்வனவுகள் | 368,573,469 | 234,099,177 | 49,877,424 | 79,634,849 | 27,474,204 | 12,642,658 | 34,066,746 | 8,618,388 | 28,808,644 | 47,192,917 | 27,700,879 | 35,003,636 | 4,459,421 | 16,480,577 |
| மாற்றல்கள் | 118,057,982 | 36,519,800 | 26,990,991 | 52,380,750 | 26,339,198 | 18,589,094 | 25,610,813 | 13,535,038 | 20,737,065 | 31,490,593 | 23,654,882 | 36,314,588 | 12,956,797 | 12,232,645 |
| **விற்பனைக்குக் கிடைத்த சரக்கு** | **547,964,724** | **298,500,968** | **90,486,747** | **157,011,931** | **64,029,942** | **39,826,451** | **76,125,905** | **28,070,678** | **57,554,676** | **100,467,178** | **63,145,377** | **91,051,396** | **24,225,874** | **35,992,232** |
| ஆண்டிறுதியில் வர்த்தகத்தில் இருந்த சரக்கு | 76,453,499 | 33,621,565 | 18,274,284 | 34,275,144 | 13,059,586 | 9,929,103 | 17,539,397 | 6,735,237 | 11,538,823 | 22,501,543 | 14,005,590 | 24,558,037 | 6,148,468 | 9,571,455 |
| **விற்பனை ஆகுசெலவும் மாற்றல்களும்** | **471,511,225** | **264,879,403** | **72,212,463** | **122,736,788** | **50,970,356** | **29,897,348** | **58,586,508** | **21,335,441** | **46,015,853** | **77,965,634** | **49,139,786** | **66,493,359** | **18,077,405** | **26,420,776** |
| **மொத்த வர்த்தகம்** | | | | | | | | | | | | | - | |
| தள்ளுபடி கழித்த விற்பனை | 557,432,351 | 298,226,353 | 85,249,396 | 147,855,885 | 62,311,879 | 36,494,631 | 68,865,487 | 27,149,221 | 57,124,189 | 91,045,043 | 61,400,139 | 82,192,761 | 22,799,717 | 32,038,794 |
| வியாபார விற்பனைவரவு வரி | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| | **557,432,351** | **298,226,353** | **85,249,396** | **147,855,885** | **62,311,879** | **36,494,631** | **68,865,487** | **27,149,221** | **57,124,189** | **91,045,043** | **61,400,139** | **82,192,761** | **22,799,717** | **32,038,794** |
| **கழிக்குக:** | | | | | | | | | | | | | | |
| விற்பனைகளின் ஆகுசெலவு | 471,511,225 | 264,879,403 | 72,212,463 | 122,736,788 | 50,970,356 | 29,897,348 | 58,586,508 | 21,335,441 | 46,015,853 | 77,965,634 | 49,139,786 | **66,493,359** | 18,077,405 | 26,420,776 |
| **மொத்த வர்த்தக இலாபம்** | **85,921,126** | **33,346,950** | **13,036,933** | **25,119,097** | **11,341,523** | **6,597,282** | **10,278,978** | **5,813,779** | **11,108,336** | **13,079,409** | **12,260,353** | **15,699,402** | **4,722,311** | **5,618,018** |

**இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்**

**2012 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கான ஒசுசல தொழிற்பாடுகளின் வருமானக்கூற்று**

குறிப்பு - 05அ

| விற்பனைகளின் ஆகுசெலவு | ஒசுசல வியாபாரம் மீகொட | ஒசுசல வியாபாரம் அனுராதபுரம் | ஒசுசல வியாபாரம் மஹரகம | ஒசுசல வியாபாரம் ஜயவர்தனபுர | ஒசுசல வியாபாரம் கராபிட்டிய | ஒசுசல வியாபாரம் நீர்கொழும்பு | ஒசுசல வியாபாரம் பதுளை-CWE | ஒசுசல வியாபாரம் தியதலாவ | ஒசுசல வியாபாரம் யாழ்ப்பாணம் | ஒசுசல வியாபாரம் பொலனறுவை | சதொச விற்பனை நிலை. ரத்மலானை | சதொச விற்பனை நிலை. பிலியந்தல | சதொச விற்பனை நிலை களுத்துறை | பிராந்திய களஞ்சியங்கள் கண்டி | ஒசுசல மொத்த வியாபார செயற்பாடுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| **ஆண்டின் ஆரம்பத்தில்** | | | | | | | | | | | | | | | |
| **வர்த்தகத்தில் இருந்த சரக்கு** | 772,341 | 11,617,946 | 18,556,555 | 19,121,248 | 17,331,808 | 9,824,943 | 7,739,336 | 2,709,756 | 3,112,059 | - | 1,131,015 | 1,327,752 | 1,197,540 | 3,876,214 | 342,729,364 |
| இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகள் | | | | | | | | | | | | | | | |
| உள்நாட்டுக் கொள்வனவுகள் | 687,743 | 20,381,257 | 35,018,924 | 71,404,578 | 29,634,033 | 25,717,609 | 13,968,199 | 2,865,467 | 2,854,425 | 6,037,075 | 3,004,954 | 2,542,481 | 1,031,346 | 980.00 | 1,189,782,058 |
| மாற்றல்கள் | 2,031,274 | 19,092,498 | 23,448,209 | 45,716,547 | 24,437,933 | 24,822,415 | 19,139,111 | 9,586,875 | 11,170,486 | 8,694,024 | 5,039,863 | 2,433,780 | 2,042,385 | 65,375,555 | 718,441,193 |
| **விற்பனைக்குக் கிடைத்த சரக்கு** | **3,491,358** | **51,091,701** | **77,023,688** | **136,242,372** | **71,403,775** | **60,364,966** | **40,846,647** | **15,162,098** | **17,136,970** | **14,731,099** | **9,175,832** | **6,304,014** | **4,271,271** | **69,252,748** | **2,250,952,615** |
| ஆண்டிறுதியில் வர்த்தகத்தில் இருந்த | 575,065 | 13,429,088 | 19,603,419 | 26,462,815 | 18,883,397 | 11,753,733 | 9,043,516 | 3,762,524 | 6,321,756 | 9,564,334 | 1,906,162 | 1,565,018 | 888,880 | 8,065,537 | 430,036,973 |
| **விற்பனை ஆகுசெலவும் மாற்றல்க** | **2,916,293** | **37,662,613** | **57,420,269** | **109,779,557** | **52,520,378** | **48,611,233** | **31,803,131** | **11,399,573** | **10,815,214** | **5,166,766** | **7,269,670** | **4,738,996** | **3,382,391** | **61,187,211** | **1,820,915,642** |
| **மொத்த வர்த்தகம்** | | | | | | | | | | | | | | | |
| தள்ளுபடி கழித்த விற்பனை | 3,720,549 | 46,425,433 | 70,587,654 | 132,582,906 | 61,401,894 | 58,523,648 | 39,500,527 | 14,500,936 | 13,867,660 | 7,335,286 | 8,884,249 | 5,938,176 | 4,100,008 | 88,309,374 | 2,185,864,145 |
| வியாபார விற்பனைவரவு வரி | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| | **3,720,549** | **46,425,433** | **70,587,654** | **132,582,906** | **61,401,894** | **58,523,648** | **39,500,527** | **14,500,936** | **13,867,660** | **7,335,286** | **8,884,249** | **5,938,176** | **4,100,008** | **88,309,374** | 2,185,864,145 |
| **கழிக்குக:** | | | | | | | | | | | | | | | |
| விற்பனைகளின் ஆகுசெலவு | 2,916,293 | 37,662,613 | 57,420,269 | 109,779,557 | 52,520,378 | 48,611,233 | 31,803,131 | 11,399,573 | 10,815,214 | 5,166,766 | 7,269,670 | 4,738,996 | 3,382,391 | 61,187,211 | 1,820,915,642 |
| **மொத்த வர்த்தக இலாபம்** | **804,256** | **8,762,820** | **13,167,385** | **22,803,349** | **8,881,516** | **9,912,415** | **7,697,396** | **3,101,362** | **3,052,446** | **2,168,520** | **1,614,579** | **1,199,180** | **717,617** | **27,122,163** | **364,948,503** |

## இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்
## 2012 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கான கணக்குகள்

**குளுக்கோஸ், ஜீவனீ மற்றும் பிபி கிரீம் தயாரிப்பு ஆகுசெலவு** **குறிப்பு 6**

| | 2012 ரூ. | 2012 ரூ. | 2011 ரூ. | 2011 ரூ. |
|---|---|---|---|---|
| மூலப்பொருட்களின் தொடக்க இருப்பு | | 1,622,578 | | 595,984 |
| **கூட்டு:** மூலப்பொருட்களின் கொள்வனவு | | **21,651,980** | | **11,911,803** |
| | | **23,274,558** | | **12,507,786** |
| **கழி:** மூலப்பொருட்களின் முடிவு இருப்பு | | 1,259,183 | | 990,252 |
| **பாவித்த மூலப்பொருட்களின் ஆகுசெலவு** | | **22,015,375** | | **11,517,534** |
| **தயாரிப்பு ஆகுசெலவு** | | | | |
| சம்பளங்கள், கூலிகள் | 7,742,813 | | 7,492,697 | |
| மேலதிகநேர வேலை | 1,891,889 | | 1,579,122 | |
| சீருடைகள் | 131,642 | | 169,829 | |
| பணியாளர் காப்புறுதி | 128,013 | | 104,982 | |
| சேமலாப நிதி (ஊ.சே.நி., ஊ.ந.நி.) | 649,068 | | 625,604 | |
| வருடாந்த போனஸ் | 165,328 | | 150,750 | |
| வரவு போனஸ் | 284,000 | | 301,900 | |
| வருடாந்த ஊக்குவிப்பு போனஸ் | 354,699 | | 708,200 | |
| பணியாளர் நலன்புரி | 719,633 | | 700,533 | |
| மருத்துவச் செலவுகள் | 352,417 | | 354,688 | |
| மின்வலு | 2,901,010 | | 2,075,360 | |
| தேய்மானம் | 1,604,398 | | 948,978 | |
| திருத்தம், பராமரிப்பு | 183,476 | | 226,101 | |
| பயன்படுத்திய பொதிப் பொருட்கள் | 8,823,586 | | 6,908,103 | |
| | | **25,931,972** | | **22,346,847** |
| சேதாரம் | | - | | - |
| **பண்டங்களின் உற்பத்தி ஆகுசெலவு** | | **47,947,346** | | **33,864,381** |

| **ORS வியாபாரம்** | 2012 ரூ. | 2012 ரூ. | 2011 ரூ. | 2011 ரூ. |
|---|---|---|---|---|
| தள்ளுபடி கழித்த விற்பனைகள் | | 63,867,890 | | 49,330,484 |
| தொடக்க இருப்பு (பூர்த்தியான பண்டங்கள்) | 4,093,626 | | 3,652,333 | |
| **கூட்டு:** | | | | |
| பண்டங்களின் உற்பத்தி ஆகுசெலவு | 47,947,346 | | 33,864,381 | |
| | **52,040,972** | | **37,516,714** | |
| **கழி:** | | | | |
| முடிவு இருப்பு (பூர்த்தியான பண்டங்கள்) | 1,477,837 | | 1,717,742 | |
| விற்பனை ஆகுசெலவு | | 50,563,135 | | 35,798,972 |
| **மொத்த இலாபம்** | | **13,304,755** | | **13,531,513** |

## இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்
## 2012 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கான கணக்குகள்

**பிற தொழிற்பாட்டு வருமானம்** **குறிப்பு 7**

| | 2012<br>ரூ. | 2011<br>ரூ. |
|---|---|---|
| வாகன நிறுத்தல் கட்டணங்கள் | 201,600 | 168,000 |
| கேள்விப்பபடிவங்களின் விற்பனை | 5,818,596 | 8,523,407 |
| கிடைத்த வாடகை | - | 771,600 |
| திறைசேரி உண்டியல் வட்டி | 2,628,142 | 1,123,126 |
| மிஞுசுபொருள் விற்பனைகள் | 604,546 | 60,050 |
| நிதி முகாமைத்துவ வருமானம் (பணச்சந்தை) | - | 14,504 |
| நானாவித வருமானம் | 1,520,596 | 703,809 |
| ஈ-சனலிங் மீது தரகுப்பணம் | 400 | 6,330 |
| விடுமுறை விடுதி வருமானம் | 764,525 | 657,850 |
| முன்தகுதிக் கட்டணம் | - | 1,748,760 |
| மாதிரிப் பரிசோதனை வருமானம் | - | 1,151,984 |
| நட்டக்கடன் அறவீடுகள் | 1,072,728 | 4,877,625 |
| வழங்குனர் மாநாடு | 1,146,803 | - |
| திரும்பிய காசோலைகள்/தாமதங்கள்மீது வட்டி | 1,346,907 | 741,338 |
| நிலையான சொத்துக்களின் விற்பனைமீதான இலாபம் | - | 2,682,498 |
| | **15,104,844** | **23,230,881** |

## இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்
## 2012 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கான கணக்குகள்

**நிருவாகச் செலவுகள்** — குறிப்பு 8

| (அ) நிருவாகச் செலவுகள் | SPC வியாபாரம் | | | மொத்த வியாபாரம் | மொத்த வியாபாரம் | மொத்த வியாபாரம் | மொத்த வியாபாரம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ஒசுசலாக்கள் | O.R.S. | பரும | SPC | DHS | 2012 | 2011 |
| **ஆளணி ஊதியங்கள்** | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| சம்பளம், கூலி, படிகள் | 115,174,591 | - | 77,820,741 | 192,995,331 | 99,044,579 | 292,039,911 | 267,887,869 |
| மேலதிக நேரம் | 17,023,875 | - | 6,742,456 | 23,766,331 | 4,494,970 | 28,261,301 | 27,449,063 |
| பணியாளர் பயிற்சிச் செலவுகள் | - | - | 870,564 | 870,564 | 1,107,990 | 1,978,554 | 1,501,994 |
| சீருடைகள் | 1,675,907 | - | 665,883 | 2,341,790 | 847,487 | 3,189,277 | 3,148,598 |
| ஊழியருக்கான காப்புறுதி | 2,739,256 | - | 2,481,643 | 5,220,899 | 3,158,455 | 8,379,355 | 8,363,131 |
| சகாய நிதி (ஊ.சே.நிதி, ஊ.ந.நிதி) | 9,869,932 | - | 6,243,108 | 16,113,040 | 7,945,774 | 24,058,814 | 22,532,797 |
| ஆண்டு மிகையூதியம் | 2,001,855 | - | 1,358,122 | 3,359,977 | 1,728,519 | 5,088,496 | 4,999,798 |
| மாதாந்த வரவு மிகையூதியம் | 4,728,276 | - | 3,133,631 | 7,861,907 | 3,988,257 | 11,850,164 | 11,052,375 |
| விளையாட்டுக் கழகம் | - | - | 875,146 | 875,146 | 1,113,822 | 1,988,969 | 685,413 |
| ஆண்டு செயலூக்க மிகையூதியம் | 4,359,552 | - | 3,393,482 | 7,753,034 | 4,318,977 | 12,072,011 | 24,654,683 |
| பணிக்கொடை | - | - | 5,894,310 | 5,894,310 | 7,501,849 | 13,396,159 | 11,058,573 |
| காணி மற்றும் வீட்டுக்கடன் வட்டி | 2,708,805 | 220,416 | 2,055,109 | 4,984,330 | 2,615,594 | 7,599,924 | 5,370,162 |
| வாகன வாடகைக் கட்டணம் | - | - | 345,000 | 345,000 | 345,000 | 690,000 | 281,710 |
| P.A.Y.E. | - | - | 382,915 | 382,915 | 487,346 | 870,261 | 2,776,773 |
| SPC ஆண்டுவிழாக் கொடுப்பனவு | - | - | 1,448,696 | 1,448,696 | 1,843,794 | 3,292,490 | 1,453,326 |
| மரணப் பணிக்கொடை | - | - | 170,228 | 170,228 | 216,653 | 386,881 | 250,632 |
| | **160,282,049** | **220,416** | **113,881,032** | **274,383,497** | **140,759,068** | **415,142,565** | **393,466,896** |
| **பிரயாணச் செலவுகள்** | | | | | | | |
| கடல்கடந்த பிரயாணம் - பணிப்பாளர்கள் | - | - | - | - | - | - | - |
| உள்நாட்டுப் பிரயாணம் - பணிப்பாளர்கள் | - | - | - | - | - | - | 77,140 |
| கடல்கடந்த பிரயாணம் - ஏனையோர் | - | - | 392,173 | 392,173 | 43,575 | 435,748 | 136,690 |
| உள்நாட்டுப் பிரயாணம் - ஏனையோர் | 377,401 | - | 3,784,375 | 4,161,776 | 420,486 | 4,582,262 | 3,732,398 |
| | **377,401** | **-** | **4,176,548** | **4,553,949** | **464,061** | **5,018,010** | **3,946,228** |
| **வழங்கல்களும் தேவைகளும்** | | | | | | | |
| அச்சிடலும் எழுதுகருவிகளும் | 3,348,990 | 83,238 | 3,926,058 | 7,358,286 | 1,308,686 | 8,666,972 | 11,869,542 |
| சபைக் கூட்டச் செலவுகள் | - | - | 195,228 | 195,228 | 65,076 | 260,304 | 196,113 |
| விருந்துபசாரம் - ஏனையோர் | - | - | 204,017 | 204,017 | 68,006 | 272,022 | 258,631 |
| மோட்டார்வாகனத் திருத்தங்கள் | - | - | 5,337,820 | 5,337,820 | 1,779,273 | 7,117,093 | 5,745,491 |
| எரிபொருளும் உராய்வுநீக்கிகளும் | - | - | 8,921,741 | 8,921,741 | 2,973,914 | 11,895,655 | 8,163,230 |
| வாகன அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | - | - | 115,866 | 115,866 | 38,622 | 154,488 | 139,422 |
| | **3,348,990** | **83,238** | **18,700,729** | **22,132,957** | **6,233,576** | **28,366,533** | **26,372,429** |
| **திருத்தங்களும் பராமரிப்பும்** | | | | | | | |
| கட்டடங்கள் | 947,601 | - | 2,690,501 | 3,638,102 | 2,690,501 | 6,328,603 | 8,848,424 |
| தளபாடம், பொருத்திகள், சாதனங்கள் | 1,451,603 | - | 2,005,712 | 3,457,315 | 2,005,712 | 5,463,027 | 4,714,871 |
| கணினிகள் | 164,599 | - | 4,065,802 | 4,230,401 | 4,065,802 | 8,296,202 | 6,127,707 |
| | **2,563,803** | **-** | **8,762,014** | **11,325,818** | **8,762,014** | **20,087,832** | **19,691,002** |
| **போக்குவரத்து, தொடர்பாடல், பயன்பாடு** | | | | | | | |
| **பிற சேவைகள்** | | | | | | | |
| வாடகை | 10,849,550 | - | 210,000 | 11,059,550 | 210,000 | 11,269,550 | 8,391,467 |
| குத்தகை வாடகை | 764,143 | - | 160,000 | 924,143 | - | 924,143 | 1,720,516 |
| காணி பயன்படுத்தும்' உரிமை | - | - | - | - | - | - | - |
| வீதங்களும் வரிகளும் | 439,014 | 13,500 | 490,331 | 942,846 | 490,331 | 1,433,177 | 1,464,474 |
| நீர்க் கட்டணம் | 853,415 | 68,569 | 474,066 | 1,396,049 | 474,066 | 1,870,115 | 2,098,869 |
| மின்சாரம் | 13,101,803 | - | 8,888,385 | 21,990,188 | 8,888,385 | 30,878,573 | 22,518,880 |
| தபால், தந்தி, தொலைபேசிக் கட்டணம் | 2,072,257 | 37,789 | 4,752,911 | 6,862,957 | 4,752,911 | 11,615,868 | 9,359,662 |
| வியாபார சந்தாக்கள், பருவ இதழ்கள் | 257,403 | - | 129,157 | 386,559 | 129,157 | 515,716 | 668,813 |
| மற்றும் வெளியீடுகள் | | | | - | | - | - |
| தொழில் தகைமைக் கட்டணங்கள் | - | - | 2,251,700 | 2,251,700 | 2,251,700 | 4,503,400 | 1,289,879 |
| காப்புறுதி | - | - | 1,122,736 | 1,122,736 | 1,122,736 | 2,245,472 | 1,795,269 |
| பத்திரிகை அறிவித்தல் | - | - | 3,478,307 | 3,478,307 | 8,116,049 | 11,594,356 | 17,418,252 |
| பாதுகாப்புச் சேவைகள் | 11,097,237 | 264,515 | 3,172,420 | 14,534,171 | 3,172,420 | 17,706,592 | 16,394,184 |
| தேய்மானம் | 8,939,631 | - | 10,947,083 | 19,886,714 | 10,947,083 | 30,833,797 | 26,714,494 |
| மருந்துகளுக்கான உத்.சீட்டுக் கட்டணம் | 210,560 | - | 300,150 | 510,710 | 2,701,347 | 3,212,057 | 2,885,738 |
| இறக்குமதி உத்.சீட்டுக் கட்டணம் | | | - | - | - | - | - |
| பலதரப்பட்ட செலவுகள் | 75,421 | 811 | 575,299 | 651,532 | 270,729 | 922,261 | 589,053 |
| பணிப்பாளர் கட்டணம் | - | - | 273,375 | 273,375 | 273,375 | 546,750 | 348,750 |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | - | - | 338,480 | 338,480 | 338,480 | 676,960 | 1,298,776 |
| கேள்விச்சபைக் கூட்டச் செலவுகள் | - | - | 2,084,750 | 2,084,750 | 4,864,418 | 6,949,168 | 8,574,600 |
| பணியாளர் நலன்புரி | 12,057,756 | - | 9,783,768 | 21,841,524 | 12,452,068 | 34,293,593 | 31,485,089 |
| பணியாளர் மருத்துவச் செலவுகள் | 4,489,818 | - | 2,979,605 | 7,469,423 | 3,792,225 | 11,261,648 | 10,624,191 |
| நன்கொடைகள் | - | - | 172,376 | 172,376 | - | 172,376 | 2,071,042 |
| TB நியாயவிலை மதிப்பீடு | - | - | 45,454 | 45,454 | - | 45,454 | 41,793 |
| விடுமுறைச் சுற்றுலாவிடுதிச் செலவுகள் | - | - | 1,242,594 | 1,242,594 | 1,581,483 | 2,824,077 | 2,788,811 |
| | **65,208,009** | **385,183** | **53,872,947** | **119,466,139** | **66,828,963** | **186,295,102** | **170,542,600** |
| | | | | - | | | |
| **மொத்த நிருவாகச் செலவுகள்** | **231,780,253** | **688,837** | **199,393,271** | **431,862,360** | **223,047,683** | **654,910,043** | **614,019,155** |

## இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்
## 2012 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கான கணக்குகள்

குறிப்பு 8அ

| ஒசுசலா மேந்தலைச் செலவுகள் | ஒசுசல வியாபாரம் கொழும்பு 07 ரூ. | ஒசுசல வியாபாரம் கொழும்பு 04 ரூ. | ஒசுசல வியாபாரம் கொழும்பு 01 ரூ. | ஒசுசல வியாபாரம் கண்டி ரூ. | ஒசுசல வியாபாரம் நுகேகொட ரூ. | ஒசுசல வியாபாரம் அவிசாவளை ரூ. | ஒசுசல வியாபாரம் ரத்மலானை ரூ. | ஒசுசல வியாபாரம் மினுவங்கொட ரூ. | ஒசுசல வியாபாரம் பாணந்துறை ரூ. | ஒசுசல வியாபாரம் காலி ரூ. | ஒசுசல வியாபாரம் மாத்தறை ரூ. | ஒசுசல வியாபாரம் குருணாகல் ரூ. | ஒசுசல வியாபாரம் அம்பாறை ரூ. | ஒசுசல வியாபாரம் அம்பாந்தோட்டை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **ஆ. நிருவாகச் செலவு** | | | | | | | | | | | | | | |
| **ஆளணி ஊதியங்கள்** | | | | | | | | | | | | | | |
| சம்பளம், கூலி, படிகள் | 18,896,409 | 8,150,367 | 4,015,725 | 6,265,955 | 5,040,314 | 3,480,944 | 5,619,689 | 2,636,858 | 4,775,549 | 6,748,325 | 5,121,296 | 3,881,952 | 2,232,998 | 2,816,411 |
| மேலதிக நேரம் | 3,076,037 | 1,645,422 | 299,052 | 1,268,569 | 781,097 | 460,432 | 695,672 | 397,494 | 613,278 | 713,447 | 456,705 | 565,562 | 536,206 | 274,997 |
| சீருடைகள் | 274,855 | 129,639 | 65,086 | 97,591 | 63,070 | 46,012 | 84,601 | 37,481 | 67,684 | 96,729 | 71,932 | 67,641 | 31,924 | 44,496 |
| பணியாளர் காப்புறுதி | 548,996 | 258,998 | 194,840 | 372,412 | 264,275 | 31,914 | 165,847 | - | 133,893 | 26,240 | 188,272 | 25,992 | 2,250 | 15,750 |
| சகாய நிதி (ஊ.சே.நி., ஊ.ந.நி.) | 1,583,452 | 698,488 | 364,121 | 557,349 | 433,273 | 303,329 | 480,915 | 235,981 | 420,670 | 608,139 | 440,447 | 334,295 | 192,324 | 243,859 |
| ஆண்டு மிகையூதியம் | 359,553 | 142,500 | 63,703 | 112,500 | 68,055 | 63,548 | 98,250 | 36,630 | 82,500 | 120,000 | 78,000 | 82,500 | 35,882 | 45,000 |
| ஆண்டு செயல் ஊக்குவிப்பு நிதியம் | 748,995 | 327,328 | 174,633 | 280,457 | 147,845 | 128,671 | 234,191 | 72,462 | 201,590 | 296,490 | 186,165 | 201,075 | 63,896 | 98,585 |
| வீடமைப்புக் கடன் வட்டி | 633,681 | 297,995 | 158,352 | 105,628 | 219,102 | 34,268 | 47,175 | 11,760 | 21,903 | 110,749 | 65,264 | 273,286 | - | - |
| வரவு மிகையூதியம் | 806,100 | 298,600 | 145,300 | 318,100 | 206,900 | 152,500 | 245,100 | 111,700 | 198,600 | 315,756 | 211,640 | 188,200 | 110,100 | 75,100 |
| | **26,928,078** | **11,949,337** | **5,480,812** | **9,378,561** | **7,223,932** | **4,701,617** | **7,671,441** | **3,540,366** | **6,515,668** | **9,035,875** | **6,819,720** | **5,620,504** | **3,205,579** | **3,614,198** |
| **பிரயாணச் செலவுகள்** | | | | | | | | | | | | | | |
| உள்நாட்டுப் பிரயாணச் செலவுகள் | 25,324 | 2,066 | 3,442 | 4,822 | 1,787 | 22,208 | 15,758 | 7,948 | 5,846 | 2,345 | 10,460 | 3,132 | 1,887 | 2,741 |
| | **25,324** | **2,066** | **3,442** | **4,822** | **1,787** | **22,208** | **15,758** | **7,948** | **5,846** | **2,345** | **10,460** | **3,132** | **1,887** | **2,741** |
| **வழங்கல்களும் தேவைகளும்** | | | | | | | | | | | | | | |
| அச்சிடல், எழுதுகருவிகள் | 544,562 | 101,018 | 95,820 | 171,690 | 53,612 | 94,499 | 156,705 | 29,568 | 152,051 | 131,371 | 134,822 | 131,474 | 78,527 | 70,603 |
| | **544,562** | **101,018** | **95,820** | **171,690** | **53,612** | **94,499** | **156,705** | **29,568** | **152,051** | **131,371** | **134,822** | **131,474** | **78,527** | **70,603** |
| **திருத்தங்களும் பராமரிப்பும்** | | | | | | | | | | | | | | |
| கட்டடங்கள் | 332,345 | 84,890 | 23,906 | 13,806 | 4,784 | 14,280 | 107,323 | 4,550 | 16,201 | 38,040 | 27,439 | 22,847 | 15,493 | 11,202 |
| தளபாடம், இணைப்புகள், உபகரணங்கள் | 166,493 | 12,426 | 46,735 | 110,392 | 47,498 | 19,542 | 58,139 | 11,909 | 90,779 | 72,745 | 58,227 | 76,967 | 43,301 | 78,148 |
| கணினிகள் | 146,044 | - | - | 1,750 | - | - | - | - | 2,800 | - | 3,500 | - | - | 3,000 |
| | **644,882** | **97,316** | **70,641** | **125,948** | **52,282** | **33,821** | **165,462** | **16,459** | **109,780** | **110,784** | **89,166** | **99,814** | **58,793** | **92,351** |
| **போக்குவரத்து, தொடர்பாடல், பயன்பாடுகள்** | | | | | | | | | | | | | | |
| **பிற சேவைகள்** | | | | | | | | | | | | | | |
| வாடகை | - | - | - | - | 982,000 | 254,610 | - | 448,784 | 645,000 | 480,000 | 480,000 | 802,200 | - | 566,000 |
| குத்தகை வாடகை | - | - | - | 225,000 | 294,333 | - | 35,719 | - | - | - | - | - | - | - |
| வீதங்களும் வரிகளும் | 235,620 | 83,160 | 71,379 | 31,316 | 5,000 | - | - | - | 2,500 | - | 7,758 | - | 325 | - |
| நீர்க் கட்டணங்கள் | 84,237 | 74,597 | 168,926 | 43,497 | 34,518 | 26,250 | 60,811 | 12,202 | 24,839 | 13,417 | 17,981 | 34,035 | 43,876 | 8,982 |
| மின்சாரம் | 3,269,711 | 911,561 | 232,800 | 769,767 | 231,456 | 196,266 | 791,635 | 115,565 | 480,727 | 646,458 | 649,825 | 410,223 | 410,264 | 356,357 |
| தபால், தந்தி, தொலைபேசிக் கட்டணம் | 222,175 | 157,055 | 46,519 | 38,416 | 114,277 | 41,075 | 122,342 | 27,655 | 43,437 | 189,981 | 40,907 | 85,007 | 39,643 | 69,134 |
| தேய்மானம் | 1,162,703 | 639,745 | 386,612 | 513,678 | 207,896 | 264,463 | 653,829 | 17,912 | 199,134 | 464,039 | 125,205 | 88,919 | 439,821 | 205,695 |
| வியா. சந்தாக்கள், பருவ இதழ்கள் மற்றும் வெளியீடுகள் | 40,255 | 13,228 | - | 12,550 | 13,470 | 12,800 | 11,630 | 7,310 | 11,610 | 11,020 | 10,390 | 14,760 | - | 5,440 |
| பாதுகாப்புச் சேவைகள் | 1,874,249 | 626,112 | 217,384 | 757,660 | 535,153 | 750,830 | 215,489 | 537,151 | 218,473 | 538,238 | 538,238 | 538,238 | 219,921 | 218,560 |
| மருந்துகளுக்கான உத்.சீட்டுக் கட்டண | 11,200 | 11,200 | 13,440 | 11,200 | 11,200 | 11,200 | 11,200 | - | - | 11,200 | 11,200 | 11,200 | - | 11,200 |
| பலதரப்பட்ட செலவுகள் | 6,522 | 2,451 | 1,844 | 6,662 | 70 | 1,474 | 2,681 | 225 | 834 | 36,241 | 5,056 | 535 | 645 | 2,739 |
| பணியாளர் நலன்புரி | 1,958,613 | 685,979 | 490,839 | 848,343 | 449,805 | 348,385 | 613,259 | 277,334 | 426,768 | 687,417 | 523,027 | 476,120 | 217,012 | 274,715 |
| பணியாளர் மருத்துவச் செலவுகள் | 770,459 | 314,172 | 193,534 | 251,498 | 198,907 | 133,316 | 235,062 | 90,007 | 198,100 | 254,769 | 190,159 | 135,039 | 86,250 | 89,741 |
| | **9,635,743** | **3,519,260** | **1,823,278** | **3,509,586** | **3,078,086** | **2,040,669** | **2,753,656** | **1,534,145** | **2,251,423** | **3,332,779** | **2,599,746** | **2,596,276** | **1,457,758** | **1,808,562** |
| மொத்த நிருவாகச் செலவு | **37,778,590** | **15,668,997** | **7,473,993** | **13,190,606** | **10,409,699** | **6,892,815** | **10,763,022** | **5,128,485** | **9,034,768** | **12,613,155** | **9,653,914** | **8,451,200** | **4,802,544** | **5,588,455** |

**இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்**
**2012 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கான கணக்குகள்**

**குறிப்பு 8அ**

| | | 6,720,460,292 | 99,544,880 | 6,620,915,412 |
| **மொத்த உரிமைப்பங்கும் பொறுப்புகளும்** | | **10,328,150,459** | **807,430,664** | **9,520,719,795** |

**A, A – ஆதனம், பொறி மற்றும் சாதனம், குத்தகைக் காணி**

சாதனங்கள், தளபாடம், கணினிகள், விநியோக சைக்கிள்கள் மற்றும் நூலகப் புத்தகங்கள் தவிர்ந்த ஆதனம், பொறி மற்றும் சாதனம் என்பவை முந்திய SLAS நியமங்களுக்கிணங்கத் தயாரிக்கப்பட்ட நிதிநிலைக் கூற்றில், பின்வரும் தேதிகளில் நடத்தப்பட்ட விலைமதிப்பீடுகளின் அடிப்படையில் கொண்டுசெல்லப்பட்டன.

| | | |
|---|---|---|
| காணி மற்றும் கட்டடங்கள் | - | 31.12.2012 |
| மோட்டார் வாகனங்கள் | - | 01.02.2012 |
| பொறி மற்றும் இயந்திரங்கள் | - | 31.12.2012 |

அவ்விலைமதிப்புகள் பரந்த அளவில் நியாயமான விலைமதிப்புடன் ஒப்பிடத்தக்கவையாதலால் கூட்டுத்தாபனம் அவற்றை மீள்மதிப்பீட்டுத் தேதியிலிருந்தவாறு கருதப்பட்ட கிரயமாகக் கருதுவதற்கு முடிவுசெய்துள்ளது. SLAS (SLFRS/LKAS) நியமங்களுக்கான இடைமாற்றத் தேதியில் ஆதனம், பொறி மற்றும் சாதனத்துக்குப் பின்வரும் சீராக்கல்கள் செய்யப்பட்டுள்ளன:

| | **2010** | **2011** |
|---|---|---|
| ஆக்கக்கூறுக் கணக்கீட்டுச் சீராக்கல்கள் | 692,452 | 9,608,807 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கச் சீராக்கல் | 900,158,806 | 900,158,806 |
| நிதிக் குத்தகைக்கான வகைப்படுத்தல் | (11,000,000) | (11,000,000) |
| | **887,851,258** | **898,767,613** |

மேலும் கூட்டுத்தாபனம் குத்தகைக் காணியின் எஞ்சிய பயனுள்ள ஆயுள்காலம் பூராவும் அதன் கடன்தீர்க்கின்றது. (ஒவ்வோராண்டும் ரூ. 160,000).

**B – நடைபெறும் மூலதன வேலை, பிற நடப்பிலற்ற சொத்துக்கள்**

2010ஆம் ஆண்டில் ரூ. 2,200,000க்கான நடைபெறும் மூலதன வேலை பிற்போடப்பட்ட செலவினத்துக்கு மாற்றப்பட்டது.

**C, I – பிற்போடப்பட்ட வரிச்சொத்து/பிற்போடப்பட்ட வரிப்பொறுப்பு**

நிதிக் கூற்றுகளுக்குச் செய்யப்பட்ட SLAS (SLFRS/LKAS) மாற்றங்களின் நிமித்தம் 2010 டிசெம்பர் 31இல் இருந்தவாறு பிற்போடப்பட்ட வரிப்பொறுப்பாக ரூ. 25,399,285 (2011 டிசெம். 31இல் இருந்தவாறு ரூ. 30,188,279) உருவாக்கப்பட்டது.

**D, E – பொருட்பட்டியல்கள் மற்றும் இடைப்போக்கிலுள்ள பண்டங்கள்**

கூட்டுத்தாபனம் முந்திய SLASஇன்கீழ் ரூ. 105,296,784/- தொகைக்கான இடைப்போக்கிலுள்ள பண்டங்களுக்கு (GIT) (2011இல் ரூ. 100,277,434/-) கணக்குவைத்தது. SLAS (SLFRS/LKAS) இன்கீழ் கூட்டுத்தாபனம் அவ்விலைமதிப்புகளை இடைப்போக்கிலுள்ள பண்டங்களுக்கு மாற்றக் குறித்துள்ளது. மேலும் பொருட்பட்டியலின் இடர்களையும் நேர்பயன்களையும் மாற்றுகின்ற தேதியன்று வெளிநாட்டுச் சென்மதிகள் ஒப்புக்கொள்ளப்படாததன் நிமித்தம் இடைப்போக்கிலுள்ள பண்டங்கள் ரூ. 2,860,571/- ஆல் (2011இல் ரூ. 7,451,730/-) அதிகரித்தன.

**F, G – வர்த்தக மற்றும் பிற வருமதிகளும் முற்கொடுப்பனவுகளும்**

முந்திய SLASஇன்கீழ் கூட்டுத்தாபனம் வழங்கப்பட்ட பணியாளர் கடன்களுக்குச் சந்தை வீதங்களுக்குக் குறைவாகக் கிரயத்தில் கணக்குவைத்தது. SLAS (SLFRS/LKAS) இன்கீழ் கூட்டுத்தாபனம் அத்தகைய கடன்களை இடைமாற்றத் தேதியன்று நியாயவிலை மதிப்பிட்டுள்ளதன் விளைவாக 2010 டிசெ. 31இல் இருந்தவாறு ரூ. 9,312,830 முன்செலுத்திய பணியாளர் கிரயம் ஒப்புக்கொள்ளப்பட்டது. (2011இல் வருமானக்கூற்றில் ரூ. 358,158 கடன் தீர்த்தபின்னர் ரூ. 8,943,031).

**H – கையிலும் வங்கியிலுமுள்ள காசு**

முந்திய SLASஇன்கீழ் கூட்டுத்தாபனம் திறைசேரி உண்டியல்களில் முதலீடுகளுக்குக் கிரயத்தில் கணக்குவைத்தது. SLAS (SLFRS/LKAS) இன்கீழ் கூட்டுத்தாபனம் அத்தகைய முதலீடுகளை முதிர்ச்சிக்காக வைத்துள்ள முதலீடுகளாக வகைப்படுத்தியுள்ளது. SLAS (SLFRS/LKAS) க்கான இடைமாற்றத் தேதியில் ரூ. 31,895/- நியாயமான விலைமதிப்பு வேறுபாடு (2011இல் ரூ. 73,688/- 2011) வருமானக்கூற்றில் அறவிடப்பட்டுள்ளது.

**J, K – வர்த்தக மற்றும் பிற சென்மதிகளும் பிற்போடப்பட்ட வருமானமும்**

முந்திய SLASஇன்கீழ் கூட்டுத்தாபனம் கடன் காப்புறுதி நிதியை ஐந்தொகையில் ஒரு பொறுப்பாகக் கணக்கில் கொண்டது. எனினும் விநியோகத்தர்களிடமிருந்து மிகைக்கட்டண வருமானப்பெறுகை கூட்டுத்தாபனத்துக்கு மூன்றாந் தரப்பினருக்கான ஒரு பொறுப்பை விளைவிக்காதென்பதால் ரூ. 12,260,198 (2011இல் ரூ. 3,216,375) நிறுத்திவைத்த ஈட்டல்களுக்கு மறுதலையாக்கப்பட்டது. ரூ. 1,558,598 (2011இல் 317,625) பிற்போடப்பட்ட வருமானமாக ஒப்புக்கொள்ளப் பட்டது. மேலும் கொள்வனவுகளிலிருந்து எழுகின்ற அந்நியச்செலாவணி வேறுபாடுகளாக ரூ. 4,131,520 (2011இல் ரூ. 5,869,979) சீராக்கப்பட்டது. 2011இல் செலுத்தவேண்டிய VAT மற்றும் NBT தொகை ரூ. 104,702,329 ஆகும்.

**L – ஊழியர் நன்மைப் பொறுப்புக்கள்**

கூட்டுத்தாபனம் 2011 டிசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக்கூற்றில் ரூ. 11,325,057/- மொத்தக் காப்புறுதிக் கணிப்பீட்டு வேறுபாட்டை ஒப்புக்கொண்டது.

## அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்
### விளக்கக் குறிப்புகள் SLFRS ஐ முதல்தடவை கைக்கொள்ளல்

### வருமானக்கூற்று

**குறிப்பு 28**

| | குறிப்பு | 2011<br>SLFRS/LKAS<br>இன்படி<br>ரூ. | மீள் அளவுகள்<br>ரூ. | 2011<br>SLAS<br>இன்படி<br>ரூ. |
|---|---|---|---|---|
| வருவாய் | **M** | 17,375,459,642 | 58,626,684 | 17,316,832,958 |
| விற்பனைக் கிரயம் | **N** | (15,551,271,427) | (88,856,732) | (15,462,414,695) |
| **மொத்த இலாபம்** | | **1,824,188,215** | | **1,854,418,263** |
| பிற தொழிற்பாட்டு வருமானம் | **O** | 23,230,881 | (58,308,774) | 81,539,655 |
| | | - | | |
| நிருவாகச் செலவுகள் | **P** | (614,019,155) | 8,623,128 | (622,642,283) |
| பிற தொழிற்பாட்டுச் செலவுகள் | **Q** | (492,631,005) | (22,314,670) | (470,316,335) |
| **தொழிற்பாட்டு இலாபம்** | | **740,768,936** | | **842,999,299** |
| நிதிச் செலவுகள் | | (422,895,753) | | (422,895,753) |
| நிதி வருமானம் | **R** | 4,102,392 | 4,102,392 | - |
| **வரிக்குமுன் இலாபம்** | | **321,975,575** | | **420,103,546** |
| வரிச்செலவு | **S** | (228,472,722) | 7,026,786 | (235,499,508) |
| **காலத்துக்கான இலாபம்** | | **93,502,853** | | **184,604,038** |

## வருமானக்கூற்றின் இணக்கம்

### M – வருவாய்

கூட்டுத்தாபனம் முந்திய SLASஇன்கீழ் கைவரப்பெறாத இலாபத்துக்கான ஏற்பாடு, விசேட கட்டளை இறக்குமதிகள் மற்றும் வழங்குனர்களிடமிருந்து கிடைத்த கோரிக்கைகள் ஆகியவற்றைப் பிற தொழிற்பாட்டு வருமானமாகக் கணக்கில் கொண்டது. SLAS (SLFRS/LKAS) இன்கீழ் இத்தொகைகள் (2011இல் ரூ. 54,169,340) வருவாயாக வகைப்படுத்தப் பட்டதுடன் கடன் காப்புறுதி நிதியிலிருந்து ரூ. 4,457,344 வருவாய்க்கும் மாற்றப்பட்டது (பார்க்க K).

### N – விற்பனைக் கிரயம்

பெறுமதிசேர் வரியாகச் செலுத்தப்பட்ட ரூ. 88,856,732 தொகைக்கான வழுத் திருத்தம் இவ்வாண்டில் விற்பனைக் கிரயமாக அறவிடப்பட்டது.

### O, R – பிற தொழிற்பாட்டு வருமானமும் நிதி வருமானமும்

SLAS (SLFRS/LKAS) இன்கீழ் ரூ. 54,169,340 வருவாய்க்கு மாற்றப்பட்டது (பார்க்க M). மேலும் பணியாளர் கடன்கள் (ரூ. 4,102,392) மீதான வட்டி வருமானம் நிதி வருமானத்தின்கீழ் தனிவேறாக வகைப்படுத்தப்பட்டது. மீதி ரூ. 41,793 திறைசேரி உண்டியல்களின் நியாயவிலை மதிப்பீட்டின் நிமித்தமானது.

### P – நிருவாகச் செலவுகள்

கூட்டுத்தாபனம் முந்திய SLASஇன்கீழ் தேய்மானத்தை, எஞ்சிய பயனுள்ள ஆயுள்காலத்தைக் கருத்திற்கொள்ளாமல், ஒரு நியம நூற்றுவீதமாகக் கணக்கில் கொண்டது. SLAS (SLFRS/LKAS) இன்கீழ் ஆக்கக்கூறுக் கணக்கீட்டினதும் எஞ்சிய ஆயுள்காலத்தின் மீள்மதிப்பீட்டினதும் விளைவான தேய்மானக்குறைப்பு ரூ. 8,916,370. மேலும் வருமானக் கூற்றில் அறவிடப்பட்ட பணிக்கொடையான ரூ. 133,242 வருமானக்கூற்றில் பதிவுசெய்யப்பட்டதுடன் குத்தகைக் காணியின் கடன்தீர்ப்பாகவும் ரூ. 160,000 அறவிடப்பட்டது.

### Q – பிற தொழிற்பாட்டுச் செலவுகள்

SLAS (SLFRS/LKAS) இன்கீழ் ரூ. 22,314,670 செலுத்தவேண்டிய மேலதிக NBT கட்டணமாக இனங்காணப்பட்டது. இது முந்திய SLASஇன்கீழ் கணக்கில் கொள்ளப்படவில்லை.

### S – வரிச்செலவு

செய்யப்பட்ட ஏற்பாட்டுக்கும் ஏற்பாட்டுக்கும் SLAS (SLFRS/LKAS) இடையிலான வேறுபாடான ரூ. 7,026,786/- வருமானக்கூற்றினூடாகச் சீராக்கப்பட்டது.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

මගේ අංකය / எனது இல / My No. } எச்எம்/ஏ/எஸ்பீசீ/எப்ஏ/2012 ඔබේ අංකය / உமது இல / Your No. }

දිනය / திகதி / Date } 2014 ஏப்ரல் 09

தலைவர்,
இலங்கை அரசாங்க மருந்தகக் கூட்டுத்தாபனம்

**இலங்கை அரசாங்க மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

இலங்கை அரசாங்க மருந்தகக் கூட்டுத்தாபத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய வெளிப்படுத்தல் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு, 1957 இன் 49 ஆம் இலக்க அரசாங்க கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 29 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு விரிவான அறிக்கை 2013 ஆகஸ்ட் 26 ஆந் திகதி கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான்

අංක 306/72 පොල්දුව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone. } 2887028 /034
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. } 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail. } oaggov@sltnet.lk

இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற்கொள்கின்றாரேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை அரசாங்க மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

மருத்துவ வழங்கல் பிரிவில் 05 வருடங்களிற்கு மேற்பட்ட கடன்பட்டோர் மீதும் மருத்துவ வழங்கல் பிரிவு தவிர்ந்த ஓராண்டிற்கு மேற்பட்ட ஏனைய வியாபாரக் கடன்பட்டோர் மீதும் நூறு சதவீத அறவிட முடியாத ஐயக்கடன் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்த ஏற்பாடு நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு வழங்கப்பட்ட மருந்துகள் மற்றும் மற்றும் சத்திரசிகிச்சை உபகரணங்களுக்குரிய 2006 முதல் 2011 ஆண்டு வரைக்குமான ரூபா 156,164,310 தொகையும் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 1,953,152 வரவுத் தாள்களும் கணக்கீடு செய்யப்படாமை காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் கடன்பட்டோர் மற்றும் நிறுத்தி வைத்த இலாபம் என்பன ரூபா 158,117,462 வீதம் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) 2007 முதல் 2012 ஆம் ஆண்டு வரை சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு விற்பனை செய்யப்பட்ட ரூபா 686,191,229 பெறுமதியான மருந்துகள் மற்றும் சத்திரசிகிச்சை உபகரணங்கள் இருப்பு வழிச்சரக்காக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மருத்துவ வழங்கல் பிரிவினால் மறுக்கப்பட்டிருந்த ரூபா 189,893,482 பெறுமதியான மருந்துகள் மற்றும் சத்திரசிகிச்சை உபகரணங்களில் ரூபா

132,212,356 பெறுமதியான மருந்துகள் மற்றும் சத்திரசிகிச்சை உபகரணங்கள் விற்பனை செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 141,121,163 ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை காரணமாக ரூபா 8,908,807 மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் படி, 49 விநியோகத்தர்களிடையே தெரிவுசெய்யப்பட்ட 16 விநியோகத்தர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட கடன் எல்லையில் 75 சதவீத மேலதிக கடன் வசதிகள் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் வழங்கப்பட்டிருந்த மொத்தக் கடன் அளவு ரூபா 127 மில்லியனாகும். அத்துடன் மேலதிக கடன் வசதிகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ஐந்து விநியோகத்தர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கடன் வசதிகளைப் பெற்றுக்கொண்டிருந்த ஐந்து விநியோகத்தர்கள் அடங்கலாக 10 விநியோகத்தர்களுக்கு அக்கடன் எல்லையினை மீறி ரூபா 13.6 மில்லியன் மொத்தமான கடன் வசதிகள் வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) 80 முகவர் நிறுவனங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 08 நிறுவனங்களிற்காக மேற்படி பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட கடன் எல்லையில் 75 சதவீத மேலதிக கடன் வசதிகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறு வழங்கப்பட்டிருந்த மொத்தப் பெறுமதி ரூபா 4.2 மில்லியனாகும். அத்துடன் மேலதிக கடன் வசதிகள் வழங்கப்பட்டிருந்த 08 நிறுவனங்களில் இரண்டும் அங்கீகரித்த கடன் வசதியினைப் பெற்றுக்கொண்டிருந்த 07 நிறுவனங்களும் அடங்கலாக 09 நிறுவனங்களிற்கு அந்தக் கடன் எல்லையினை மீறி ரூபா 1.2 மில்லியன் மொத்தமான கடன் வசதிகள் வழங்கப்பட்டிருந்தன.

(இ) ஓசுசல ஊடாக மருந்துகளை விற்பனை செய்கையில் 22 வாடிக்கையாளர்களிற்கு அங்கீகரித்த எல்லையை மீறி கடன் வசதிகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அத்தொகைகளின் மொத்தம் ரூபா 2.5 மில்லியனாகும்.

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி கூட்டுத்தாபனத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 11,369 மில்லியன் தொகையான மொத்த வியாபாரக் கடன்பட்டோரில் ரூபா 11,108 மில்லியன் அரசாங்க மற்றும் அரை அரசாங்க நிறுவனங்களை உள்ளடக்கியதாகும். அது மொத்தக் கடன்பட்டோரில் 97.8 சதவீதமாகும். அத்துடன், அந்த வியாபாரக் கடன்பட்டோரில் ரூபா 10,821

மில்லியன் சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு விநியோகிக்கப்பட்டவைக்காக கிடைக்கவேண்டிய தொகையாக இருந்ததுடன் அது மொத்தக் கடன்பட்டோரில் 95.2 சதவீதமாகும்.

(உ) மருத்துவ வழங்கல்கள் பணிப்பாளரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 10,821 மில்லியன் தொகையில் 1 ஆண்டிற்கும் மேற்பட்ட கடன்பட்டோர் மீதி ரூபா 2,177 மில்லியனாக காணப்பட்டதுடன் 05 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட கடன்பட்டோர் மீதி ரூபா 552 மில்லியனாகும்.

(ஊ) தனியார் நிறுவனங்களிடமிருந்து பெறப்பட வேண்டிய ஓராண்டிற்கும் மேற்பட்ட கடன்பட்டோர் மீதி ரூபா 10 மில்லியன் ஆனதுடன் 05 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட கடன்பட்டோர் மீதி ரூபா 0.8 மில்லியனாகும்.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் கணக்கு விடயங்களிற்கு எதிரே காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விபரம் | பெறுமதி | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| கடன்பட்டோர் | 2,048,012,299 | மீதி உறுதிப்படுத்தல்கள் |
| கடன்கொடுத்தோர் | 264,771,252 | -மேற்படி- |

### 2.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றிற்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 2000 ஜனவரி 31 ஆந் திகதிய பீஎப்/பீசீ/6 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களிற்கு முரணாக முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டிற்கான உழைக்கும் போதே செலுத்தும் வரி கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்காக கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து ரூபா 870,261 உழைக்கும் போதே செலுத்தும் வரியாக செலுத்தப்பட்டிருந்தது. உழைக்கும் போதே |

செலுத்தும் வரி பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் 2013 ஏப்ரல் மாதம் வரை கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்பட்டது. இது தொடர்பில் தொடர்ச்சியாக தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டு 2013 மே மாதம் முதல் ஊழியர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தலைவரினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2006 மார்ச் 01 ஆந் திகதிய 09 ஆம் இலக்க தேசிய கொள்வனவுகள் முகவராண்மையின் சுற்றறிக்கை

i. 2.9.1 ஆம் பிரிவு

மீளாய்வாண்டில் பிரதான கொள்வனவுச் சபையின் தலைவருக்கும் ஏனைய உறுப்பினர்களிற்கும் முறையே ரூபா 17,500 மற்றும் ரூபா 15,000 வீதம் படிகள் செலுத்தப்பட்டிருந்ததுடன் சிறு கொள்வனவுகள் தலைவருக்கும் ஏனைய உறுப்பினர்களிற்கும் முறையே ரூபா 12,500 மற்றும் ரூபா 10,000 வீதம் படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

இதன்படி கொள்வனவுகள் சபையின் தலைவருக்கும் ஏனைய உறுப்பினர்களிற்கும் சுகாதார அமைச்சுச் செயலாளரின் 2010 யூலை 19 ஆந் திகதிய SH/65/2007 ஆம் இலக்க கடிதத்தின் படி மீளாய்வாண்டில் மேலதிகமாக ரூபா 3,981,750 மொத்தமான கொள்வனவுச் சபை படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

ii. 2.9.1 ஆம் பிரிவு

இப்படிகளைப் பெற்றுக்கொண்டிருந்த சில கொள்வனவுச் சபைக் கூட்டங்கள் சாதாரண கடமை நேரங்களில் நடாத்தப்பட்டிருந்தன.

(இ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கை

i. 6.5.1 ஆம் இலக்க பந்தி — சுற்றறிக்கையின் பிரகாரம் வரைபு வருடாந்த அறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், அதற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

ii. 6.5.3 ஆம் பந்தி — சுற்றறிக்கையின் பிரகாரம் ஆண்டறிக்கையினை நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய போதிலும், 2011 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2011 பெப்ரவரி 11 ஆந் திகதிய பீஈடீ 57 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கை — மீளாய்வாண்டினுள் கூட்டுத்தாபனத்தால் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களிற்கு முரணாக மானியங்கள் மற்றும் அனுசரணை படிகளாக அரசு சார்பற்ற நிறுவனங்களிற்கு ரூபா 13,800,000 செலுத்தப்பட்டிருந்தது.

### 2.2.6 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்

2012 மார்ச் 30 ஆந் திகதிய B.P/61/12 ஆம் இலக்க பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் படி கூட்டுத்தாபனத்தால் ரூபா 14,670,857 கடன்பட்டோர் மீதி புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது. மருத்துவ வழங்கல் பிரிவிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 4,237,061 தொகையும், ஏனைய 32 அரசாங்க நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 9,612,367 தொகையும் 38 தனியார் வாடிக்கையாளரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 821,428 தொகையும் பதிவழிக்கப்பட்ட கடன்பட்டோர் மீதியில் உள்ளடங்கியிருந்தன. இந்த 71 கடன்பட்டோரில் தனியார் உரிமைத்துவத்துடன் கூடிய 06 கடன்பட்டோர்கள் தொடர்ந்தும் கூட்டுத்தாபனத்தின் கடன்பட்டோர்களாக இல்லாதிருந்தமை வெளிப்பட்டது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் நிதி விளைவுகள் வரிக்கு முன்னர் ரூபா 464,612,012 தேறிய இலாபமொன்றானதுடன் அதனை முன்னைய ஆண்டிற்கான ரூபா 321,975,574 வரிக்குப் முன்னரான தேறிய இலாத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 142,636,438 அதிகரிப்பொன்று காட்டப்பட்டது. மீளாய்வாண்டின் நிதிச் செலவினமான ரூபா 339,052,139 பெறுமதியைக் கழிக்க முன்னர் கூட்டுத்தாபனத்தால் ரூபா 799,720,426 செயற்பாட்டு இலாபமொன்று ஈட்டப்பட்டிருந்ததுடன் அதனை முன்னைய ஆண்டிற்கான நிதிச் செலவினத்தைக் கழிக்க முன்னரான ரூபா 740,768,935 செயற்பாட்டு இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 58,951,491 ஆல் செயற்பாட்டு இலாபம் அதிகரித்திருந்தது.

### 3.2 நிதி விளைவுகளின் மீளாய்வு

கூட்டுத்தாபனத்தின் நிதி விளைவுகள் தொடர்பான முக்கிய தரவுகள் முன்னைய ஆண்டிற்கான ஒப்பீட்டுப் தரவுகளுடன் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | 2012 ஆம் ஆண்டு | 2011 ஆம் ஆண்டு |
|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| புரள்வு | 21,610.2 | 17,375.5 |
| விற்பனைக் கிரயம்/நேர்ச் செலவு | 19,425.4 | 15,551.3 |
| மொத்த இலாபம் | 2,184.8 | 1,824.2 |
| செயற்பாட்டு இலாபம் | 799.7 | 740.8 |
| நிதி வருமானங்கள் | 3.9 | 4.1 |
| நிதிச் செலவினம் | 339.1 | 422.9 |
| தேறிய இலாபம் (வரிக்கு முன்) | 464.6 | 322.0 |
| வரிச் செலவினம் | 205.3 | 228.5 |
| தேறிய இலாபம் (வரிக்கு பின்) | 245.0 | 89.8 |
| மொத்த இலாப விகிதம் - சதவீதம் | 10.1 | 10.5 |
| தேறிய இலாப விகிதம் - சதவீதம் | 1.1 | 0.5 |
| இருப்புப் புரள்வு விகிதம் - தடவைகள் | 7.9 | 4.6 |
| இருப்புப் புரள்வுக் காலம் - நாட்கள் | 47 | 79 |
| கடன்பட்டோர் புரள்வு விகிதம் - தடவைகள் | 2.6 | 3.9 |
| கடன்பட்டோர் புரள்வுக் காலம் - நாட்கள் | 140 | 94 |
| கடன்கொடுத்தோர் புரள்வு விகிதம் - தடவைகள் | 36 | 28 |
| கடன்கொடுத்தோர் புரள்வுக் காலம் - நாட்கள் | 10 | 13 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டின் மொத்த இலாப மற்றும் தேறிய இலாப விகிதங்களுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் மொத்த இலாப விகிதத்தில் குறைவும் தேறிய இலாப விகிதத்தில் அதிகரிப்பும் காண்பிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் இருப்புப் புரள்வு விகிதத்தினை 2011 இன் இருப்புப் புரள்வு விகிதத்துடன் ஒப்பிடுகையில் 3.3 தடவைகள் அதிகரிப்புக் காட்டப்பட்டதுடன் இருப்புப் புரள்வுக் காலம் 32 நாட்களால் குறைவடைந்திருந்தது.

(இ) மீளாய்வாண்டின் கடன்பட்டோர் புரள்வு விகிதம் 1.3 ஆல் குறைவடைந்திருந்ததுடன் கடன் சேகரிப்புக் காலம் 46 நாட்களால் அதிகரித்திருந்தது. அதன்படி கூட்டுத்தாபனத்தின் கடன் சேகரிப்புச் செயற்பாடுகள் பயனுள்ள நிலையில் காணப்படாதிருந்ததுடன் அது கூட்டுத்தாபனத்தின் காசுப் பாய்ச்சலின் மீது நேரடியாக தாக்கமளித்திருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் கடன்கொடுத்தோர் புரள்வு விகிதம் முன்னைய ஆண்டின் கடன்கொடுத்தோர் புரள்வு விகிதத்துடன் ஒப்பிடுகையில் 08 தடவைகள் அதிகரிப்பைக் காட்டிய போதிலும், கடன் தீர்க்கும் காலம் 03 நாட்களால் குறைவடைந்திருந்தது. அதன்படி கூட்டுத்தாபனத்தின் கடன் தீர்த்தலில் தாமதம் காணப்பட்டதுடன் கூட்டுத்தாபனத்தின் காசுப்பாய்ச்சலில் காணப்பட்ட நலிவுகள் இது தாக்கமளித்திருந்தது.

(உ) மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தில் உயர் இணைவு நிலமை காணப்பட்டதுடன் மொத்தக் கடன் மூலதனத்தில் 70 சதவீதம் வங்கி மேலதிகப் பற்றினை பிரதிநிதித்துவப்படுத்தியதுடன் அது 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 7,896.7 மில்லியனாகும். இந்த வங்கி மேலதிகப்பற்று முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 67 சதவீத அதிகரிப்பாகும்.

## 3.3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.3.1 ஒசுசல நிலையங்களின் செயற்பாடுகள்

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் ஒசுசலயின் செயற்பாட்டுத்தன்மை தொடர்பான விபரம் பின்வருமாறிருந்தது.

| | 2012 | 2011 | 2010 | 2009 | 2008 |
|---|---|---|---|---|---|
| செயற்பாட்டிலிருந்த ஒசுசல எண்ணிக்கை | 28 | 25 | 25 | 23 | 21 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| புரள்வு (ரூபா மில்லியன்) | 2,185.9 | 1,974.8 | 1,840.2 | 1,691.4 | 1,398.2 |
| கொள்வனவுகள் - உள்நாடு (ரூபா மில்லியன்) | 1,189.8 | 963.3 | 918.7 | 791.7 | 609.7 |
| - இறக்குமதி (ரூபா மில்.) | 718.4 | 678.8 | 683.7 | 677.7 | 594.6 |
| உழைத்த இலாபம் (ரூபா மில்லியன்) | 134.1 | 102.6 | 96.6 | 97.4 | 44.2 |
| நட்டம் ஈட்டிய ஒசுசல எண்ணிக்கை | 10 | 09 | 06 | 04 | 10 |
| ஈட்டப்பட்ட நட்டம் (ரூபா மில்லியன்) | 8.1 | 7.2 | 7.02 | 3.8 | 9.16 |

ஒசுசல செயற்பாடுகள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 28 ஒசுசல நிலையங்கள் செயற்பட்டு வந்திருந்ததுடன் அதில் யாழ்ப்பாணம், பொலன்னறுவை, பிலியந்தலை, களுத்துறை மற்றும் இரத்மலானை போன்ற 05 ஒசுசல நிலையங்கள் மீளாய்வாண்டில் புதிதாக விற்பனை நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்த ஒசுசல நிலையங்களாக காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டில் காணப்பட்ட 02 ஒசுசல நிலையங்கள் மீளாய்வாண்டில் தமது விற்பனை நடவடிக்கைகளை இடைநிறுத்தியிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டில் 28 ஒசுசல நிலையங்களில் 18 இலாபத்தன்மை நிலையில் காணப்பட்டதுடன் 10 ஒசுசல நிலையங்கள் நட்டமீட்டியிருந்தன. அந்த நட்டம் ரூபா 8.1 மில்லியனாக காணப்பட்டதுடன் அவிஸ்ஸாவெல்ல, அம்பாறை மற்றும் மீகொட ஒசுசல நிலையங்கள் 2010 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக நட்டமீட்டி வந்திருந்தன.

(இ) மீளாய்வாண்டில் புதிதாக விற்பனை நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்த 05 ஒசுசல நிலையங்களில் இரத்மலானை ஒசுசல தவிர்ந்த ஏனைய 04 ஒசுசல நிலையங்களும் நட்டமீட்டியிருந்ததுடன் அந்த 04 ஒசுசல நிலையங்களினது மொத்த நட்டம் ரூபா 5.1 மில்லியனாகும்.

(ஈ) முன்னைய ஆண்டில் இலாபமீட்டியிருந்த கராபிட்டிய ஒசுசல மீளாய்வாண்டில் நட்டமீட்டியிருந்துதடன் கண்டி, காலி மற்றும் தியதலாவ போன்ற ஒசுசல நிலையங்கள் முன்னைய ஆண்டில் ஈட்டியிருந்த இலாபத்தைக் காட்டிலும் குறைந்த இலாபத்தினை மீளாய்வாண்டில் ஈட்டியிருந்ததுடன் மீகொட, நீர்கொழும்பு மற்றும் தியதலாவ போன்ற ஒசுசல நிலையங்களின்

விற்பனைகளை கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைவினைக் காண முடிந்தது.

(உ) அவிஸ்ஸாவெல்ல, மினுவான்கொட, குருணாகல், அம்பாறை, பதுளை – சதொச, தியதலாவ, யாழ்ப்பாணம், இரத்மலானை, பொலன்னறுவை மற்றும் களுத்துறை போன்ற ஒசுசல நிலையங்கள் தவிர்ந்த எஞ்சிய 18 ஒசுசல நிலையங்களில் உள்நாட்டுக் கொள்வனவுகள் மிக உயர் மட்டத்தில் காணப்பட்டதுடன் ஒசுசல நிலையங்களிற்காக மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டுள்ள மருந்துகள் மற்றும் சத்திரசிகிச்சை நுகர்வுப் பொருட்களின் மொத்தம் பெறுமதி ரூபா 1,908.2 மில்லியனாக காணப்பட்டதுடன் அதில் ரூபா 1,189.8 மில்லியன் அதாவது 62 சதவீதம் உள்நாட்டுக் கொள்வனவுகளாகும். அதன்படி இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகளைக் காட்டிலும் உள்நாட்டில் கொள்வனவு செய்யப்பட்ட மருந்துகளின் விற்பனைக்காக கூட்டுத்தாபனம் அதிக முனைப்பைக் காட்டியிருந்தது.

(ஊ) அரசாங்க ஒசுசல நிலையங்களில் அண்ணளவாக 1600 வகை மருந்துகள் விற்பனை செய்யப்பட்டு வருவதுடன் அவற்றில் உயர் புரள்வுடன் கூடிய மருந்து வகைகள் ஏறத்தாழ 150 ஆகும். மீளாய்வாண்டில் செயற்பாட்டிலிருந்த 28 ஒசுசல நிலையங்களில் 22 நிலையங்களில் விற்பனை செய்யப்பட்டு வருகின்ற மருந்து வகைகளில் அதிகளவு பற்றாக்குறை அவதானிக்கப்பட்டது. விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| ஒசுசல நிலையங்கள் | ஒவ்வொரு மாதத்திலும் மருந்துகளின் பற்றாக்குறை (மருந்து வகைகளின் படி) | |
|---|---|---|
| | ஆகக்குறைந்தது (மருந்து விடயம்) | உச்சம் (மருந்து விடயம்) |
| அம்பாறை | 25 | 90 |
| அநுராதபுரம் | 20 | 120 |
| அவிஸ்ஸாவெல்ல | 50 | 104 |
| பதுளை | 10 | 28 |
| கொழும்பு 01 | 30 | 103 |
| கொழும்பு 04 | 20 | 59 |
| கொழும்பு 07 | 31 | 69 |
| காலி | 07 | 10 |

| | | |
|---|---|---|
| ஹம்பாந்தோட்டை | 31 | 60 |
| யாழ்ப்பாணம் | 59 | 84 |
| ஜயவர்தனபுர | 08 | 10 |
| கண்டி | 65 | 160 |
| கராபிடிய | 15 | 55 |
| குருணாகல் | 20 | 60 |
| மஹரகம | 15 | 30 |
| மாத்தறை | 15 | 35 |
| மினுவான்கொட | 17 | 29 |
| நீர்கொழும்பு | 23 | 40 |
| நுகேகொட | 30 | 44 |
| பாணந்துறை | 25 | 45 |
| பொலன்னறுவை | 30 | 82 |
| இரத்தினபுரி | 35 | 60 |

ஒசுசல நிலையங்களின் மருந்துகளின் பற்றாக்குறை தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. யாழ்ப்பாணம், ஜயவர்தனபுர, மஹரகம, நுகேகொட மற்றும் பொலன்னறுவை போன்ற ஒசுசல நிலையங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து ஒசுசல நிலையங்களிலும் ஆண்டு முழுவதும் எல்லா மாதங்களிலும் மருந்துகளின் பற்றாக்குறை காணப்பட்டது. இந்த மருந்துப் பற்றாக்குறைகளின் உச்ச வீச்செல்லை 14 ஒசுசல நிலையங்களில் 10 முதல் 60 வரைக்கும், 07 ஒசுசல நிலையங்களில் 60 முதல் 120 வரைக்கும், 120 இற்கு மேல் 01 ஒசுசல நிலையத்திலும் காணப்பட்டன. அத்துடன் இந்த மருந்து வகைகளின் பற்றாக்குறையின் குறைந்த வீச்செல்லை 16 ஒசுசல நிலையங்களில் 10 முதல் 30 வரைக்கும், 05 ஒசுசல நிலையங்களில் 30 முதல் 60 வரைக்கும், 60 இற்கு மேல் 01 ஒசுசல நிலையத்திலும் காணப்பட்டன.

ii. 2012 ஆம் ஆண்டில் இரத்மலானை பிரதான மருந்துக் களஞ்சியத்தில் மாதாந்த சராசரிப் பற்றாக்குறை 125 மருந்து வகைகளாக காணப்பட்டதுடன் ஆண்டின் குறைந்தபட்ச மருந்துப் பற்றாக்குறை 100 மருந்து வகைகளாகவும் உச்ச மருந்துப் பற்றாக்குறை 158 மருந்து வகைகளாகவும் இருந்தன.

3.3.2 **கொள்வனவுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) F/Lumber Disectomy சத்திரசிகிச்சை உபகரணத் தொகுதியின் கொள்வனவு

i. சத்திரசிகிச்சை உபகரணத் தொகுதியில் உள்ளடங்கியிருந்த உருப்படிகளிற்காக வாசனைத்திரவிய உபகரணங்கள் மற்றும் மருந்துகள் அதிகாரசபையிடமிருந்து (CDDA) பெற்றுக்கொள்ளப்பட்ட பதிவுச் சான்றிதழ்களின் செல்லுபடியாகும் திகதி, 2011 சனவரி 07 ஆந் திகதி வழங்குனருக்கு கட்டளையினை வழங்கும் சந்தர்ப்பத்தில் காலாவதியாகியிருந்ததுடன் துறைமுகத்திலிருந்து விடுவிக்கும் சந்தர்ப்பத்திலேனும் பதிவுச் சான்றிதழை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், இக்கொள்வனவிற்காக எதிர்ப்புக்கள் இல்லையென கடிதமொன்று சுகாதார அமைச்சின் மருத்துவ தொழில்நுட்ப மற்றும் வழங்கல்கள் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

ii. 2008 பெப்ரவரி வழங்கப்பட வேண்டிய சத்திரசிகிச்சை உபகரணங்கள் 03 ஆண்டுகளும் 4 மாதங்களும் தாமதிக்கப்பட்டு 2011 யூன் மாதம் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கிடைத்திருந்த போதிலும், இந்த உபகரணங்களின் சுற்றுத்துண்டுகள் சரியாக இல்லாமை, SR இலக்கம் மற்றும் விலைப்பட்டியல் இலக்கம் குறிப்பிடப்பட்டிருக்காமை மற்றும் மேற்படி விலைப்பட்டியலில் குறைபாடுகள் காணப்பட்டமையால் மருத்துவ வழங்கல் பிரிவால் அவ் உபகரணத் தொகுதி நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் இக்குறைபாடுகள் சரிசெய்யப்பட்டு 2013 நவம்பரில் மீண்டும் வழங்கப்பட்டிருந்த போதிலும், அது வரை 05 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலதாமதம் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) Ibuprofen 200 mg மருந்திலிருந்து 24 மில்லியன் மாத்திரைகளைக் கொள்வனவு செய்தல்.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. மேற்படி மருந்தைக் கொள்வனவு செய்வதற்காக SPC/P1/369/11 ஆம் இலக்க கட்டளை 2011 ஆகஸ்ட் 11 ஆந் திகதி வழங்கப்படுகையில் வழங்குனருக்கு வாசனைத்திரவிய உபகரணங்கள் மற்றும் மருந்துகள்

அதிகாரசபையினால் (CDDA) வழங்கப்பட்டிருந்த PR-041003 ஆம் இலக்க பதிவுச் சான்றிதழ் காலாவதியாகியிருந்தது. இருப்பினும் இச்சான்றிதழ் 2011 செப்தெம்பர் 16 ஆந் திகதி மீளப் புதுப்பிக்கப்பட்டிருந்தது. அந்த நிறுவனத்தின் உள்நாட்டு முகவர் CDDA நிறுவனத்திலிருந்து அதனை 2011 செப்தெம்பர் 16 ஆந் திகதி பெற்றுக்கொண்டதாகவும் அதன் படி அச்சான்றிதழ் 2011 ஆகஸ்ட் 04 ஆந் திகதி முதல் 05 ஆண்டுகளிற்கு செல்லுபடியாக்கப்பட்டதாகவும் தலைவரினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

ii. வழங்கப்பட்ட 12 மில்லியன் மாத்திரைகளில் 4.6 மில்லியன் விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் எஞ்சிய 7.4 மில்லியன் மாத்திரைகள் 2012 சனவரி அளவில் நிறம்மாறி இருந்தமையால் விற்பனைக்கு பொருத்தமற்றவையாக காணப்பட்டதுடன் அவற்றின் கிரயம் அண்ணளவாக ரூபா 2.79 மில்லியனாகும்.

iii. வழங்கப்பட்ட இருப்புக்கள் உரிய நியமங்களைப் பூர்த்திசெய்துள்ளன என இறக்குமதி முகாமையாளரால் தொழில்நுட்பப் பிரிவிற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த மருந்துகள் தரக்குறைவானவை என பாதுகாப்பு ஆய்வுகூட முகாமையாளரின் 2012 சனவரி 23 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் பிரதிப் பொது முகாமையாளர் - தொழில்நுட்பம் மற்றும் ஆய்வுகூடம் இற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இதன்படி நியமங்களைப் பூர்த்திசெய்துள்ளதாக இறக்குமதி முகாமையாளரினால் சான்றளிக்கப்பட்டிருந்தமை எந்த அடிப்படையில் என்பது கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

iv. மருந்துகள் தரக்குறைவானவை என்பது 2012 சனவரி 23 ஆந் திகதி கண்டுகொள்ளப்படும் வரை 1,000 மாத்திரைகளைக் கொண்ட 4,952 உறைகள் அதாவது வழங்கப்பட்ட மாத்திரைகளின் அளவில் 41 சதவீதம் விற்பனை செய்யப்பட்டிருந்தன.

v. தரக்குறைவான ரூபா 2,972,382 ஆன 7.248 மில்லியன் மாத்திரைகளிற்குப் பதிலாக 45 முதல் 60 நாட்கள் காலப்பகுதியில் புதிய மாத்திரைகளை வழங்குவதற்கு விநியோகத்தர் இணங்கியிருந்த போதிலும், அந்த மாத்திரை இருப்பினை பெற்றுக்கொள்வதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 1,347,696 கிரயமான சத்திரசிகிச்சை உபகரணங்கள் கூட்டுத்தாபனத்திற்கு இழப்பாகியமை (பொருட்கட்டளை இல. DHS/SUS/19/361A/2009)

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ரூபா 1,347,696 (யூ.எஸ்.டொலர் 11,654.20) கிரயமான 6 சத்திரசிகிச்சை உபகரண விடயங்களை உள்ளடக்கிய 13 பொதிகள் வழங்குனரிடமிருந்து 2010 யூலை மாதத்தில் கொழும்பு துறைமுகங்கள் அதிகாரசபைக்கு கிடைத்திருந்த போதிலும், அதற்குரிய உற்பத்திநாட்டுச் சான்றிதழ் மற்றும் விலைப்பட்டியல் என்பன உள்நாட்டு முகவர் நிறுவனத்தின் பெயரில் காணப்பட்டிருந்தமையால் அந்த சத்திரசிகிச்சை உபகரணங்களை துறைமுக அதிகாரசபையிலிருந்து விடுவித்துக்கொள்ள கூட்டுத்தாபனத்திற்கு முடிந்திருக்கவில்லை. இலங்கை சுங்கத் திணைக்களத்தினால் அப்பொருட்களை அழிப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தமையால் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 1,194,946 நட்டம்

ஏற்பட்டிருந்தது. 2012 சனவரி 20 ஆந் திகதிய BP/4/12 ஆம் இலக்க பணிப்பாளர் சபைக் கூட்ட அறிக்கையின் படி இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை அந்த சத்திரசிகிச்சை உபகரண இருப்பை விற்பனை செய்திருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தமையால் அவ்விருப்பு தொடர்பில் சரியான தகவல்கள் பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஈ) Clarithromycin Powder for reconstitution for intravenous infusion 500 mg மருந்து 61,200 புட்டுக்குளிசைகளைக் கொள்வனவு செய்தல்.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. மருத்துவ வழங்கல் பிரிவின் கோரிக்கைக்கமைய 30,000 புட்டுக்குளிசைகள் இறக்குமதி செய்யப்பட்டு 2011 மே 02 ஆந் திகதி மருத்துவ வழங்கல் பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் இவ்விருப்பு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையில் பழுதடைந்த புட்டுக்குளிசைகள் காணப்படுகின்றமை 2011 மே 24 ஆந் திகதிய கடிதத்தினால் மருத்துவ வழங்கல் பிரிவு கூட்டுத்தாபனத்திற்கு அறிவித்திருந்தது.

ii. எவ்வாறாயினும், 2011 மே 31 ஆந் திகதி தொடர்புடைய நாணயக் கடிதம் திருத்தப்பட்டு அது ரூபா 9,250,386 (யூ.எஸ்.டொ. 167,400) வரை அதிகரிக்கப்பட்டு எஞ்சிய இருப்பை இலங்கைக்கு எடுத்துவருதற்கு நடவடிக்கை

எடுக்கப்பட்டிருந்ததுடன் அவ்விருப்பில் 16,200 அலகுகளும் 15,000 அலகுகளும் முறையே 2011 யூலை 30 மற்றும் 2011 செப்தெம்பர் 05 ஆந் திகதிகளில் துறை முகத்திலிருந்து விடுவித்துக் கொள்ளப்பட்டிருந்தன.

iii. 2011 நவம்பர் 02 ஆந் திகதிய கடிதத்தின் படி பின்னர் தருவிக்கப்பட்டிருந்த 16,200 பூட்டுக்குளிசைகள் மற்றும் தற்போது களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள 15,000 பூட்டுக்குளிசைகள் ஆகிய இருப்புக்கள் முழுவதும் பாவனையிலிருந்து அகற்றப்படுதல் வேண்டுமென தேசிய மருந்துகள் பாதுகாப்பு அதிகாரசபையால் அறிவிக்கப்பட்டிருந்தது. இதன்படி கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கவேண்டிய யூ.எஸ்.டொலர் 98,066 இல் யூ.எஸ்.டொலர் 11,384 இனை வழங்குனரிடமிருந்து அறவிட்டுக்கொள்வதற்கு இது வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

iv. நாணயக் கடிதத்திற்காக கொடுப்பனவைச் செய்கையில் நிறுத்திவைக்கப்பட வேண்டிய மொத்த இருப்புக்குமுரிய 10 சதவீதத் தொகையான ரூபா 1,840,440 பெறுமதியினை நிறுத்தி வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) Cannulated Screw சத்திரசிகிச்சை உபகரணங்களைக் கொள்வனவு செய்தல். (கொள்வனவுக்கட்டளை இல. DHS/SU/221/825B/08)

பல்வேறு சந்தர்ப்பங்களில் விநியோகிக்கப்பட்டிருந்த மேற்குறித்த கொள்வனவு தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. மருத்துவ வழங்கல் பிரிவின் 2007 யூலை 11 ஆந் திகதிய MSD/SC/052/08/5 ஆம் இலக்க கட்டளையின் பிரகாரம் 2008 சனவரியில் வழங்கப்பட வேண்டிய ரூபா 5,723,492 பெறுமதியான சத்திரசிகிச்சை உபகரண இருப்பை 2010 மே 07 ஆந் திகதி மருத்துவ வழங்கல் பிரிவிற்கு ஒப்படைக்கையில் 02 ஆண்டுகள் மற்றும் 09 மாதங்கள் தாமதிக்கப்பட்டிருந்தது.

- கேள்வி ஆவணங்களின் 20 மற்றும் 21 ஆம் பந்திகளில் காட்டப்பட்டிருந்தவாறு இரண்டு சந்தர்ப்பங்களில் கொள்வனவு நடைமுறைகளின் போது மாதிரிகள் பரிசோதிக்கப்பட வேண்டிய போதிலும், சத்திர சிகிச்சை உபகரண இறக்குமதியின் போது அவ்வாறான மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டமைக்கான தகவல்கள் கணக்காய்வில் புலப்படவில்லை.

ii. 2010 மார்ச் 10 ஆந் திகதிய 4633 ஆம் இலக்க விலைப்பட்டியலின் கீழ் இறக்குமதி செய்யப்பட்டிருந்த ரூபா 1,338,398 (யூ.எஸ்.டொலர் 11,760.97) பெறுமதியான 7250 அலகுகள் விலைப்பட்டியல் பூரணமற்றிருந்தமை மற்றும்

காலாவதியாகும் திகதி குறிப்பிடப்பட்டிருக்காமை போன்ற காரணங்களால் மருத்துவ வழங்கல் பிரிவினால் நிராகரிக்கப்பட்டிருந்தது. அத்துடன் இந்த சத்திர சிகிச்சை உபகரண இருப்பு மருத்துவர் ஒருவரினால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் மூலம் தரக்குறைவாகக் காணப்படுவதாக 2012 சனவரி 27 ஆந் திகதிய கடிதத்தின் ஊடாக வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் இதுவரை ஏறத்தாழ 2½ ஆண்டுகளாக இவ்விருப்பு களஞ்சியத்தில் விளைவற்று வைக்கப்பட்டிருந்தது.

- மருத்துவ வழங்கல் பிரிவினால் கையேற்பதற்கு மறுக்கப்பட்டிருந்த 4633 ஆம் இலக்க விலைப்பட்டியலுக்குரிய 7250 அலகுகள் மற்றும் 4650 ஆம் இலக்க விலைப்பட்டியல் என்பவற்றின் கீழ் இறக்குமதி செய்யப்பட்டு மருத்துவ வழங்கல் பிரிவினால் கையேற்கப்பட்டிருந்த இருப்பின் பற்றாக்குறையான 16 அலகுகள் தொடர்பில் 2012 திசெம்பர் 10 ஆந் திகதிய 000339/2012 ஆம் இலக்க வரவுத்தாளின் பெறுமதி ரூபா 1,393,189 (யூ.எஸ்.டொலர் 12,242.44) இது வரை தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) Gentamicin Injection BP 80 mg/2ml இனைக் கொள்வனவு செய்தல் (கொள்வனவுக் கட்டளை இல. SPC/P1/509/10)

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. கூட்டுத்தாபனத்தின் ஒசுசல நிலையங்களில் மிக வரைவாக விற்பனை செய்யப்படுகின்ற மருந்தாக இனங்காணப்பட்டிருந்த Gentamicin Injection BP 80 mg/2ml மருத்தின் 240,000 அலகுகளில் 80,000 அலகுகள் வீதம் 2010 மார்ச், யூலை மற்றும் நவம்பர் மாதங்களில் விநியோகிக்கப்பட வேண்டிய போதிலும், 2009 நவம்பர் 08 ஆந் திகதி செய்திப்பத்திரிகை அறிவித்தலின் மூலம் இரண்டு சந்தர்ப்பங்களில் அத்தொகையினை விநியோகிக்க வேண்டிய காலப்பகுதி திருத்தப்பட்டிருந்தது.

ii. முன்வந்திருந்த 06 வழங்குனர்களில் ஒரு வழங்குனர் மாத்திரம் மாதிரியினை சமர்ப்பித்திருந்ததுடன் அம்மாதிரியும் தரப்பரிசோதனை அறிக்கையின் படி தரமற்றுக் காணப்பட்டது.

iii. கேள்வி ஆவணங்களின் 20.1 ஆம் பந்தியின் படி வழங்குனர்கள் கேள்விப் பத்திரங்களுடன் மாதிரிகளையும் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், 20.4 ஆம்

பந்தியின் படி அது கட்டாயத் தேவைப்பாடாகும் எனவும் அது நிறைவேற்றப்படாத சந்தர்ப்பங்களில் கேள்வி நிராகரிக்கப்படுதல் வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டிருக்கையில் ஒரு வழங்குனருக்கு கப்பலேற்ற முன்னர் மாதிரியினைப் பரீட்சிக்கும் நிபந்தனைக்கு உட்பட்டு கேள்வி கையளிக்கப்பட்டிருந்ததுடன் அதன்படி இரண்டு சந்தர்ப்பங்களில் மாதிரிகள் தரத்தில் குறைவாகக் காணப்பட்டமையால் கேள்வி நிராகரிக்கப்பட்டிருந்தது.

iv. தெரிவுசெய்யப்பட்ட வழங்குனருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த இல. SPC/P1/509/10 ஆம் ஆம் இலக்க கொள்வனவுக் கட்டளையில் மருந்துகளை விநியோகிக்க வேண்டிய காலம் முதலாம் 100,000 அலகுகளிற்காக மிகவும் அவசரம் எனவும், இரண்டாவது மற்றும் மூன்றாவது இருப்புக்கள் அறிவிக்கப்பட்ட பின்னராகும் எனவும் மீளத் திருத்தப்பட்டிருந்தது. அதன்படி இருப்புக் கட்டுப்பாட்டுப் பிரிவால் இருப்பினைப் பரீட்சித்து சமர்ப்பிக்கப்பட்டிருந்த கட்டளையில் இருப்பு தேவைப்படும் காலம் எக்காரணமும் குறிப்பிடப்படாது 04 சந்தர்ப்பங்களில் மாற்றப்பட்டிருந்தது.

v. மருந்துகள் மற்றும் சத்திரசிகிச்சை உபகரணங்களுக்கான வழிகாட்டல்கள் கோவையின் 2.3 ஆம் பந்தியின் படி மருந்துகள் மற்றும் சத்திரசிகிச்சை உபகரணங்களின் இறக்குமதியின் பின்னர் குறைந்தது 06 மாத காலம் வாசனைத்திரவியங்கள், உபகரணங்கள் மற்றும் மருந்துகள் அதிகாரசபையில் (CDDA) வழங்குனரின் பதிவு தொடர்ச்சியாக காணப்பட வேண்டிய போதிலும், இந்த மருந்து இருப்பு கூட்டுத்தாபனத்தின் களஞ்சியத்திற்கு கிடைப்பதற்கு முன்னரே அதாவது 2011 ஏப்ரல் 28 ஆந் திகதி வழங்குனரின் பதிவு காலாவதியாகியிருந்ததுடன் அதற்காக எதிர்ப்புகள் இல்லையென கடிதமொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

vi. 2010 ஆகஸ்ட் மாதம் முதல் 2011 மே மாதம் வரை கூட்டுத்தாபனத்தின் களஞ்சியத்தில் இந்த மருந்து பற்றாக்குறையாக காணப்பட்டதுடன் இக்காலத்தில் குறித்த மருந்தின் நுகர்வுத் தேவையினை நிறைவேற்றிக்கொள்வதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது.

vii. 100,000 மருந்து அலகுகள் இருப்பு களஞ்சியத்திற்கு கிடைத்த பின்னர் மேற்கொள்ளப்பட்ட தெரிவுத் தரப் பரிசோதனையில் மருந்துகளில் காணப்படவேண்டிய அமில மற்றும் காரத்தன்மை (PH பெறுமதி) இல்லாதிருந்தமை மற்றும் சிறு துண்டுகள் காணப்பட்டமை காரணமாக 2011 செப்தெம்பர் 07 ஆந் திகதிய 578/4RIAI - 40 ஆம் இலக்க தர அறிக்கையின்

படி இருப்பு தரக்குறைவானது என அறிவிக்கப்படும் வரை அந்த இருப்பில் 15,360 அலகுகள் விற்பனைக்காக வழங்கப்பட்டிருந்தன.

viii. தரக்குறைவான எஞ்சிய 84,640 அலகுகளுடன் சம்பந்தப்பட்ட ரூபா 682,456 நட்டத்தினை அறவிட்டுக் கொள்வதற்கு கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்ட 2012 பெப்ரவரி 27 ஆந் திகதிய 000029 வரவுத்தாள் இதுவரை தீர்வு செய்துகொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன், மேற்கூறப்பட்டவாறு இரண்டு சந்தர்ப்பங்களில் வழங்குனரால் வழங்கப்பட்ட இந்த மருந்தின் மாதிரி தரத்தில் குறைவாகக் காணப்படுகையில், உரிய பிரகாரம் மாதிரிப் பரிசோதனை மேற்கொள்ளப்படாது கப்பலேற்ற முன்னர் மாதிரி அறிக்கையின் அடிப்படையில் மருந்தினை தருவித்துக் கொண்டமையால் இந்நட்டம் ஏற்பட்டிருந்தது.

(எ) லொறிகளைக் கொள்வனவு செய்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. பதிவுசெய்யப்பட்ட வழங்குனர்களிடமிருந்து இரண்டு லொறிகளைக் கொள்வனவு செய்வதற்காக விலைமனுக்களைக் கோருகையில் 05 வழங்குனர்கள் விலைமனுக்களைச் சமர்ப்பித்திருந்ததுடன் முதலாம் மற்றும் இரண்டாம் குறைந்த விலைமனுக்களைச் சமர்ப்பித்திருந்த விலைமனுக்களை நிராகரித்து ஒன்று ரூபா 7,000,000 வீதம் மூன்றாவது குறைந்த விலை மனுவைச் சமர்ப்பித்திருந்த சதொச மோட்டர்ஸ் நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இதன் விளைவாக முதலாவது குறைந்த விலைமனுவைச் சமர்ப்பித்திருந்த நிறுவனத்தை நிராகரித்திருந்தமை காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 1,480,800 மேலதிகமாகச் செலுத்த வேண்டியேற்பட்டிருந்தது.

ii. சமர்ப்பிக்கப்பட்டிருந்த தொழில்நுட்ப விதந்துரைப்புகளின் 09 ஆம் பந்தியின் படி, மொத்தப் பெறுமதியில் 90 சதவீதம் 02 வாகனங்களும் கிடைத்த பின்னரும், 7.5 சதவீதம் 03 மாதங்களின் பின்னரும், எஞ்சிய 2.5 சதவீதம் பிடித்து வைத்தலாக வைத்திருந்து ஒராண்டின் பின்னர் செலுத்த வேண்டிய போதிலும், அதற்கு முரணாக லொறிகள் கிடைக்கப்பெற்று ஒரு மாதம் முடிவடையும் முன்னரே ரூபா 13,240,800 ஆன மொத்தத் தொகையும் வழங்குனருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

### 3.3.3 பங்கிலாபத்தின் மீது செலுத்தவேண்டிய வரி

கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டில் ரூபா 259,329,589 வரிக்குப் பின்னரான இலாபத்தின் மீது செலுத்தப்பட வேண்டிய பங்கிலாபம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக செலுத்தப்படாத பங்கிலாபத்தின் மீது பிடித்துவைக்கப்பட்ட பங்கிலாப

வரி (deemed dividend tax) செலுத்தவேண்டிய இடர் காணப்படுகின்றது. அவ்வாறே மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் நிதித் திரவத்தன்மை சிறந்த நிலையில் காணப்படாமையால் பங்கிலாபத்தை செலுத்த முடியாதிருந்தது. இப்பங்கிலாபத்திலிருந்து 2013 ஆகஸ்ட் மாதத்தில் ரூபா 25 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டிற்குரிய பங்கிலாபத்தை இவ்வாண்டின் திசெம்பர் மாதத்தில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தலைவரினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

### 3.3.4 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொழும்பு 07 இல் அமைந்துள்ள ஒசுசல நிலைய வளவில் ஆய்வுகூட வசதியினை நிர்மாணிப்பதற்காக 2010 ஆம் ஆண்டில் ரூபா 122 மில்லியன் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், 2012 திசெம்பர் மாதம் வரை நிர்மாணத்திற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டதைத் தவிர நிர்மாணம் தொடர்பில் வேறு எவ்வித நடவடிக்கையும் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) DHS/SWW/3/32L/08-09 ஆம் இலக்க கொள்வனவுக் கட்டளையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டுள்ள Central Venous Catheter Double Lumen Adult set – 14G*18G lumens and 7Fr *16cm என்ற பெயருடைய உருப்படியானது மருத்துவ வழங்கல் பிரிவு சமர்ப்பித்திருந்த கட்டளையில் குறிப்பிடப்பட்டிருந்த உருப்படியின் அளவும் வழங்குனர் சமர்ப்பித்திருந்த விலைப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உருப்படியின் அளவும் ஒன்றுக்கொன்று வித்தியாசப்பட்டுக் காணப்படுகின்ற போதும் கூட்டுத்தாபனத்தால் வழங்குனருக்கு கட்டளை கையளிக்கப்பட்டிருந்தது.

i. காலாவதியாகும் திகதி 3 ஆண்டுகளைக் கொண்ட சத்திரசிகிச்சை உபகரணத் தொகுதி மருத்துவ வழங்கல் பிரிவால் கட்டளையிடப்பட்டிருக்கையில் மூன்று சந்தர்ப்பங்களிலும் உரிய பயனுள்ள ஆயுளைக் கொண்ட சத்திரசிகிச்சை உபகரணத் தொகுதியினை வழங்குவதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது.

ii. மூன்றாவது சந்தர்ப்பத்தில் கொண்டுவரப்பட்டிருந்த ரூபா 5,726,434 பெறுமதியான 5000 அலகுகள் மருத்துவ வழங்கல் பிரிவால் நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் அவை வாடகைக்குப் பெறப்பட்ட களஞ்சியத்தினுள் காலாவதியாகி ஓராண்டிற்கும் மேற்பட்ட காலம் சென்றிருந்த போதிலும் நட்டம் வழங்குனரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) துறைமுகத்திலிருந்து கூட்டுத்தாபனத்தின் களஞ்சியங்களிற்கு / மருத்துவ வழங்கல் பிரிவிற்கு மருந்துகள் மற்றும் சத்திரசிகிச்சை உபகரணங்களைப் போக்குவரத்துச் செய்வதற்காக வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த கொள்கலன்களிற்காக வைப்புச்செய்யப்பட்டிருந்த மீள அறவிடப்பட முடியுமான ரூபா 6,310,000 கூட்டுத்தொகையான கொள்கல வைப்புக்கள் மீள அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2012 ஆகஸ்ட் 10 ஆந் திகதி இடம்பெற்ற 672 ஆம் இலக்க பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் படி, கூட்டுத்தாபனத்தின் ஆவணங்கள் காணப்படாமையால் ரூபா 359,500 தொகையும், கப்பல் முகவர் கம்பனிகளின் முகவரி மாற்றத்தின் காரணமாக ரூபா 153,500 தொகையும், கப்பல் முகவர் கம்பனிகளின் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டமையால் ரூபா 90,000 தொகையுமாக ரூபா 603,000 கூட்டுத்தொகையான கொள்கல வைப்புக்கள் அறவிடப்பட முடியாது புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.

(உ) சேதமடைந்திருந்த மருந்துகளின் இருப்பிற்கான காப்புறுதி உரித்துக்களின் பெறுமதி ரூபா 10,055,770 ஆகக் காணப்பட்டதுடன் விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| ஆண்டு | பெறுமதி |
|---|---|
| | ரூபா |
| 2003 – 2005 | 552,256 |
| 2006 | 395,042 |
| 2007 | 526,248 |
| 2008 | 1,352,978 |
| 2009 | 1,004,189 |
| 2010 | 2,949,313 |
| 2011 | 1,183,562 |
| 2012 | 2,092,182 |
| | 10,055,770 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. 2003 முதல் 2009 ஆம் ஆண்டு வரை பெறப்பட வேண்டிய ரூபா 3,830,713 ஆன காப்புறுதி உரித்துக்களை பெற்றுக்கொள்வதற்கு கூட்டுத்தாபனத்தினால் போதியளவு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ii. சேதமடைந்த மருந்து இருப்புக்களின் பெறுமதியினைக் கணிப்பிடுகையில் கூட்டுத்தாபனத்தின் வார்ப் பிரிவு மற்றும் கணக்குகள் பிரிவு ஒருமித்த அடிப்படையினை பின்பற்றியிருக்கவில்லை. உதாரணமாக சேமடைந்த இருப்புக்காக பெறப்படவேண்டிய காப்புறுதி உரித்துக்கள் கணக்குகள் பிரிவினால் ரூபா 9,919,753 ஆகவும் வார்ப் பிரிவினால் அவ் இருப்பு ரூபா 9,669,879 ஆகவும் கணிப்பிடப்பட்டிருந்தது.

iii. வார்ப் பிரிவினால் ரூபா 9,669,879 இற்கு பெறுமதியிடப்பட்டிருந்த சேதமடைந்த இருப்புக்களின் பெறுமதியில் ரூபா 2,226,330 பெறுமதியான சேதமடைந்த இருப்புக்களிற்காக மாத்திரமே காப்புறுதி உரித்துக் கோரப்பட்டிருந்ததுடன் ரூபா 1,339,731 இழப்பீட்டுத் தொகை கிடைத்திருக்கவில்லை.

### 3.3.5 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

வாடகைக்குப் பெறப்பட்ட களஞ்சியத்தில் மருந்துகள் மற்றும் சத்திரசிகிச்சைப் பொருட்கள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததுடன் இந்த இருப்புக்கள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பௌதீகப் பாதுகாப்பு

முழுமையான களஞ்சிய வளவுக் கட்டிடத்தின் 4000 சதுர அடிகள் கொண்ட பகுதியை ரூபா 100,000 மாதாந்தக் கூலியின் அடிப்படையில் மருந்துகள் மற்றும் சத்திரசிகிச்சைப் பொருட்களைக் களஞ்சியப்படுத்துவதற்காக பேணிவரப்பட்டும், எஞ்சிய பகுதி தனியார் கம்பனியொன்றின் சேவைப் பிரிவாக பயன்படுத்தப்பட்டுமிருந்தது. இச்சேவைப் பிரிவிற்காக ஒதுக்கப்பட்டுள்ள ஏறத்தாழ 15 அடிகள் உயரமான மதிலின் மேலாக வெளித்தரப்பினருக்கு நுழைவதற்கான வாய்ப்புக் காணப்படுகின்றமையால் களஞ்சியத்தின் பாதுகாப்பு போதுமானதாக இருக்கவில்லை.

(ஆ) தரப் பாதுகாப்பு

மருத்துவ வழங்கல் பிரிவு பல்வேறு காரணங்களால் நிராகரித்திருந்த மருந்துகள் மற்றும் சத்திரசிகிச்சைப் பொருட்களிற்கு மத்தியில் சுற்றுத்துண்டுப் பிரச்சினை காரணமாக நிராகரிக்கப்பட்டிருந்த மருந்துகள் மற்றும் சத்திரசிகிச்சைப்

பொருட்களும் இக்களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. அவ்வாறான இருப்புக்கள் அதிக வெப்பம் மற்றும் புழுதி நிறைந்த இடத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமையால் அம்மருந்துகளின் தரம் குறையும் ஆபத்துக் காணப்பட்டது.

### 3.3.6 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

2011 ஆம் ஆண்டில் வங்கி மேலதிகப்பற்று ரூபா 4,716.7 மில்லியனாகக் காணப்பட்டதுடன் 2012 ஆம் ஆண்டில் அது ரூபா 7,896.7 மில்லியன் வரை அதிகரித்திருக்க அதற்காக செலுத்தப்பட்டிருந்த மேலதிகப்பற்று வட்டி 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 422.9 மில்லியன் மற்றும் ரூபா 339.1 மில்லியனாகும். 2012 ஆம் ஆண்டில் செலுத்தியிருந்த வங்கி மேலதிகப்பற்று வட்டியிலிலுள்ள 2012 யூன் முதல் திசெம்பர் வரையான ரூபா 247.6 மில்லியன் வட்டியினை பொதுத் திறைசேரியினால் மீளளிப்பதற்கு இணங்கப்பட்டிருந்ததுடன் 2012 சனவரி முதல் மே வரையான மேலதிகப்பற்று வட்டியான ரூபா 91.4 தொகை கூட்டுத்தாபனத்தின் இலாபத்திற்கெதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது.

### 3.3.7 இனங்காணப்பட்ட இழப்புகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பின்வரும் காரணங்களால் ரூபா 189,893,482 கூட்டுத்தொகையான மருந்துகள் மற்றும் சத்திரசிகிச்சை நுகர்வுப் பொருட்கள் மருத்துவ வழங்கல் பிரிவினால் நிராகரிக்கப்பட்டிருந்தது.

| விபரம் | பெறுமதி |
|---|---|
| | ரூபா |
| மாதிரிகளுடன் இணங்காமை | 85,418,284 |
| தரக்குறைவாக காணப்பட்டமை | 28,966,714 |
| உறைகள் சேதமடைந்திருந்தமை, கிடைப்பதில் தாமதம் மற்றும் முறைப்பாடுகளால் நிராகரிக்கப்பட்டவை | 37,671,366 |
| காலாவதியாதல்/காலாவதியாவதற்கு அண்மித்திருத்தல் | 23,175,946 |
| சுற்றுத்துண்டுக் குறைபாடுகள் | 14,661,172 |
| | 189,893,482 |

(ஆ) கூட்டுத்தாபனத்தில் விற்பனைக்காக 1996 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை தருவிக்கப்பட்டிருந்த மருந்துகளில் ரூபா 80,563,867 தொகையான மருந்துகள் மற்றும் மீளாய்வாண்டின் போது கொண்டுவரப்பட்டிருந்த ரூபா 21,554,608 பெறுமதியான மருந்துகள் விற்பனை செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தமையால் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 102,118,475 நட்டம் ஏற்பட்டிருந்தது. மேலும் பௌதீக இருப்பு மெய்மையாய்வு அறிக்கையின் படி அவ் இருப்பின் பெறுமதி ரூபா 111,341,885 ஆனமையால் ரூபா 9,223,410 வேறுபாட்டிற்கான காரணம் வெளிப்படுத்தப்படவில்லை.

### 3.3.8 மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிறைவேற்றுத் தரத்தில் 26, நிறைவேற்றுத் தரமல்லாதோரில் 66, சிற்றூழியரில் 13 பதவியணி வெற்றிடங்கள் காணப்பட்டமையால் மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 105 ஆக இருந்தது.

(ஆ) 1997 ஒக்தோபர் 24 ஆந் திகதிய 124 ஆம் இலக்க நிதி திட்டமிடல் சுற்றறிக்கைக்கு முரணாக கூட்டுத்தாபனத்தின் 06 ஊழியர்கள் 01 முதல் 07 வருட காலவீச்சிலிருந்து பதிற்கடமையில் நியமிக்கப்பட்டிருந்தனர். மேலும், நிரந்தர பதவிகளுக்கு நியமிக்கப்பட்டிருந்த 03 உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு 04 ஆண்டு காலம் தாமதிக்கப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகை

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 2007 முதல் 2011 ஆம் ஆண்டு வரைக்குமான காலப்பகுதிக்கு கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 2008, 2009, 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளிற்காக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் படி கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக கூட்டிணைந்த திட்டம் முகாமைத்துவத்தின் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதற்குப் பொறுப்புடைய முகாமையாளர்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டிய போதிலும், கூட்டுத்தாபனத்தினால் 2012 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் சில செயற்பாடுகள் தவிர்ந்த ஏனைய செயற்பாடுகளிற்கு பொறுப்புடைய முகாமையாளர்கள் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2007 முதல் 2011 ஆம் ஆண்டு வரைக்கும் கூட்டிணைந்த திட்டத்தின் தொடர்ச்சியாக 2012 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் 08 செயற்பாடுகள் 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளாக காட்டப்பட்டிருந்த போதிலும், அதில் 04 செயற்பாடுகள் அதாவது முகாமைத்துவ தகவல் முறைமையை நிறுவுதல், ஆய்வுகூட வசதிகளை விஸ்தரித்தல், ஒசுசல நிலையங்களின் தரத்தினை முன்னேற்றுதல் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட பிரதேசங்களில் அரசாங்க ஒசுசல நிலையங்களை தாபித்தல் போன்ற குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு மீளாய்வாண்டில் தவறவிடப்பட்டிருந்தது.

## 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்கள் மற்றும் செலவினங்களிற்கிடையே குறிப்பிடத்தக்களவு முரண்கள் காணப்பட்டமையால் பாதீடானது பயனுள்ள முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. 23 விடயங்களில் இம்முரண்கள் 18 சதவீதத்திலிருந்து 148 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) கொள்வனவு நடைமுறை

(ஆ) இருப்புக்கள் கட்டுப்பாடு

(இ) கணக்கீடு

(ஈ) பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

(உ) வரிகள்

(ஊ) மனித வள முகாமைத்துவம்

(எ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

(ஏ) ஒசுசல நிலையங்களின் செயற்பாடுகள்

(ஐ) கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம்

(ஒ) பாதீடு

ஒப்பம்: எச்.ஏ.எஸ். சமரவீர

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

*2014 மே 08*

கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 7

***1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 14(2)(இ)யின் பிரகாரம் 2012 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுகள் பற்றிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கணக்காய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட விடயங்களுக்கான விளக்கங்களைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.***

### *2.2 நிதிக்கூற்றுகள் பற்றிய கருத்துகள்*

### *2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்*

அதன் பிரகாரம், புதிய கணக்கீட்டு நியமங்கள் LKAS 39 மற்றும் LKAS 32 ஆகியவற்றுக்கிணங்க நிதிச்சொத்துகளின் சேதம் மதிப்பிடப்பட்டது.

இது கணக்கீட்டுக் கொள்கை இலக்கங்கள் *6.1.2.6* மற்றும் *6.1.2.7* ஆகியவற்றின் கீழ் சரியாகக் கூறப்பட்டுள்ளது.

### *2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்*

(அ) கணக்குகளில் உள்ள சம்பந்தப்பட்ட வரவுக் குறிப்பை உள்ளடக்குவதன் மூலம் 2013ஆம் ஆண்டில் இது சீராக்கப்பட்டுள்ளது.

(ஆ) சுகாதார சேவைகள் திணைக்களத்துக்கு வழங்கப்பட்ட மருந்துகள் மற்றும் அறுவைச் சிகிச்சை உபகரணங்களுக்கான வரவுக் குறிப்புகளை அனுப்பி கணக்குகளில் பதிவதன் மூலம் சம்பந்தப்பட்ட இடைப்போக்கில் உள்ள இருப்பு 2013ஆம் ஆண்டில் சீராக்கப்பட்டுள்ளது.

(இ) ரூபா *189,893,482* பெறுமதியான குறிப்பிட்ட இருப்புகள் சர்ச்சைக்குரிய இருப்புகளாகும். சம்பந்தப்பட்ட இருப்புகளில் அரசாங்க மருத்துவ களஞ்சியசாலைகளுக்கு எம்மால் மீள் வழங்கல் செய்ய முடியாத இருப்புகளாக தெளிவாக அடையாளம் காணப்பட்டவை தொடர்பாக 100% ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### *2.2.3 பெறக்கூடிய மற்றும் செலுத்தக்கூடிய கணக்கு*

(அ) எம்முடன் நம்பத்தகுந்தவாறு கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் அடையாளம் காணப்பட்ட விநியோகத்தர்களுக்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துக்கு அமைவாக ஓர் ஊக்குவிப்பு நடவடிக்கையாக தற்போதுள்ள கடன் எல்லைக்கு அதிகமாக 75% கடனுக்கு கூட்டுத்தாபனம் மருந்துப் பொருட்களை வழங்கியது. அவர்களின் கடன் மீதிகள் அவர்களுக்கு வழங்கப்பட்ட காலப்பகுதியினுள் முழுமையாக அறவிடப்பட்டன.

(ஆ) 2.2.4 (அ)வில் குறிப்பிடப்பட்ட வசதிகள் விற்பனை முகவர்களுக்கும் வழங்கப்பட்டு குறித்த காலப்பகுதியினுள் அறவிடப்பட்டன.

(இ) குறித்த கடன் எல்லைக்கு மேல் மருந்துப் பொருட்களை கடனுக்கு வழங்க வேண்டாம் என ஒசுசல விற்பனை நிலையங்களின் முகாமையாளர்களுக்கு பணிப்புரைகள் வழங்கப்பட்டுள்ளன.

(ஈ) கடன் பெறுநர் மீதிகளில், அரச முகவர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய கடன் மீதிகள் சுகாதார சேவைகள் பணிப்பாளர், அரச இராணுவப் படைகள், பொலிஸ், அரச வைத்தியசாலைகள் ஆகியவற்றுக்கு மேற்கொள்ளப்பட்ட வழங்கல்களை உள்ளடக்குகின்ற அதேவேளை, அந்நிறுவனங்களுக்கான மருந்துப் பொருட்களைத் தருவிக்கும் முன்னணி நிறுவனம் அரச மருந்தகக் கூட்டுத்தாபனமாகும். எனவே, கடன் அடிப்படையில் மருந்துப் பொருட்களை வழங்க வேண்டிய கட்டாய நிலைமை எமது நிறுவனத்துக்கு உண்டு. காலத்துக்குக் காலம் அரச நிறுவனங்களில் நிலவும் நிதி நிலைமைகளின் காரணமாக குறித்த காலப்பகுதியினுள் கடன்களை மீளச் செலுத்துவதில் குறைபாடுகள் காணப்படுகின்றன.

(உ) தொழிற்பாடுகளிலிருந்து கிடைக்கும் எமது மொத்த வருமானத்தில் சுமார் 76% சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கான வழங்கல்களாகும். ஒவ்வொரு வருடமும் அவர்களால் செலுத்தப்படும் தொகை அவர்களுக்குக் கடனுக்கு வழங்கப்படும் மருந்துப் பொருட்கள் மற்றும் அறுவைச் சிகிச்சை உபரணங்களுக்கான பெறுமதியை விடக் குறைவாகும். எனவே, ஒவ்வொரு வருடமும் கடன் படுநர் மீதி வருடந்தோறும் அதிகரிப்பைக் காட்டுகின்றது. அதன் விளைவாக, மொத்த கடன் படுநர் மீதியில் பெரும்பகுதி சுகாதார சேவைகள் பணிப்பாளரிடமிருந்து கிடைக்கவேண்டியவையாகும்.

(ஊ) தனியார் கடன் படுநர்களிடமிருந்து ஒரு வருடத்திற்கு மேலதிகமாக நிலுவையாக உள்ள தொகையில், ரூபா *9,670,225.00* 'சதர்ன் பார்மசூட்டிகல்ஸ்' (Southern Pharmaceuticals) மற்றும் 'லொயிட் பார்மசூட்டிகல்ஸ்' (Lloydd Pharmaceuticals) ஆகிய நிறுவனங்களிடமிருந்து கிடைக்கவேண்டியவையாகும். இந்தத் தொகையை அறவிடுவதற்கு அவசியமான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இவ்விடயம் சட்டப்பிரிவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது. எஞ்சியவற்றில், ரூபா *65,223.87*, 2013ஆம் ஆண்டில் அறவிடப்பட்டதுடன் ரூபா *64,641.49* பதிவழிக்கப்பட்ட அதேவேளை, மேலும், ரூபா. *288,767.40*இற்கு வழங்கப்பட்ட காசோலை நிராகரிக்கப்பட்டது. எஞ்சிய ரூபா *294,102.24*ஐ அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஐந்து வருடங்களுக்கு மேலாக செலுத்தப்படாதுள்ள தனியார் கடன் படுநர் நிலுவையில், ரூபா. *769,826.00* 'எஸ் ஏ எஸ் பாமசூட்டிகல்ஸ்' (S.A.S. Pharmaceuticals) நிறுவனத்திடமிருந்து கிடைக்கவேண்டியதாகும். அவர்களிடமிருந்து குறித்த தொகையை அறவிடுவதற்காக ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு இன்னும் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுகின்றது. எஞ்சிய ரூபா *54,738.00*ஐ அறவிடுவதற்கான கோரிக்கைக் கடிதங்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

### *2.2.4 கணக்காய்வுக்கான போதிய சான்றுகள் இல்லாமை*

(அ) கடன் மீதிகளை உறுதிப்படுத்தக் கோரும் கடிதங்கள் எல்லா கடன்படுநர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளதுடன் அவை அனுப்பப்பட்டதை உறுதிப்படுத்தி தரவுப் பத்திரம் கணக்காய்வுப் பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) மீதிகளை உறுதிப்படுத்துமாறு வழங்குனர்களுக்கு கோரிக்கைக் கடிதங்களை நாம் அனுப்பியபோதிலும், அனேகமான வாடிக்கையாளர்கள் மீதிகளை உறுதிப்படுத்தவில்லை.

*2013ஆம் ஆண்டிலிருந்து மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான கோரிக்கைக் கடிதங்களை அரசாங்கக் கணக்காய்வுப் பிரிவின் ஊடாக அனுப்புவற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*

### *2.2.5* விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணங்கி ஒழுகாமை

**(அ) கூட்டுத்தாபனத்தின் நிதியிலிருந்து PAYE கொடுப்பனவுகளைச் செலுத்துதல்**

தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடல்களை நடத்தி தொழிலாளர்களின் சம்பளங்களிலிருந்து PAYE வரியைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**(ஆ) கொள்வனவுக் குழுக்கள் I மற்றும் II ஆகியவற்றுக்கான கொடுப்பனவுகளைச் செலுத்துதல்**

கொள்வனவுக் குழுக் கூட்டங்கள் சாதாரண வேலை நேரத்திற்குப் புறம்பாக நடத்தப்படுதல் வேண்டும் என்னும் அவதானிப்பை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். சராசரி அளவுக்கு மிகையாகச் செலுத்தப்பட்ட கொள்வனவுக் குழுவின் படி கணிப்பிடப்பட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து அறவிடப்பட்டுள்ளன. தலைவருக்கும் கொள்வனவுக் குழு உறுப்பினர்களுக்கும் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது ஒதுக்கப்பட்ட செயற்பாடுகள், ஆற்றப்பட்ட கடமைகள் ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு கொள்வனவு வழிகாட்டல் ஏற்பாடுகளின் பிரகாரம் அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரத்துடன் சம்பந்தப்பட்ட கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன.

***(இ) 60 நாட்களுக்குள் நிதி அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்***

**PED 12 பந்தி இல. *6.5.1***

*அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் நகல் நிதி அறிக்கை மார்ச் 4ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.*

*எனினும், 2012ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் உள்ள எல்லா நிறுவனங்களினதும் கணக்குகள் சர்வதேச கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் தயாரிக்கப்படுதல் வேண்டுமாதலால், கணக்கீட்டு ஆலோசனை வழங்கும் நிறுவனமாக E & Y எனப்படும் நிறுவனத்தை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் ஈடுபடுத்தியுள்ளது. அது இறுதித் திருத்தங்களையும் இறுதி அறிக்கைகளையும் சமர்ப்பித்ததன் பின்னர் 2013 ஜுலை 12ஆம் திகதி இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.*

**PED 12 பந்தி இல. *6.5.3***

*2011ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை சுகாதார அமைச்சுக்கு அனுப்பப்பட்ட போதிலும், அதனைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக இடைக்கால நடவடிக்கைகள் பற்றிய அறிக்கை கோரப்பட்டது. அவை உள்ளடக்கப்பட்டு அறிக்கை இறுதியாக 2012 ஆகஸ்ட் 22ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.*

*மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட எல்லாக் கொடைகளும் அனுசரணைப் படிகளும் அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் தலைவரினதும் பணிப்பாளர் சபையினதும் அங்கீகாரத்துடனேயே மேற்கொள்ளப்பட்டன.*

### *2.2.6 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்*

*2013ஆம் ஆண்டில் பதிவளிக்கப்பட்ட ரூபா 10,433,795.00இல் 92% அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன் விற்பனைகளாகும். பல வருடங்கள் தொடர்ச்சியாக சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு எழுத்திலான கோரிக்கைகள் விடுக்கப்பட்டதுடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டபோதிலும் அவர்கள் கொடுப்பனவுகளை மேற்கொள்ளத் தவறியதால் அவை இறுதியாக பதிவளிக்கப்பட்டன. 38 தனியார் துறை நிறுவனங்களிடமிருந்து கிடைக்க வேண்டிய பதிவளிக்கப்பட்ட ரூபா 821,428.00இல், ஒரு முகாமையாளரின் தன்னிச்சையான கடன் வழங்கல் மூலம் ரூபா 245,141.00 செலவு ஏற்பட்டிருந்தது. சம்பந்தப்பட்ட முகாமையாளரிடமிருந்து குறிப்பிட்ட தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவர் மரணித்து விட்ட காரணத்தினால் அதனை அறவிடுவதும் முடியாமல் போய்விட்டது. இந்த பதிவளிப்பில் தனியார் துறையைச் சேர்ந்த 15 வாடிக்கையாளர்கள் சம்பந்தப்பட்டுள்ளனர். எஞ்சிய 23 வாடிக்கையாளர்களில் 9 வாடிக்கையாளர்களின் நிறுவனம் மூடப்பட்டமை, முகாமைத்துவ மாற்றம் அல்லது கடனாளியின் மரணம் காரணமாக நிலுவையை அறவிட முடியவில்லை.*

### *3.3.2* கொள்வனவுகள்

***(அ) "Instrument set F/Lumber Disectomy" என்னும் வடிவமைப்பைக் கொண்ட அறுவைச் சிகிச்சை உபகரணங்களின் கொள்வனவு (Indent No. DHS/RSS/348/1290A/08)***

I. *கேள்விப்பத்திரத்திற்கான விலை கூறல்களைச் சமர்ப்பித்த வழங்குனர்களில் தெரிவுசெய்யப்பட்ட வழங்குனர் மட்டுமே பதிவுசெய்யப்பட்டிருந்தது. இந்தக் கட்டளைக்கான பதிவினைப் புதுப்பிக்குமாறு உள்நாட்டு முகவருக்கு நாம் அறிவித்திருந்தோம். தாம் புதுப்பிப்பதற்கான விண்ணப்பத்தை ஏற்கனவே CDDAஇற்கு சமர்ப்பித்திருப்பதாகவும் புதுப்பிக்கப்பட்ட பதிவுச் சான்றிதழைத் தாம் எதிர்பார்த்திருப்பதாகவும் அவர்கள் எமக்குத் தெரிவித்தனர்.*

பதிவுச் சான்றிதழ் காலாவதியான காரணத்தினால், இந்நிலைமை பற்றி CDDAவுக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து 'ஆட்சேபனை இன்மை பற்றிய கடிதம்' மருத்துவ தொழில்நுட்ப வழங்கல்கள் பணிப்பாளரிடமிருந்து கிடைக்கப்பெற்றது. எனவே, துறைமுகத்திலிருந்து அறுவைச் சிகிச்சை உபகரணங்களை விடுவிப்பதற்கு **மருத்துவ தொழில்நுட்ப வழங்கல்கள் நிறுவனத்தினால் (Institute of Medical Technology and Supplies)** வழங்கப்பட்ட **'ஆட்சேபனை இன்மைக் கடிதம்'** ***(2011.01.27ஆம் திகதிய*** **NOL – No Objection Letter)** பயன்படுத்தப்பட்டது. அத்தகைய சூழ்நிலைகளில் வேறு வழி ஏதும் இல்லாததால் பின்பற்றப்படும் சாதாரண நடைமுறை இதுவாகும். இந்நோக்கத்துக்காக இந்தக் கடிதமும் பதிவைப்போன்று செல்லுபடியானதாகும்.

II. அத்தகைய சூழ்நிலைகளில் கூட்டுத்தாபனம் குறிப்பிட்ட நேரடிக் கொடுப்பனவுகள் முறைமையைப் பின்பற்றுவதில்லை. வங்கி சம்பந்தப்பட்ட கடிதங்களையும் வழங்குனரினால் அனுப்பப்பட்ட விலைப்பட்டியலையும் பரிசீலித்த பின்னர் 'கொடுப்பனவுக்கு எதிரான ஆவணங்கள்' (Documents against Payment) என அழைக்கப்படும் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைமையின் பிரகாரம் சம்பந்தப்பட்ட கொடுப்பனவுகளை மேற்கொண்டுள்ளது. இவ்வேளை, முழு இருப்பும் மருத்துவ வழங்கல் பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ளதால், அறவிட வேண்டிய தேவை இல்லை.

நடவடிக்கைமுறை தாமதங்கள் மற்றும் கேள்விப்பத்திரம் தொடர்பாக எழுந்த குழப்ப நிலைமை காரணமாக இந்தக் கேள்விப்பத்திரம் தாமதித்தது. காட்டப்பட்ட குறைபாடுகள் நிவர்த்திக்கப்பட்டு மருத்துவ வழங்கல் பிரிவுக்கு மீண்டும் இருப்பு வழங்கப்பட்டுள்ளது.

***(ஆ) 24 மில்லியன் அலகுகள் இபூபுரபன்*** **(Ibuprofen)** ***200 மிகி குளிகைகள் கொள்வனவு***

I. *சரியானது*

II. *2012 பெப்ரவரி 13ஆம் திகதி இந்த மருந்தின் 10 தொகுதிகளில் உள்ள குளிகைகளில் நிறமாற்றம், நிற வேறுபாடுகள் மற்றும் ஒழுங்கற்ற மேற்பரப்பு போன்றவை பற்றி தொழில்நுட்ப ஆய்வுகூடம் அறிக்கை செய்தது. அதன் பிரகாரம், குறித்த இருப்பின் மீதி பெறப்படவில்லை.*

*2012 ஜனவரி 23ஆம் திகதி மருந்துகள் தரம் குன்றி இருந்தமை அடையாளம் காணப்பட்டு அவை 2012 ஜனவரி 25ஆம் திகதி தலைவரின் அனுமதியுடன் உடனடியாக பாவனையிலிருந்து அகற்றப்பட்டன. அதன் பிரகாரம், அவை நிராகரிக்கப்பட்டு 2 நாட்களினுள் பாவனையிலிருந்து அகற்றப்பட்டன. வழங்குனர் பெறுமதியின் 10%ஐ காசாக மீண்டும் செலுத்தியதுடன் எஞ்சிய தொகைக்கு புதிய தொகையை வழங்குதாக உடன்பட்டனர்.*

III. *இறக்குமதி முகாமையாளர் அத்தகைய உறுதியை வழங்கியிருக்கவில்லை. எனினும், தொழில்நுட்பப் பிரிவில் உள்ள ஆவணங்களின் பிரகாரம், அதன் பிரமாணங்கள் பொருத்தமாக உள்ளதாக தொழில்நுட்பப் பிரிவு உறுதிப்படுத்தியது. அங்கு வெளிப்பட்ட விடயம் ஆவணங்களிலிருந்து பெறக்கூடிய விடயம் அல்ல.*

IV. *சூழ்நிலை தொடர்பான தகவல்கள் வெளியானதும் இரண்டு தினங்களினுள் மருந்துகளை வழங்குதல் நிறுத்தப்பட்டது.*

V. *வழங்கல்களைப் பெறுவதற்கு முன்னர் மாதிரிகளைப் பெறுவதற்கு சற்று காலம் தேவைப்படுவதால், பதிலீட்டு வழங்கலைப் பெறுவதில் தாமதம் ஏற்பட்டது. தற்போது நடவடிக்கைகள் பூர்த்தியடைந்துள்ளன. பொருட்களின் தொகுதிகளை வழங்குமாறு வழங்குனருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.*

***(இ) ரூபா 1,347,696.00 பெறுமதியான அறுவைச் சிகிச்சை உபகரணங்களை கூட்டுத்தாபனம் இழத்தல்.*** **(Indent No. DHS/SUS/19/361A/2009**)

*ஏற்றுக்கொள்கிறோம்.*

*வழங்குனருக்குச் செலுத்தப்பட்ட தொகை 11,654,20 ஐக்கிய அமெரிக்க டொலர்கள் ஆகும். உள்நாட்டு முகவரினால் வழங்கப்பட்ட உத்தரவாதத்தின் அடிப்படையில் வழங்குனருக்கு பணம் செலுத்தப்பட்டதனால், 11,654,20 ஐக்கிய அமெரிக்க டொலருக்கான பற்றுக் குறிப்பு உள்நாட்டு முகவருக்கு அனுப்பப்பட்டது. எனினும், இந்தத் தொகை இற்றை வரை எங்களுக்கு அனுப்பிவைக்கப்படாதுள்ளதால், விண்ணப்பம்* LP/DHS/RSS/10/331A/2012 *மற்றும் விலைப்பட்டியல் இல 9664இன் கீழ் உள்நாட்டு முகவர் கெப் என்டர்பிறைசஸ்* (CAB Enterprises) *நிறுவனத்தினால் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கப்பட்ட வழங்கல்களுக்குச் செலுத்த வேண்டிய தொகை ரூபா 152,750.00 அறவிடப்பட்டதுடன் எஞ்சிய தொகையை அறவிடுவதற்காக இவ்விடயம் சட்டப் பிரிவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.*

*அப்போது கூட்டுத்தாபனத்துக்கு அறிக்கை செய்யப்பட்ட தகவல்களின் பிரகாரம் பணிப்பாளர் சபைக்கு தகவல்கள் வழங்கப்பட்டன. அதாவது, 2011 ஆகஸ்ட் 15ஆம் திகதி கப்பற்றுறை முகவரிடமிருந்து கப்பற்றுறை முகாமையாளருக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் பணிப்பாளர் சபைக்கு தகவல்கள் வழங்கப்பட்டன. 2012ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பொருட்களை ஏல விற்பனை செய்வதற்கு வழங்கப்பட்ட அறிவித்தல் எமது வேண்டுதலின் பிரகாரம் உள்நாட்டு முகவரால் எங்களுக்கு வழங்கப்பட்ட போதிலும், அறிவித்தலில் இருந்த திகதி உண்மையில் 2011 ஏப்ரல் 26 ஆகும். ஏழு நாட்களினுள் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின் பொருட்களின் தொகுதியை விற்பனை செய்வதற்கு அல்லது அழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், துண்டுப் பிரசுரம் ஊடாக பணிப்பாளர் சபைக்கு வழங்கப்பட்ட தகவல் அப்போது கூட்டுத்தாபனத்தில் இருந்தவை பற்றியதாகும்.*

**(ஈ) இன்றாவீனஸ் இன்பியூஷன் (Intravenous infusion)** ***500 மிகி இன் மீளமைப்புக்காக 60,000 குப்பி கிளாரிதுரோமைசீன்*** **(Clarithromycin) தூளைக் கொள்வனவு செய்தல். (Indent No. DHS/MG/177/11)**

i. *இந்த மருந்துப் பொருளுக்கான கோரிக்கையின் பிரகாரம் 30,000 குப்பிகளைக் கொண்ட முதலாவது இறக்குமதி செய்யப்பட்ட தொகுதியை மருத்துவ வழங்கல் பிரிவுக்குக் கையளித்ததன் பின்னர், சில உடைந்த குப்பிகளை அத்தொகுதி கொண்டிருந்ததை அவதானித்த மருத்துவ வழங்கல் பிரிவு இவ்விடயம் பற்றி ஆராய்வதற்கு ஒரு குழு நியமிக்கப்படுதல் வேண்டும் எனக் கோரியது. இந்தக் கோரிக்கைக் கடிதம் அனுப்பப்பட்டு 07 நாட்களின் பின்னர், அதாவது, 2011 மே 30ஆம் திகதி, முழு மருந்துத் தொகுதியையும் பரிசீலித்து சேதமடைந்த குப்பிகளை மட்டும் எவ்வித கட்டணமும் இன்றி பதிலீடு செய்யுமாறு கூட்டுத்தாபனத்தைக் கோரியது.*

ii. *இந்தச் சூழ்நிலை மருந்தின் தரம் குன்றியது மட்டுமன்றி பொதியில் இருந்த மருந்துக் குப்பிகள் உடைந்து காணப்பட்டமையினாலும் ஏற்பட்டதாகும். கடன் கோரல் கடிதத்தை (2011 மே 31) திருத்திய வேளையில், மருந்தின் தரம் குன்றிக் காணப்பட்டதாகவோ அல்லது பாவனையிலிருந்து அகற்றப்பட்டதாகவோ குறிப்பிடப்படவில்லை. மருந்து தொடர்பாக பாரதூரமான ஒரு நிலைமை காணப்படாததாலும் (தரக்குறைவு அல்லது பாவனையிலிருந்து அகற்றுதல்), எஞ்சிய தொகுதி மருந்துகளை இலங்கையில் இறக்குமதி செய்வதை இடைநிறுத்துவதற்கான தேவை இல்லாததாலும், சம்பந்தப்பட்ட வழங்குனரிடமிருந்து குறித்த மருந்துகளை இறக்குமதி செய்வதை நிறுத்துமாறு மருத்துவ வழங்கல் பிரிவோ அல்லது ஏதேனும் வேறு அதிகார சபையோ கோராத காரணத்தினாலும், எஞ்சிய மருந்துகள் இலங்கையில் இறக்குமதி செய்யப்பட்டன.*

iii. *இந்த வழங்குனரின்* **'கிளாரித்துரோமைசின் iv' (Clarithromycin IV)** *500 மிகி ஊசி மருந்தைக் கொண்ட தொகுதி இல. EB 02229 பாவனையிலிருந்து அகற்றப்படுதல் வேண்டும் என NDQAL அதன் அவதானிப்பை 2011 ஜூன் 30ஆம் திகதி தெரிவித்தது. அவ்வேளையில், சம்பந்தப்பட்ட இருப்புகளைப் பதிலீடு செய்வதற்கு புதிய இருப்புகளை கட்டணமின்றி பெற்றுத்தருமாறு மருத்துவ வழங்கல் பிரிவு கூட்டுத்தாபனத்துக்கு தொடர்ச்சியாக அறிவித்துக்கொண்டிருந்தது. இவ்வாறாக மருத்துவ வழங்கல் பிரிவு இரண்டாம் மற்றும் மூன்றாம் தொகுதி மருந்துகளை ஏற்றுக்கொள்ளாத காரணத்தினால், கூட்டுத்தாபனத்துக்கு இழப்பு ஏற்பட்டுள்ளதாகத் தென்பட்டாலும், 002/2013 மற்றும் 353/2012 (திருத்தியது) ஆகிய குறிப்பு இலக்கங்களைக் கொண்ட இரண்டு பற்றுக் குறிப்புகள் முறையே 84,182.81 ஐ.அ.டொ. மற்றும் 13,883.04 ஐ.அ.டொ. தொகைகளை மீளப்பெறுவதற்காக வழங்குனரிடம் சமர்ப்பிக்கப்பட்டன. வழங்குனர் ஏற்கனவே வரவுக் குறிப்பு 002/2013இற்கான முழுமையான தொகையைச் செலுத்தியிருந்ததுடன் வரவுக் குறிப்பு 353/2012இற்கான 7,518.96 ஐக்கிய அமெரிக்க டொலரைச் செலுத்துமாறு ஆலோசனை கூறப்பட்டது.*

*அதற்கு மேலதிகமாக, இந்த மருந்தின் தரக்குறைவு தொடர்பாக எவ்வித அறிக்கையும் மேற்கொள்ளப்படாத அதே வேளை, பாவனையிலிருந்து அதனை அகற்றுவதற்கான காரணம் அதன் ஆரம்பப் பொதியிடலில் உள்ள குறைபாடு ஆகும். அதேவேளை, நிராகரிக்கப்பட்ட இருப்புகளைப் பதிலீடு செய்வதற்கு புதிய இருப்புகளை மருத்துவ வழங்கல் பிரிவு தொடர்ந்தும் கோரிய காரணத்தினால், மீள் கொடுப்பனவைப் பெறுவதன் மூலம் கூட்டுத்தாபனத்துக்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதை விட, புதிய இருப்புகளைப் பெறுவதே மிக முக்கியமாகக் காணப்பட்டது. கூட்டுத்தாபனத்துக்கு ஏற்பட்ட நிதி இழப்பு தாமாகவே ஈடுசெய்யப்படுகின்றது என்பதும் வெளிப்படையான உண்மையாகும். எனினும், மருத்துவ தொழில்நுட்ப இரசாயனப் பொருட்கள் மற்றும் வழங்கல்கள்* (Medical Technology Chemicals and Supplies) *பணிப்பாளரின் விதப்புரையின் பிரகாரம் மருந்துப் பொருட்கள் இந்த வழங்குனரிடமிருந்து கட்டணம் எதுவும் இன்றி மீண்டும் வழங்கப்பட வேண்டும் என 2012 ஏப்ரல் 5ஆம் திகதி அறிவிக்கப்பட்டது. அதன் பின்னர் தான் கொடுப்பனவை அறவிடும் நடவடிக்கைமுறை ஆரம்பிக்கப்பட்டது.*

*மருத்துவ வழங்கல்கள் மற்றும் தொழில்நுட்பப் பணிப்பாளரின் விதப்புரை கொள்வனவுக் குழுவுக்கு அறிவிக்கப்பட்டு, குறித்த வழங்குனரின் சம்பந்தப்பட்ட நிராகரிக்கப்பட்ட இருப்புகளை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டவுடன் கணக்காய்வு நோக்கங்களுக்காக கோப்பு பெறப்பட்டிருந்ததால் பணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை தாமதமடைந்த போதிலும், 90,546.89 ஐக்கிய அமெரிக்க டொலர்கள் ஏற்கனவே அறவிடப்பட்டுள்ளது என்பதையும் இன்னும் அறவிட வேண்டிய தொகை 7518.96 ஐக்கிய அமெரிக்க டொலர்கள் மாத்திரமே என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.*

iv. *10%ஐ பிடித்து வைத்தல் தகுந்தவாறு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தரக்குறைவு பற்றி அறிக்கை செய்யப்பட்ட நேரத்தில் 60 நாட்கள் பிடித்து வைத்திருக்கும் காலம் முடிவடைந்ததால், அதனூடாக அறவீட்டை மேற்கொள்ள முடியாமல் போனது.*

*மேலும், மருத்துவ வழங்கல் பிரிவினால் எப்போதும் தொடர்ச்சியாக அறிவிக்கப்பட்டவாறு, அது ஒரு அத்தியாவசிய மருந்தாகையினால், அது போதிய அளவில் கிடைக்காத காரணத்தினால், நோயாளிகளுக்கான சிகிச்சைச் சேவைகள் தடைபெறாத சூழ்நிலையை உறுதிப்படுத்தும் விதமாக கூட்டுத்தாபனம் இந்தப் பிரச்சினையின் ஆரம்பத்திலிருந்தே செயற்பட்டதை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.*

**(உ) Canulated Screw** ***அறுவைச் சிகிச்சை உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்***

**(Indent No. DHS/SU/221/825B/08)**

i. *இது 129 மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காக வழங்கப்பட்ட சிக்கலான கட்டளையாகும். கட்டளைக்கான விலைகூறல்களை ஏழுக்கும் அதிகமான வழங்குனர்கள் சமர்ப்பித்திருந்தனர். ஆகவே, குறும்பட்டியலைத் தயாரிப்பதற்கு வழக்கத்தை விட கூடுதலான காலம் தேவைப்பட்டது தவிர்க்க முடியாத ஒன்றாகும். மேலும், வழங்குனரைத் தீர்மானித்ததன் பின்னர் கூட, மருத்துவ வழங்கல் பிரிவு அதன் 2009 ஜூலை 20ஆம் திகதிய கடிதம் மூலம் அதன் 129 மருந்துப் பொருட்களில் 33 பொருட்களை இரத்துச் செய்தது. இவ்வாறாக இரத்துச் செய்யப்பட்டிருந்தபோது, கொள்வனவுக் குழுவுக்கு அதைப்பற்றித் தெரிவித்திருத்தல் வேண்டும். இதற்கும் சிறிது காலம் தேவைப்பட்டது. 2009 செப்டம்பர் 11ஆம் திகதி விண்ணப்பம் வழங்கப்பட்டிருப்பினும், அப்போது கூட்டுத்தாபனத்தில் நிலவிய நிதி நெருக்கடி*

காரணமாக ரூபா 5 மில்லியனுக்கு அதிகமான ஒரு கட்டளையை வழங்குவதற்கு முன்னர் நிதிச் சூழ்நிலையைக் கவனத்தில் கொண்டு நாணயக்கடிதம் (letter of credit) நவம்பர் மாதத்திலேயே வழங்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக, நாணயக்கடிதத்தின் கொடுப்பனவு நிபந்தனைகள் தொடர்பாக வழங்குனரால் எழுப்பப்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும் சிறிது காலம் விரயமானது.

இந்தக் கேள்விப்பத்திரத்தின் ஆரம்ப மதிப்பீட்டுச் செயற்பாடு என்பு மருத்துவ அறுவைச் சிகிச்சை நிபுணர் டாக்டர் உபாலி பணகல அவர்களினால் மேற்கொள்ளப்பட்டது. அதிகுறைந்த விலைகள் மற்றும் ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் சான்றிதழ் ஆகிய மூலப்பிரமாணங்களின் அடிப்படையில் வழங்குனர் தெரிவு இடம்பெற்றது. (பதிவு செய்யும் நடைமுறைக்கு வழிகோலும் நடவடிக்கையின்போது சம்பந்தப்பட்ட துறையைச் சேர்ந்த ஒரு விசேட வைத்தியர் மாதிரிகளை பரிசீலிப்பார்.) மேற்குறிப்பிட்ட கேள்விப்பத்திரம் தொடர்பாக எல்லா மாதிரிகளையும் வேறுபட்ட ஒரு வழங்குனர் சமர்ப்பித்திருந்தார். விதந்துரைக்கப்பட்ட வழங்குனரின் (GST கூட்டுத்தாபனம் - இந்தியா) விலைகளோடு ஒப்பிடுகையில், அவரின் விலைகள் மிக அதிகமாக இருந்த காரணத்தினால், மேற்படி தெரிவில் எவ்வித மாதிரிகளும் பரிசீலிக்கப்படவில்லை. மதிப்பீட்டாளர் அவரின் அனுபவம் மற்றும் அறிவின் அடிப்படையில் இவ்விதமாக தனது விதப்புரைகளை வழங்கினார்.

மேலும், மாதிரிகளைப் பரிசீலிப்பதற்கான விதப்புரைகள் இல்லாத காரணத்தினால் மாதிரிகளைப் பரிசீலித்தல் மேற்கொள்ளப்படவில்லை.

ii. இந்த மருந்துப் பொருட்களின் காலாவதியாகும் காலம் மூன்று வருடங்களாதலால், எமது அறிவித்தலின் பதில் நடவடிக்கையாக இறக்குமதி ஆவணங்களை வழங்குனர் திருத்துவார் என்ற எதிர்பார்ப்பில் மருந்துப்பொருட்கள் வைக்கப்பட்டிருந்தன.

பற்றாக்குறையாக வழங்கப்பட்ட 16 அலகுகளுக்கான வரவு அட்டை (Debit Sheet) இல.00339/2012இன் பெறுமதியாகிய 13,284.04 ஐக்கிய அமெரிக்க டொலரில், 2013 பெப்ரவரி 15ஆம் திகதி 1,041.60 ஐக்கிய அமெரிக்க டொலர் வழங்குனரிடமிருந்து அறவிடப்பட்டது. எனவே, தற்போது எஞ்சியவற்றின் அறவிட வேண்டிய பெறுமதி 12,242.44 ஐக்கிய அமெரிக்க டொலர்களாகும். வழங்குனர் இந்தத் தொகையைச் செலுத்தாவிட்டால், அவரை கறுப்புப் பட்டியலில் இடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**(ஊ) ஜென்டமிசின் (Gentamicin) ஊசி மருந்து BP 80 kpfp/2kpyP கொள்வனவு**
**Indent No. SPC/PI/509/10)**

i. முதலாவது கேள்விப்பத்திரம் மூலம் தெரிவுசெய்யப்பட்ட வழங்குனரின் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு முந்திய மாதிரிகள் நிராகரிக்கப்பட்டதால் கேள்விப் பத்திரங்கள் புதிதாகக் கோரப்படவேண்டியிருந்தன.

ii. ஏற்றுக்கொள்கிறோம்.

iii. மருந்துப் பொருளுக்கான தேவை, தற்போதுள்ள இருப்பின் நிலைமை மற்றும் ஏனைய விடயங்களைக் கவனத்தில் கொண்டு பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு முந்திய மாதிரியின் பரிசீலனைக்கு அமைவாக கேள்விப்பத்திரத்தை வழங்கும் செயற்பாட்டை கொள்வனவுக் குழு மேற்கொண்டிருந்தது. பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு முந்திய பரிசீலனை ஒரே தொகுதியிலிருந்து இரண்டு சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்படுவதுடன் இரண்டாவது பரிசீலனை வழங்குனரின் கோரிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும், அதன் செலவை வழங்குனரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

முதல் 80,000 அலகுகளுக்கு நாணயக்கடிதத்தை வழங்குதல் சரியானதாகும். வழங்குனர்கள் ஒரு நாணயக்கடிதம் இன்றி உற்பத்தித் தொழிற்பாடுகளை ஆரம்பிப்பதில்லை. இங்கு ஒப்பந்தத்தை வலுப்படுத்துவதற்காக ஒரு நாணயக்கடிதம் வழங்கப்பட்டது. எனினும், ஏற்றுமதி செய்வதற்கு முந்திய மாதிரி பரிசீலனை மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என்னும் நிபந்தனைக்கு அமைவாக நாணயக்கடிதம் பயன்படுத்தப்பட்டது. பொருட்கள் பெறப்படாததால், நாணயக்கடிதம் செயற்படுத்தப்படவில்லை. வழங்குனரிடமிருந்து தொடர்பான கட்டணங்களும் அறவிடப்பட்டன.

iv. குறிப்பிடப்பட்ட தகவல்கள் சரியாகும். அப்போது சந்தையில் நிலவிய மிகக்கடுமையான பற்றாக்குறையைக் குறைப்பதற்கு முதலாவது தொகுதியாக 100,000 அலகுகளை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. எஞ்சிய தொகுதி பொருட்களை இறக்குமதி செய்வதற்கான கால வரையறையை நிர்ணயிப்பதற்குத் தவறிய காரணம், முந்திய சந்தர்ப்பங்களில் மாதிரிகள் திருப்தியாக இல்லாதிருந்தமையும் முதலாவது தொகுதியில் தரம் குன்றிக் காணப்படின் பிரச்சினைகளையும் ஏற்படக்கூடிய நட்டத்தையும் தவிர்ப்பதாகும்.

v. விண்ணப்பம் வழங்கப்பட்ட 2010 டிசம்பர் 14ஆம் திகதியளவில், குறிப்பிட்ட மருந்தின் பதிவு மேலும் 4 ½ மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாக இருந்தது. எனினும், பதிவு காலாவதியான பின்னர் வழங்குனர் கட்டளையை வழங்கியிருந்தார். குறிப்பிட்ட மருந்து விலை குறைந்த அத்தியாவசியமான நுண்ணுயிர் கொல்லியாகும் என்பதுடன் 2009ஆம் ஆண்டிலிருந்து அது பற்றாக்குறையாகவும் உள்ளது என்னும் அடிப்படையில் இந்த தொகுதி மருந்துப் பொருட்களை விடுவிப்பதற்கு ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகார சபையின் விசேட அனுமதி பெறப்பட்டது.

vi. சந்தைக்கு மருந்துப் பொருட்களை வழங்கிய வழங்குனர்களில், 'எ பவர் அன் கம்பனி' மருந்தை குப்பியொன்றுக்கு 1.40 ஐக்கிய அமெரிக்க டொலர் செலவில் இறக்குமதி செய்திருந்தது. அடுத்த வழங்குனரான 'வைற்றல் ஹெல்த் கெயார் (Vital Healthcare) - இந்தியா நிறுவனத்தின் முன்னைய மாதிரிகள் தரம் குன்றிக் காணப்பட்டமையினால் அதன் கட்டளை இரத்துச் செய்யப்பட்டது. மேலும், தேவையான தகைமைகளை எந்தவொரு விலை கூறுனரும் கொண்டிராத காரணத்தினால் கேள்விப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டதுடன் புதிதாக கேள்விப்பத்திரங்களைக் கோருவதன் மூலம் புதிய பொருத்தமான வழங்குனர் ஒருவரைத் தெரிவுசெய்யவேண்டியிருந்தது.

vii. ஏற்றுக்கொள்கிறோம்.

viii. தற்போது சம்பந்தப்பட்ட வழங்குனரின் எல்லா பதிவுகளையும் ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை இரத்துச் செய்துள்ளது. பற்றுக் குறிப்புகள் மீதான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படாமையினால் சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்காக இவ்விடயம் சட்டப் பிரிவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.

*(எ) லொறிகள் கொள்வனவு*

i. குளிரூட்டிகளைக் கொண்ட இரண்டு லொறிகளைக் கொள்வனவு செய்வதற்கான எல்லா கேள்விப்பத்திர ஆவணங்களையும் பரிசீலித்தல் மற்றும் அதனுடன் தொடர்பான மதிப்பீடுகள் மற்றும் அவசியமான விதப்புரைகள் கொழும்பு மா நகர சபையைச் சேர்ந்த வாகனங்கள் பற்றிய விசேட அறிவாற்றல் மிக்க இயந்திர பொறியியலாளர் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் ஏனைய உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்டது. அவர்கள் எல்லோரினாலும் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் பின்னர் அடையப்பெற்ற உடன்பாட்டின் பிரகாரம் மூன்றாவது மிகக் குறைந்த விலைகூறலை வழங்கிய சதொச மோட்டர்ஸ் நிறுவனத்திடமிருந்து இரண்டு வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கான விதப்புரைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ii. சதொச மோட்டர்ஸ் நிறுவனத்தின் கேள்விப்பத்திர ஆவணத்தின் பிரகாரம், பெறுமதியின் 50% கட்டளையுடன் வழங்கப்படுதல் வேண்டும். 2012 ஜுன் 15ஆம் திகதி இரண்டு லொறிகளைக் கொள்வனவு செய்வதற்கான கட்டளைகள் வழங்கப்பட்டன. ஆனால், அந்தச் சந்தர்ப்பத்தில் கேள்விப்பத்திர ஆவணத்தின் பிரகாரம், பெறுமதியின் 50% செலுத்தப்படவில்லை. பதிலாக கூட்டுத்தாபனத்தில் வாகனங்களை வழங்கியதன் பேரில் 2013 ஜுலை 26ஆம் திகதிய காசோலை மூலம் முழுக்கொடுப்பனவும் செலுத்தித் தீர்க்கப்பட்டது.

### *3.3.3 இலாப எல்லையின் மீதாக கொடுக்க வேண்டிய பங்கிலாபங்கள்*

கூட்டுத்தாபனத்தின் நிதி திரவத்தன்மை ஆரோக்கியமான மட்டத்தில் இல்லாததால், 2012ஆம் ஆண்டில் பங்கிலாபம் வழங்குவது சாத்தியப்படவில்லை. எனினும், 2013ஆம் ஆண்டில் பங்கிலாபமாக 50 மில்லியன் செலுத்தப்பட்டது.

### *3.3.4 முகாமைத்துவ வினைத்திறன் இல்லாமை*

(அ) கொழும்பு 7இல் ஆய்வுகூடக் கட்டிடம் நிர்மாணிக்கப்படுகின்றது. 2015ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வேலை முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஆ) மத்திய உட்செலுத்தும் வடிகுழாய் (Central Venous Catheter)

மருத்துவ வழங்கல் பிரிவின் குறிப்பு இல. MSD/SC/003/08ஐக் கொண்ட கட்டளையின் கீழான குறிப்பு SR 521454இன் கீழ், சம்பந்தப்பட்ட வடிகுழாய் 14Gx18G லூம்ஸ் (Lumes) மற்றும் 7'x16செமீ நீளத்தைக் கொண்ட இரட்டை லூமன் வடிகுழாய் (Double Lumen Catheter) என குறிப்பிடப்பட்டிருப்பதுடன் வழங்குனரின் விலை கூறலில் 16 செமீ (16G/16G) நீளமான CV-702/167Fr இரண்டை லூமன் அடல்ட் செற் (Double Lumen Adult Set) என குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு தெரிவு செய்யப்பட்ட வழங்குனர் இந்த பொருளுக்கான விலைகூறலை வழங்கியதாலும், எல்லா விலை கூறுனர்களையும் விட குறைவான விலையைக் குறிப்பிட்டிருந்தமையினாலும் முன்னைய வழங்குனராக இருக்கின்ற காரணத்தினாலும் தெரிவுசெய்யப்பட்டார்.

I. **DHS/SWW/3/32L/08-09** இலக்க விண்ணப்பம் 2007 ஆகஸ்ட் 14ஆம் திகதி வழங்குனருக்கு கொடுக்கப்பட்டு அதில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுகைகள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 5000 இனங்கள் - | ஜனவரி | 2008 |
| 4000 இனங்கள்- | மே | 2008 |
| 5000 இனங்கள்- | ஜனவரி | 2009 |
| 4000 இனங்கள்- | மே | 2009 |

சாதாரண நடவடிக்கையின் பிரகாரம், வழங்குனருக்கு விண்ணப்பம் கிடைக்கப்பெற்றதும் உற்பத்தி ஆரம்பிக்கும். விண்ணப்பம் 2007ஆம் ஆண்டு வழங்கப்பட்ட போதிலும், 2008ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5,000 இனங்களைக் கொண்ட தொகுதியின் நாணயக்கடிதம் வழங்குதல் மட்டுமே சாத்தியமானதாகும். அதே வேளை, (2008 ஜனவரி) தொகுதிகளின் வழங்கலும் எதிர்பார்க்கப்பட்டது. எனினும், முதலாவது தொகுதியில் உள்ள 5000 இனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள காலாவதியாகும் திகதி 2010.10.31 ஆகும். அந்தத் தொகுதிப் பொருட்கள் 2008ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் மருத்துவ வழங்கல் பிரிவுக்கு வழங்கப்பட்டன. மருத்துவ வழங்கல் பிரிவு 3 வருடங்களில் காலாவதியாகக்கூடியவாறு கோரிக்கை விடுத்திருந்த போதிலும், முதலாவது தொகுதியில் இருந்த 5,000 இனங்களின் எஞ்சிய காலாவதியாவதற்கான காலம் 2 வருடங்களும் 8 மாதங்களும் ஆகும். அதன் செல்லுபடியாகும் காலம் 4 மாதங்களினால் மட்டுமே குறைவடைந்திருந்தது. நாணயக்கடிதத்தின் தாமதம் காரணமாகவே இந்நிலை எழுந்தது. அது தவிர்க்க முடியாததாக காரணியாகும்.

II. முன்னைய முதலாம் மற்றும் இரண்டாம் தொகுதிகளை மருத்துவ வழங்கல் பிரிவுக்கு வழங்கப்பட்ட போது அவற்றின் செல்லுபடியாகும் காலம் குறைவாகவே (36 மாதங்களை விடக் குறைவு) இருந்த காரணத்தைக் காட்டி ரூபா 6,977,816.38 நட்டத்தை மீளளிப்புச் செய்வதற்கு வழங்குனர் மறுத்துவிட்டனர்.

மருத்துவ வழங்கல் பிரிவுடனும் பிரதிப் பணிப்பாளர் நாயகத்துடனும் (ஆய்வுகூட சேவைகள்) 2013 ஆகஸ்ட் 7ஆம் திகதி நடத்திய கலந்துரையாடலில் நிராகரிக்கப்பட்ட மருந்துகளை மீண்டும் ஏற்றுக்கொள்வது பற்றிய விடயம் கொண்டுவரப்பட்டபோதிலும், அந்த சந்தர்ப்பத்தில் வழங்கப்பட்ட விதப்புரை மருந்துகளின் தொகுதி குறைந்த பாவனைக் காலத்தைக் கொண்டிருந்ததால், வழங்குனரிடமிருந்து கொடுப்பனவை அறவிட வேண்டும் என்பதாகும்.

வழங்குனர் கொடுப்பனவைச் செலுத்துவதற்குத் தவறியதால், இவ்விடயம் சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்காக சட்டப் பிரிவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.

(இ) வருட இறுதியில் கொள்கலன் வைப்புக் கடன் மீதி குறிப்பிடப்பட்டது. சுமார் 3.0 மில்லியன் ரூபாய் தற்போது அறவிடப்பட்டிருப்பதுடன் வைப்பின் எஞ்சிய பணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கைகளும் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன.

(ஈ) பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன், ஆவணங்களைத் தவறவிடுதல், கப்பற்றுறை முகவரின் முகவரி மாற்றம் மற்றும் குறிப்பிட்ட கப்பல் சேவையின் செயற்பாட்டை முடிவுறுத்தல் போன்ற காரணங்களினால் அறவிட முடியாத கொள்கலன் வைப்புகள் பதிவழிக்கப்பட்டன.

(உ) காப்புறுதிக் கோரிக்கைகளைப் பெறுதல்

i. பல்வேறு காரணங்களினால் இற்றை வரை தீர்க்கப்படாத காப்புறுதிக் கோரிக்கைகளைப் பெறுவதற்கும் எஞ்சியவற்றை பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் பதிவழிப்பதற்கும் நான் நடவடிக்கை மேற்கொள்வேன்.

II மற்றும் III – இந்த இரண்டு விடயப் பரப்புகளுக்கும் வெவ்வேறான அறிக்கைகள் பேணப்படுவதால், இரண்டு பெறுமதிகளுக்கும் இடையில் வேறுபாடுகள் காணப்படலாம். இவ்வாறு எப்போதும் நடைபெறுவதில்லை. கணக்குப் பிரிவு காலத்துக்குக் காலம் அவற்றை இணக்கம் செய்து அவசியமான திருத்தங்களை மேற்கொள்கின்றன.

### 3.3.5 தொழிற்பாட்டு வினைத்திறன் இன்மை

அ. பௌதீகப் பாதுகாப்பு

தற்போது பாதுகாப்பு வலை மீள்திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

ஆ. தரத்தைப் பாதுகாத்தல்

பல்வேறு காரணங்களுக்காக மருத்துவ வழங்கல் பிரிவினால் நிராகரிக்கப்பட்ட மருந்துகள் மற்றும் அறுவைச் சிகிச்சை உபகரணங்கள் ஆகியவை தற்காலிகமாக இந்த பண்டசாலையில் வைக்கப்பட்டுள்ளன. மேலும், நிராகரிக்கப்பட்ட மருந்துப் பொருட்கள் நீண்ட காலத்திற்கு களஞ்சிய சாலையில் வைக்கப்படாது, துரிதமாக சீராக்கி மருத்துவ வழங்கல் பிரிவுக்கு மீண்டும் அனுப்பப்படுகின்றன. எனினும், பல்வேறு நடைமுறைக் காரணங்களால் இங்கு தாமதங்கள் ஏற்படுகின்றன. சுகாதார அமைச்சுச் செயலாளரின் தலையீட்டின் காரணமாக, இந்தச் சூழ்நிலையை நிவர்த்திப்பதற்கு, சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் எமது கூட்டுத்தாபன மற்றும் மருத்துவ வழங்கல் பிரிவின் பிரதிநிதிகளைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. குழு வாரம் ஒரு முறை கூடி தற்காலிகமாக நிராகரிக்கப்பட்ட பொருட்கள் தொடர்பாக எல்லா தரப்பினரினதும் சம்மதத்துடன் துரிதமான தீர்மானங்களை மேற்கொள்கின்றது. மேலும், பெயர்ச்சிட்டைகளின் ஒவ்வாமை காரணமாக ஏற்படும் பிரச்சினையான சூழ்நிலைகளைத் தவிர்ப்பதற்காக மாதிரிகளின் பெயர்ச்சிட்டைகள் முதலில் பெறப்பட்டு கப்பலில் அனுப்புவதற்கு முன்னர் அங்கீகாரம் வழங்கும் ஒரு முறைமையும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சிறந்த களஞ்சிய வசதிகளைப் பெறுவதற்காக புதிய பண்டசாலைத் தொகுதியின் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் தற்காலிகப் பரிகாரமாக பல பண்டசாலைகளை வாடகைக்குப் பெறுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 3.3.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கூற்றை ஏற்றுக்கொள்கின்றேன்.

### 3.3.7 அடையாளம் காணப்பட்ட நட்டங்கள்

**(அ) விற்பனை செய்ய முடியாத மருந்துப் பொருட்கள்**

i. மருத்துவ வழங்கல் பிரிவு சில சமயங்களில் உள்ளடக்கங்களில் உள்ள குறைபாடு காரணமாகவும் சில வேளைகளில் அந்த இனங்களில் காணப்படும் குறைபாடுகள் காரணமாகவும் அவற்றை நிராகரிக்கின்றது. கூட்டுத் தாபனம் அத்தகைய இனங்களை தனது பொறுப்பில் எடுத்து சரிப்படுத்தக்கூடிய இனங்கள் வழங்குனருக்கு அல்லது அவரின் முகவருக்கு சரிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட்டு, பின்னர் அவை மருத்துவ வழங்கல் பிரிவுக்கு மீண்டும் ஒப்படைக்கப்படுகின்றன. குறைபாடுகளை சரிப்படுத்த முடியாத இனங்களுக்கான பணம் அறவிடப்படுகின்றது. இந்நடவடிக்கை முடிவடையும் வரை நாம் எல்லா தொகுதிகளையும் வைத்திருக்க வேண்டும்.

ii. விற்பனை செய்ய முடியாத மருந்துப் பொருட்கள்

இருப்பை உறுதிப்படுத்தல் அறிக்கையின் பிரகாரம்,

| **விற்பனை செய்ய முடியாத இனங்கள் - பிரதான களஞ்சியம்** | **பெறுமதி (ரூபா)** |
|---|---|
| கணக்காய்வு அறிக்கையின் பிரகாரம் மொத்தம் - | 111,341,885.00 |
| விற்பனை செய்ய முடியாத இனங்கள்– (2012இல் ) | (21,554,608.00) |
| குறிப்பேட்டு வவுச்சர் இல.485 - (2012ஆம் ஆண்டு) | 6,654,317.00 |
| மொத்தம் | 96,441,594.00 |
| மீண்டும் பிரதி பண்ணப்பட்ட இனங்கள் | (3,325,212.00) |
| ஒதுக்கீடுகளில் உள்ளடக்கப்படாத இனங்கள் | (419,080.00) |
| அழிக்கப்பட்டு இன்னும் பட்டியலில் உள்ளவை | (3,126,745.02) |
| 2013இல் பட்டியலில் இருந்து அகற்றப்பட்ட, இன்னும் கணக்கில் உள்ளவை | 2,454,583.68 |
| | 92,025,140.66 |

இந்தப் பெறுமதி 2011 பட்டியலில் இருந்து கழிக்கப்பட்டது
இறுதிக் கணக்குகளின் பிரகாரம்,

| | |
|---|---|
| பேரேட்டு மீதி (2012ஆம் ஆண்டு நீங்கலாக) | 102,118,474.00 |
| உள்நாட்டுக் கொள்வனவுகள் – ஒசுசல (அழிக்கப்படாத பெறுமதி) | 1,897,750.69 |
| மொத்தம் | 100,220,724.31 |
| 2008ஆம் ஆண்டில் அழிக்கப்பட்ட இனங்கள் | (5,241,768.10) |
| | 94,978,956.21 |

ஒதுக்கீடுகளில் இந்தத் தொகை உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதை அடையாளம் காண முடியாததால், அது பேரேட்டுப் பெறுமதியிலிருந்து கழிக்கப்படவில்லை.

அவ்வாறாக, நிதிக்கூற்றுகளிலும் இருப்பை உறுதிப்படுத்தல் அறிக்கைகளிலும் எடுத்துக்கூறப்பட்டுள்ள பெறுமதிகளுக்கிடையிலான வேறுபாடு ரூபா 2,953,815.55 ஆகும்.

விற்பனை செய்ய முடியாத ரூபா 62,591.00 பெறுமதியான இனங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்னும் விடயம் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. கிரமமாக மேற்கொள்ளப்படும் உள்ளக தொழிற்பாட்டுச் செயற்பாடுகளினாலேயே இது நிகழ்ந்துள்ளது.

அதே வேளையில், ரூபா 6,092,800.00 பெறுமதியான மருந்துப் பொருட்கள் காலாவதியாகியிருந்ததுடன் அதில் ரூபா 3,4த3,985.48 பெறுமதியை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தரம் குறைந்த மருந்துகளுக்கான நட்ட ஈட்டை அறவிடுவதற்கு அவசியமான நடவடிக்கைகளை இறக்குமதிப் பிரிவு மேற்கொள்கின்றது.

### 3.3.8 மனித வள முகாமைத்துவம்

அ. நடைமுறைக் காரணங்களால் வெற்றிடங்களை நிரப்புதல் தாமதமடைந்துள்ளது. இவைகளில் பெரும்பாலானவை 2013ஆம் ஆண்டில் நிரப்பப்பட்டன.

ஆ. வெற்றிடங்களை நிரப்புதல் தொடர்பாக எழுந்த நடைமுறைப் பிரச்சினைகள் காரணமாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை மேற்கொள்வதற்கு மாற்று வழியொன்று இல்லாததால் இந்நிலைமை தோன்றியது.

## 4. கணக்கீடு மற்றும் நல்ல ஆளுகையில் வெளிப்படைத்தன்மை

### 4.1 இணைந்த திட்டம்

2007 – 2011ஆம் ஆண்டுகளுக்கான இணைந்த திட்டமும் 2008, 2009, 2010 மற்றும் 2011ஆம் ஆண்டுகளுக்கான பிரத்தியேகமான நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்பட்டிருந்தன.

மேலும், 2007 – 2011 திட்டத்தின் நீடிப்பாக 2012ஆம் ஆண்டுக்கான பிரத்தியேக நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்பட்டிருந்தது. அது முன்னேற்ற மீளாய்வுக்கு உட்பட்டுள்ளது.

### 5.2 நடவடிக்கைத் திட்டம்

(அ) 2012ஆம் ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட நடவடிக்கைத் திட்டத்தில் உரிய பொறுப்பைக் கொண்டிருந்த முகாமையாளர்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர். மேலும், முழுப் பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டிருந்த திணைக்களத் தலைவர்களின் பெயர்களும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(ஆ) ஆய்வுகூடக் கட்டிடம் கொழும்பு 7இல் நிர்மாணிக்கப்படுகின்றது. அப்பணி 2015 பெப்ரவரியில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

முகாமைத்துவத் தகவல் முறைமைகளைத் தாபிப்பதில், அதற்கு அவசியமான மனித வளங்கள் பற்றிய பிரச்சினைகள் எழுந்தன. விசேட அங்கீகாரத்தின் கீழ் கருத்திட்டத்துக்கான பெண் முகாமையாளர் ஒருவரைத் தெரிவு செய்வதன் மூலம் இந்நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

நடவடிக்கைத் திட்டத்தில் அடையாளம் காணப்பட்ட விடயப்பரப்புகளுக்கு மேலதிகமாக, பிந்திய சந்தர்ப்பங்களில் வேறு முன்னுரிமைகளும் தோன்றின. அவ்வாறாக, 2012ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம், பொலன்னறுவை மற்றும் தங்கல்ல ஆகியன அடையாளம் காணப்பட்டன. அதன் பிரகாரம், முன்னுரிமையின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்ட அதே இடங்களாக இல்லாத போதிலும் மூன்று இடங்கள் தொடர்பான மூன்று ஒசுசல விற்பனை நிலையங்கள் தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 4.3 வரவு செலவுத் திட்டக் கட்டுப்பாடு

2011ஆம் ஆண்டில் நிலவிய வணிக மற்றும் பொருளாதார நிலைமைகள் காரணமாக திட்டமிடப்பட்ட வருமானங்களுக்கும் உண்மையான வருமானங்களுக்கும் இடையில் வேறுபாடுகள் காணப்பட்டன. எனினும், மாதாந்த கணக்கீட்டு அறிக்கைகள் திட்டமிடப்பட்ட வருமானங்கள் மற்றும் உண்மையான வருமானங்கள் பற்றிய பகுப்பாய்வொன்றை நடத்தி வேறுபாடுகளுக்கான காரணங்களைப் பரிசீலித்த பின்னர் பரிகார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.



தலைவர்

இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்

***இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்***
***மனிதவளப் பகுப்பாய்வு***















**இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்**
**பத்தாண்டுச் சுருக்கம்**

| விபரம் | 2012 ரூ.'000' | 2011 ரூ.'000' | 2010 ரூ.'000' | 2009 ரூ.'000' | 2008 ரூ.'000' | 2007 ரூ.'000' | 2006 ரூ.'000' | 2005 ரூ.'000' | 2004 ரூ.'000' | 2003 ரூ.'000' |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| விற்பனைவரவு - SPC | 5,001,673 | 4,806,170 | 4,197,759 | 4,015,962 | 3,547,367 | 3,092,189 | 2,923,148 | 2,666,453 | 2,717,888 | 2,455,950 |
| விற்பனைவரவு - DHS | 16,608,492 | 12,569,290 | 10,968,571 | 9,990,429 | 9,306,330 | 8,815,971 | 5,616,899 | 5,360,046 | 4,067,138 | 4,770,693 |
| **மொத்த விற்பனைவரவு** | **21,610,165** | **17,375,460** | **15,166,330** | **14,006,391** | **12,853,697** | **11,908,160** | **8,540,047** | **8,026,499** | **6,785,026** | **7,226,643** |
| மொத்த வியாபார இலாபம் - SPC | 991,541 | 1,043,453 | 995,371 | 894,232 | 822,024 | 699,794 | 682,256 | 576,728 | 455,574 | 354,216 |
| மொத்த மிகை - DHS | 1,193,214 | 780,735 | 688,145 | 622,071 | 576,308 | 578,091 | 389,533 | 407,187 | 281,257 | 405,943 |
| **மொத்த மிகை** | **2,184,755** | **1,824,188** | **1,683,516** | **1,516,303** | **1,398,332** | **1,277,885** | **1,071,789** | **983,915** | **736,831** | **760,159** |
| பிற வருமானம் | 15,105 | 23,231 | 20,414 | 18,107 | 22,638 | 14,177 | 10,025 | 12,264 | 5,807 | 10,381 |
| நிர்வாகச் செலவுகள் | (654,910) | (614,019) | (605,475) | (573,322) | (535,428) | (483,452) | (434,075) | (348,910) | (295,837) | (242,214) |
| ஏனைய செயற்பாட்டுச் செலவுகள் | (745,230) | (492,631) | (285,777) | (203,520) | (218,987) | (111,390) | (56,397) | (92,470) | (36,099) | (81,463) |
| அறவிடமுடியாத சேவைக் கட்டணம் | | | | | | | (78,638) | | | |
| **தொழிற்பாட்டு இலாபம்** | **799,720** | **740,769** | **812,678** | **757,568** | **666,555** | **697,220** | **512,704** | **554,799** | **410,702** | **446,863** |
| நிதிக் கிரயம் | (17) | (3,661) | (17,734) | (8,841) | (7,982) | (7,480) | (6,397) | (5,390) | (5,893) | (6,526) |
| மேலதிகப்பற்று வட்டி | (339,035) | (419,235) | (315,070) | (350,841) | (212,285) | (273,273) | (121,876) | (119,311) | (57,851) | (110,454) |
| **மொத்த மேந்தலைகள்** | **(1,739,192)** | **(1,529,546)** | **(1,224,056)** | **(1,136,524)** | **(974,682)** | **(875,595)** | **(618,745)** | **(566,081)** | **(395,680)** | **(440,657)** |
| நிதி வருமானம் | 3,944 | 4,102 | 3,900 | 3,302 | 2,856 | 2,127 | 1,432 | 1,285 | 1,385 | 1,287 |
| **வரிக்கு முந்திய இலாபம்** | **464,612** | **321,975** | **483,774** | **401,188** | **449,144** | **418,594** | **385,863** | **431,383** | **348,343** | **331,170** |
| வரிவிதிப்பு | 205,282 | 228,473 | 243,907 | 144,883 | 209,487 | 232,013 | 206,427 | 218,168 | 165,000 | 160,000 |
| அதிவிசேட இனங்கள் | | | | | | | (25) | | | |
| **காலத்திற்கான தேறிய இலாபம்** | **259,330** | **93,502** | **239,867** | **256,305** | **239,657** | **186,581** | **179,411** | **213,215** | **183,343** | **171,170** |
| திறைசேரி வரி | | (15,000) | (60,000) | (25,000) | (25,000) | | | | | |
| வரையறுத்த நன்மைத்திட்டம் | (14,281) | 11,325 | | | | | | | | |
| **மொத்த விரிவான இலாபம்** | **245,049** | **89,827** | **179,867** | **231,305** | **214,657** | **186,581** | **179,411** | **213,215** | **183,343** | **171,170** |
| **பங்களித்த மூலதனம், ஒதுக்கம்** | **3,747,656** | **3,502,607** | **3,412,780** | **2,418,452** | **2,217,690** | **1,960,458** | **1,744,855** | **1,591,225** | **1,136,262** | **929,838** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | | | | | | |
| முதலீடுகள் - SPC | 1,079,939 | 887,456 | 874,018 | 652,167 | 833,303 | 726,578 | 603,455 | 486,592 | 418,393 | 420,418 |
| இடைப்போக்கிலுள்ள பண்டங்கள்- DHS | 734,963 | 1,985,991 | 2,755,465 | 1,105,247 | 1,780,891 | 710,240 | | | | |
| இடைப்போக்கிலுள்ள பண்டங்கள்-SPC | 151,918 | 100,277 | 105,297 | 125,515 | 170,905 | 23,596 | 57127 | 31776 | 34472 | 18608 |
| வர்த்தக, பிற வருமதிகள் | 11,062,837 | 5,123,702 | 3,453,354 | 2,139,755 | 2,036,168 | 1,991,061 | 2,764,958 | 2,586,782 | 1,681,518 | 2,444,615 |
| வைப்புகள், முற்கொடுப்பனவுகள் | 23,579 | 24,479 | 22,369 | 11,564 | 12,367 | 6,928 | 7,512 | 8,341 | 7,613 | 16,485 |
| கையிலும் வங்கியிலும் உள்ள காசு | 216,359 | 600,807 | 671,104 | 263,769 | 250,660 | 480,787 | 192,511 | 349,191 | 145,023 | 73,082 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | **13,269,595** | **8,722,712** | **7,881,607** | **4,298,017** | **5,084,294** | **3,939,190** | **3,625,563** | **3,462,682** | **2,287,019** | **2,973,208** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | | | | | | | |
| வர்த்தக, பிற சென்மதிகள் | 3,016,959 | 1,784,156 | 1,551,401 | 739,514 | 544,979 | 645,448 | 667,851 | 456,014 | 383,839 | 647,897 |
| செலுத்தவேண்டிய வருமான வரி | 191,440 | 219,332 | 232,469 | 200,169 | 225,239 | 252,090 | 211,415 | 163,569 | 119,958 | 131,363 |
| பிற்போடப்பட்ட வருமானம் | 1,292 | 318 | 1,559 | | | | | | | |
| நடப்பு நிதிப்பொறுப்புகள் | 7,896,709 | 4,716,655 | 4,131,544 | 1,458,538 | 2,596,234 | 1,588,509 | 1,476,648 | 1,756,156 | 844,561 | 1,467,289 |
| **மொத்த நடப்புப் பொறுப்புகள்** | **11,106,400** | **6,720,461** | **5,916,973** | **2,398,221** | **3,366,452** | **2,486,047** | **2,355,914** | **2,375,739** | **1,348,358** | **2,246,549** |
| நடைமுறையிலற்ற சொத்துக்கள் | 1,709,018 | 1,605,438 | 1,561,496 | 639,231 | 595,014 | 593,907 | 554,604 | 556,363 | 247,424 | 234,417 |
| நடைமுறையிலற்ற பொறுப்புக்கள் | 124,558 | 105,082 | 113,350 | 120,575 | 95,166 | 86,592 | 79,398 | 52,081 | 49,823 | 31,238 |
| **தேறிய சொத்துக்கள்** | **3,747,655** | **3,502,607** | **3,412,780** | **2,418,452** | **2,217,690** | **1,960,458** | **1,744,855** | **1,591,225** | **1,136,262** | **929,838** |
| **விகிதங்கள்** | | | | | | | | | | |
| **மொத்த இலாப வீதம் - SPC ( % )** | 19.8 | 21.7 | 23.7 | 22.3 | 23.2 | 22.6 | 23.3 | 21.6 | 16.8 | 14.4 |
| **மொத்த இலாப வீதம் - DHS ( % )** | 7.2 | 6.2 | 6.3 | 6.2 | 6.2 | 6.6 | 6.9 | 7.6 | 6.9 | 8.5 |
| விற்பனைக்கு மொத்தமிகை வீதம் (%) | 10.1 | 10.5 | 11.1 | 10.8 | 10.9 | 10.7 | 12.6 | 12.3 | 10.9 | 10.5 |
| சொத்துப் புரள்வு (மடங்குகள்) | 1:1.4 | 1:1.7 | 1:1.6 | 1:2.8 | 1:2.2 | 1:2.6 | 1:2.0 | 1:2.0 | 1:2.6 | 1:2.2 |
| வருடாந்த விற்பனை வளர்ச்சி (%) | 24.37 | 14.57 | 8.28 | 8.97 | 7.94 | 39.44 | 6.40 | 18.30 | -6.11 | 7.19 |
| நடப்பு விகிதம் (மடங்குகள்) | 1.19:1 | 1.31:1 | 1.33:1 | 1.79:1 | 1.51:1 | 1.58:1 | 1.54:1 | 1.46:1 | 1.7:1 | 1.32:1 |
| திரவ விகிதம் (மடங்குகள்) | 1.02:1 | 0.86:1 | 0.7:1 | 1:1 | 0.68:1 | 0.99:1 | 1.26:1 | 1.24:1 | 1.36:1 | 1.13:1 |
| வட்டிக் காப்பு (மடங்குகள்) | 2.4 | 1.8 | 2.4 | 2.1 | 3.0 | 2.5 | 4.0 | 4.4 | 6.4 | 3.8 |
| இருப்பு புரள்வு விகிதம் (மடங்குகள்) SPC | 3.57 | 3.83 | 2.4 | 3.5 | 3.11 | 3.39 | 3.92 | 4.45 | 5.07 | 5.11 |

# விற்பனை வலையமைப்பு

## தலைமை அலுவலகம்

இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்
75, சேர் பாறன் ஜயதிலக மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி: 2320356 – 9 தொலைநகல்: 2447118
இணையத்தளம்: www.spc.lk மின்னஞ்சல்: spc@spc.lk

**விற்பனைப் பிரிவு**
109 கந்தவல எஸ்ரேட்,
இரத்மலானை.
தொலைபேசி: 2632288
தொலைநகல்: 2632962

**களஞ்சியம்**
109 கந்தவல எஸ்ரேட்,
இரத்மலானை.
தொலைபேசி: 2634318
தொலைநகல்: 2636715

**ஓ.ஆர்.எஸ். பிரிவு**
109 கந்தவல எஸ்ரேட்,.
இரத்மலானை.
தொலைபேசி: 2622334

**கண்டி களஞ்சியம்**
10/பி/1, ஹேவஹெட்ட வீதி,
தென்னக்கும்புர
கண்டி
தொலைபேசி: 081-2240274

## அரச ஒசுசலக்கள்

**ஒசுசல – கொழும்பு 7**
255, தர்மபால மாவத்தை,
கொழும்பு 07.
தொலைபேசி: 2694716
2672293

**ஒசுசல – நுகேகொட**
145 ஏ/1, எஸ்.டி.எஸ். ஜயசிங்க
மாவத்தை, நுகேகொட.
தொலைபேசி: 2856641

**ஒசுசல – பாணந்துறை**
159, MPCS கட்டடம்,
காலி வீதி, பாணந்துறை.
தொலைபேசி: 038-2234767

**ஒசுசல – பதுளை**
CWE கட்டடம்,
பண்டாரவளை வீதி,
பதுளை.
தொலைபேசி: 055–2229837

**ஒசுசல – கொழும்பு 4**
85, காலி வீதி,
கொழும்பு 04.
தொலைபேசி: 2587128

**ஒசுசல–ஹம்பாந்தோட்டை**
இல.3, பரக்கா தெரு,
ஹம்பாந்தோட்டை.
தொலைபேசி: 047-2222163

**ஒசுசல – அம்பாறை**
3, நியு சிற்றி மஹால்,
டி.எஸ்.சேனாநாயக்க மாவத்தை,
அம்பாறை.
தொலைபேசி: 063-2223088

**ஒசுசல – மாத்தறை**
23பி, சரிக்காராமய,
அனகாரிக தர்மபால மாவத்தை,
மாத்தறை.
தொலைபேசி: 041-2231871

**ஒசுசல – கொழும்பு 1**
79, சேர் பாறன் ஜயதிலக
மாவத்தை,
கொழும்பு 01.
தொலைபேசி: 2328046

**ஒசுசல – அவிசாவளை**
G 33/34/35
மத்திய பஸ் நிலையம்,
அவிசாவளை.
தொலைபேசி: 036-2222501

**ஒசுசல – காலி**
61ஏ, வக்வெல்ல வீதி, காலி.
தொலைபேசி: 091-2234726

**ஒசுசல – கண்டி**
14ஏ, லமாகார மாவத்தை,
கண்டி.
தொலைபேசி: 081-225175

**ஒசுசல – இரத்தினபுரி**
32, நந்த எல்லாவல
மாவத்தை,
இரத்தினபுரி.
தொலைபேசி: 045-2223014

**ஒசுசல – மினுவங்கொட**
24, பழைய நகர மண்டப கட்.
கொழும்பு வீதி,
மினுவங்கொட.
தொலைபேசி: 2295120

**ஒசுசல – மீகொட**
பொருளாதார மையம்,
மீகொட.
தொலைபேசி: 2831920

**ஒசுசல – குருணாகல்**
28, வீரதுங்க கட்டடம்,
பௌத்தாலோக மாவத்தை,
குருணாகல்.
தொலைபேசி: 037-2230840

**ஒசுசல – அனுராதபுரம்**
வங்கித் தெரு,
அனுராதபுரம்.
தொலைபேசி: 025-2222181

**ஒசுசல – மஹரகம**
இல.71/9, அல்விஸ் கட்டிடம்,
பழைய வீதி, மஹரகம.
தொலைபேசி: 2745640

**ஒசுசல – ஜயவர்தனபுர**
ஸ்ரீ ஜயவர்தனபுர பொது
வைத்தியசாலை,
ஸ்ரீ ஜயவர்தனபுர.
தொலைபேசி: 2779414

**ஒசுசல – கராப்பிட்டிய**
132, புற்றுநோய் ஆஸ்பத்திரி வீதி,
மைற்றிபே, 1ஆம் ஒழுங்கை,
கராப்பிட்டிய
தொலைபேசி: 091-2226947

**ஒசுசல – தியத்தலாவ**
பிரதான வீதி,
தியத்தலாவ.
தொலைபேசி: 055-3551624

**ஒசுசல – நீர்கொழும்பு**
134, கொழும்பு வீதி,
நீர்கொழும்பு.
தொலைபேசி: 031 2228599

**ஒசுசல – யாழ்ப்பாணம்**
149ஏ, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-2219262

**ஒசுசல – பொலனறுவை**
வைத்தியசாலைச் சந்தி,
கதுறுவெல வீதி,
பொலனறுவை.
தொலைபேசி: 027-2225465

**ஒசுசல – தங்காலை**
8, இந்திபொக்குனுகொட வீதி,
தங்காலை.
தொலைபேசி: 047-2241221

**ஒசுசல – ராகம**
61ஏ, மஹபாகே வீதி,
ராகம.
தொலைபேசி: 2955219

## சந்தைப்படுத்தல், விற்பனைகள் பிரிவு

75, சேர் பாறன் ஜயதிலக மாவத்தை, கொழும்பு 01. தொலைபேசி: 2430778, 2328507, 2320356-9